REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஏப்ரல் 19 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022
வரு. 90 இல. 90 | Tuesday 19, April, 2022 | 16 பக்கங்கள் | 30/-




# டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட் உட்பட புதிய அமைச்சர்களாக 17 பேர் நேற்று நியமனம்

## ஊடகத்துறை அமைச்சராக நாலக கொடஹேவா சத்தியப்பிரமாணம்





**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று 17 பேர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்பு வகித்த கடற்றொழில் அபிவிருத்தி அமைச்சராக புதிய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளதுடன் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் சுற்றாடல் அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அத்துடன் ஊடகத்துறை அமைச்சராக நாலக கொடஹேவா சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் நடைபெற்ற விசேட நிகழ்வின் போதே மேற்படி 17 அமைச்சர்களும் ஜனாதிபதி முன்னிலையில் புதிய அமைச்சர்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அமைச்சர்களான பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ், அலி சப்ரி, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் ஏற்கனவே ஜனாதிபதியின் முன்னிலையில் புதிய அமைச்சர்களாக

06

# அரசியலமைப்பை திருத்த பிரதமரின் முன்மொழிவு

## அமைச்சரவையில் சமர்ப்பிக்கவும் தீர்மானம்



மக்களுக்கு பொறுப்புக் கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு, அது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளதாக பிரதமரின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்க சபை போன்றே நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய அரசியலமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்பார்த்துள்ளதாகவும் அத்திருத்தப்பட்ட அரசியலமைப்பினூடாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்பது பிரதமரின் எதிர்பார்ப்பாகும் எனவும் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# தற்போதைய சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து விலக மாட்டேன்

## அவசியமான ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு எதிர்கொண்டுள்ள சவால்கள் மற்றும் சிரமங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பிலிருந்து விலகப் போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது வருத்தத்தை தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி, மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் குழுவொன்று உருவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் அரசியல் காரணங்களால் பல தசாப்தங்களாக தாமதமாகி வரும் சில தீர்மானங்கள் அவை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் புதிய அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

06

# ஐந்து தினங்களுக்குப் பின்னர் வழமை நிலைக்கு திரும்பிய Gas விநியோக நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதுவருட விடுமுறையை முன்னிட்டு கடந்த ஐந்து தினங்களாக மூடப்பட்டிருந்த லிற்றோ கேஸ் நிறுவனம் நேற்று முதல் மீண்டும் சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

அதேவேளை, சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் தொடர்பில் லிற்றோ கேஸ் நிறுவனத்தின் உயரதிகாரிகள் மற்றும் தனியார் எரிபொருள்

06

# எரிபொருள் விநியோகம் நேற்று முதல் வழமைக்கு!

## தட்டுப்பாடு இனி இருக்காது என்கிறது CPC

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் நேற்று முதல் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளதாகவும்

06

## முன்னாள் நிதியமைச்சர் பசிலின்

# வெளிநாட்டு பயணத்தை தடை செய்ய கோரிய மனு

## நீதிமன்றத்தால் நேற்று நிராகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மத்திய வங்கி பிணை முறி சம்பவம் தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணத்தை தடைசெய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த

06







# மக்களின் போராட்டத்தை கண்டுகொள்ளாத அரசு!

## CWC தலைவர் செந்தில் கவலை



மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தெரியவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள அத்தனை பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளாரென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான்

06

# அஜித் கப்ராலின் பயணத்தடை நீடிப்பு

## மே 02 நீதிமன்றில் ஆஜராக உத்தரவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை மே 2 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

06

## சுரேன், காதர், அரவிந்தகுமார் உட்பட

# இராஜாங்க அமைச்சர்களாக 21 பேர் நேற்று சத்தியப்பிரமாணம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய இராஜாங்க அமைச்சர்கள் 21பேர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கல்விச்

06




## அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை:

# சபாநாயகரிடம் 20ஆம் திகதி கையளிக்க SJB தீர்மானம்





ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவர இருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆகியவற்றை நாளை 20ஆம் திகதி சபாநாயகருக்கு கையளிக்க தீர்மானித்திருக்கின்றது.

புத்தாண்டு விடுமுறைக்கு சொந்த இடங்களுக்கு சென்றிருக்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு திரும்பியதும் அவர்களது

06

# சீனாவில் மீண்டும் கொரோனா தாக்கம்

## ஷங்காய் நகரில் மூவர் பலி




சீனாவில் கொரோனா பரவல் மீண்டும் தலைத்தூக்கியுள்ளது. சீனாவின் ஷங்காய் நகரில் கொரோனா பரவல் உச்ச நிலையை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்கு நாளாந்தம் 20,000 வரையான தொற்றாளர்கள் பதிவாகி வரும் நிலையில், பரவலைக் கட்டுப்படுத்த அந்நாட்டு அரசாங்கம் முழு ஊரடங்கை அறிவித்துள்ளது. அதில் ஒரு முயற்சியாக,

06

# அமெரிக்க டொலரின் விற்பனை விலை ரூபா 340 ஆனது



பல அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை நேற்று மேலும் அதிகரித்து காணப்பட்டது. அதனடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றை நேற்றைய தினம் 340 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம்




புதிய அமைச்சரவை அமைச்சர்கள் 17 பேர் நேற்று முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

01. தினேஷ் குணவர்தன – பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
02. டக்ளஸ் தேவானந்தா – கடற்றொழில் அமைச்சு
03. ரமேஷ் பத்திரன – கல்வி, பெருந்தோட்டக் கைத்தொழில்
04. பிரசன்ன ரணதுங்க – பொதுமக்கள் பாதுகாப்பு, சுற்றுலா
05. திலும் அமுனுகம – போக்குவரத்து, கைத்தொழில்
06. கனக ஹேரத் – நெடுஞ்சாலைகள்
07. விதுர விக்கிரமநாயக்க – தொழில் அமைச்சு
08. ஜானக வக்கும்புர – விவசாயம், நீர்ப்பாசனம்
09. ஷெஹான் சேமசிங்க – வர்த்தகம், சமுர்த்தி அபிவிருத்தி
10. மொஹான் பிரியதர்ஷன டி சில்வா – நீர் வழங்கல்
11. விமலவீர திஸாநாயக்க – வனவிலங்கு மற்றும் வன வளப் பாதுகாப்பு
12. காஞ்சன விஜேசேகர – வலுசக்தி, மின்சக்தி
13. தேனுக விதானகமகே – இளைஞர் மற்றும் விளையாட்டு
14. நாலக கொடஹேவா – வெகுசன ஊடக அமைச்சு
15. சன்ன ஜெயசுமன – சுகாதாரம்
16. நசீர் அஹமட் – சுற்றுச்சூழல்
17. பிரமித பண்டார தென்னகோன் – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை














# பாடசாலைச் சிறார்களின் கல்வித் தேவைக்கு கைகொடுக்கும் Study Buddy-அபான்ஸ் நன பஹான (ஞான தீபம்) திட்டம்

## சுயாதீன தொலைக்காட்சி அனுசரணை

எமது நாட்டு சிறார்களின் கல்வித் தேவைகளுக்காக அபான்ஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள *Study Buddy* – அபான்ஸ் நன பஹான (ஞான தீபம்) வேலைத்திட்டம் சுயாதீன தொலைக்காட்சியின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

க.பொ.த சாதாரண தர சிறார்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள 9 பாடத்திட்டங்களை உள்ளடக்கிய *Study Buddy* –அபான்ஸ் நன பஹான (ஞான தீபம்) வேலைத்திட்டம் சமூக சேவைப் பணியாக மேற்கொள்ளப்படுகிறது. இந்த சமூக சேவைப் பணியின் முதற்கட்டத்தில் 80 அபான்ஸ் காட்சியறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை அம்பாறை, பதுளை, திஸ்ஸமகாராமை, கல்கமுவை, அனுராதபுரம், இப்பாகமுவை, மெல்சிரிபுற, தம்புத்தேகமை, மஹாவை, ஜாஎல, உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள அபான்ஸ் காட்சியறைகளாகும்.

அபான்ஸ் காட்சியறைகள் மூலம் *Study Buddy* பெக்கேஜ்களை அன்பளிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அனுராதபுரம், மரதன்கடவளை வித்தியாலயத்தில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்வின் போது *Study Buddy* பேக்கேஜ்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இந்த சமூக சேவைப் பணியின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




*S tudy Buddy Offline* பெக்கேஜ் மூலம் மேற்கொள்ளப்படுவது க.பொ.த சாதாரண தரத்தின் முழு பாடத்திட்டத்தையும் 64 GB SD கார்ட் மூலம் சிறார்களுக்கு வழங்குவதாகும். இதனை 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு 2 பெக்கேஜ்களாக தனித்தனியாக பெற்றுக் கொள்ள முடியும். அரச பாடசாலைகளின் முன்னணி ஆசிரியர்களால் 9 பாடத்திட்டங்களை கற்பிக்கும் 2500 இற்கும் அதிகமான வீடியோக்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

மேலும், இதில் 3 வருட திருத்தப் பாடமும் (Revision) உள்ளடக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெக்கேஜ் உடனும் மாதிரி வினாக்கள் 2500 இற்கு மேலான (MCQ) பயிற்சிப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும். அத்தோடு 5ஆம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு *Study Buddy* தமிழ்மொழியில் 32 GB SD கார்ட் அட்டை ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.




இது குறித்து கருத்துத் தெரிவித்த அபான்ஸ் வணிகக் குழுமத்தின் தலைவி திருமதி அபான் பெஸ்டோன்ஜி, கொவிட்19 தொற்று காரணமாக குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார். எனவே கல்வி நடவடிக்கைகளை சீராக தொடர்வதற்கு இதுபோன்ற தொழில் நுட்பக் கருவிகளே மிகச் சிறந்த தீர்வுகளாகும். இவ்வாறான கருவிகளை பயன்படுத்துவதில் மகிழ்ச்சி அடைவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு சமூகங்களை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட சமூக சேவை பணியாக அபான்ஸ் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகிறது. கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கான தடைகளை நீக்குதல் மற்றும் பாடங்களை வெற்றிகரமாக நடத்தக்கூடிய *Study Budy* கல்விப் பொதிகள், நவீன உலகின் கல்வி முறைகளை உள்நாட்டு சிறார்களுக்கு வழங்குவதே சிறந்த தீர்வாகும்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 19 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
19முதல் 24 வரை
சுபஹ் - 04.44
ளுஹர் - 12.11
அஸர் - 03.21
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 6
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திரிதியை



# திட்டமிட்டு நாட்டை சீர்குலைக்க அமைப்பொன்று தீவிர முயற்சி

## அரசாங்க ஆதரவு சட்டத்தரணிகள் பிரதமரிடம் தெரிவிப்பு



ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்கள் மக்களை ஈடுபடுத்தி அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமரை நீக்கி அவர்களது குறுகிய இலக்குகளை அடைவதற்கு முயற்சிப்பதாகவும், எனவே, இந்த நெருக்கடியை மிகுந்த புரிதலுடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, ஜனாதிபதியும் பிரதமரும் துணிச்சலுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அரசாங்கத்திற்கு ஆதரவான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கு ஆதரவான சட்டத்தரணிகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (18) அலரி மாளிகையில் நடைபெற்றது. இது குறித்து பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசாங்கத்திற்கு ஆதரவான சட்டத்தரணிகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

நாட்டில் இதுவரையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதக நிலைமைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அரசியலமைப்பிற்கமைய ஜனாதிபதியை நீக்குவதானது ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவது போன்று செய்வதற்கு முடியாததொரு விடயமாகும் என்றும் அரசியலமைப்பு தொடர்பில் தெளிவான புரிதல் இன்றி, தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாக

06



## மறுமையில் சிபாரிசுக்காக தயாராவோம்

உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனதும் ஈருலக வாழ்வின் விமோசனத்துக்கும் சுபீட்சத்துக்கும் நேர்வழிகாட்டக்கூடிய இறைவழிகாட்டலான அல் குர்ஆன் அருளப்பட ஆரம்பமான மாதமே ரமழான் ஆகும். இது உலகலாவிய அருள் மறையாகும். இந்த அருள் மறை அருளப்பட ஆரம்பமானதன் ஊடாக இம்மாதம் மகத்துவம் பெற்று விளங்குகிறது. அத்தோடு இம்மாதத்தில் நோன்பு நோற்கப்படுவதை அல்லாஹ் கட்டாயக் கடமையாக்கி வைத்திருக்கின்றான்.

அதனால் ஒவ்வொரு இறை விசுவாசியும் இம்மாதத்தில் நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபடுவது அவசியம். குறிப்பாக ஈருலகிலும் சுபீட்சம் பெற்றுக்கொள்வதற்கு அல்லாஹ் வகுத்தளித்திருக்கும் இந்த அருள் மறையை ஓதுவோம், அதனை விளங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம். அதன்படி வாழ்வை அமைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவோம். இந்நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான காலமாக இந்த ரமழானை அமைத்துக் கொள்வோம்.

இந்த அல் குர்ஆனும் ரமழானும் நோன்பும் மறுமை நாளில் அடியானுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யக்கூடியனவாக உள்ளன.

இதனை நபி (ஸல்) அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டு வைத்திருக்கின்றார்கள். 'அல் குர்ஆனும் நோன்பும் அடியானுக்காகப் பரிநதுரை செய்யும். நோன்பு கூறும் இறைவா! நான் இவரை பகலில் உணவிலிருந்தும் தாகம் தீர்ப்பதிலிருந்தும் தடுத்து வைத்திருந்தேன். ஆகவே அவருக்கான எனது பரிந்துரையை ஏற்றுக்கொள்வாயாக! என்று கோரும். அல் குர்ஆன் கூறும், நான் இவரை இரவில் தூக்கத்திலிருந்து தடுத்து வைத்திருந்தேன். ஆகவே அவருக்கான எனது பரிந்துரையை ஏற்றுக் கொள்வாயாக! என்று கோரும். இவ்விரு பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: அஹ்மத்)

ஆகவே மறுமையில் அல் குர்ஆனினதும் நோன்பினதும் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப இக் காலத்தை அமைத்துக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...







புதிய இராஜாங்க அமைச்சர்களாக சுரேன் ராகவன், காதர் மஸ்தான், அரவிந்த குமார் ஆகியோர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். சுரேன் ராகவன் கல்விச் சேவை மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராகவும் காதர் மஸ்தான் கிராமிய பொருளாதார பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் ஏ.அரவிந்தகுமார் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராகவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர். (ஸ)

நெருக்கடிகளுக்கு தீர்வுகாணும் வகையில் :

# 19+ உள்ளடக்கிய திருத்தத்தை கொண்டுவருவதே சிறந்தது

## நிருவாக சேவை சங்கம் அரசுக்கு ஆலோசனை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு விரைவான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசியலமைப்பின் 19வது திருத்தத்திற்கு அப்பால் 19+ உள்ளடக்கப்பட்டு 21 ஆவது திருத்தத்தை விரைவாக கொண்டுவருவது அவசியம் என இலங்கை நிருவாக சேவை சங்கம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அரசியலமைப்பு சபையை மீண்டும் புத்துயிர்க்கச் செய்வது, ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் நபராக விளங்கவேண்டியது, சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பளிக்கும் ஜனாதிபதியிடமுள்ள அதிகாரத்தை இல்லாமல் செய்வது, ஜனாதிபதியின் ஆளணி எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது மற்றும் அமைச்சின் செயலாளர்களை நியமிப்பதை முறைப்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியதாக அந்தத் திருத்தம் அமையவேண்டுமென மேற்படி சங்கம் கேட்டுக்கொண்டுள்ளதுடன் அதுதொடர்பான யோசனைகளையும் அந்த சங்கம் அரசாங்கத்திற்கும் நாட்டு மக்களுக்கும் முன்வைத்துள்ளது.

இலங்கை நிருவாக சேவை சங்கத்தின் தலைவர் ரோஹண டி சில்வா உள்ளிட்ட சங்கத்தின் முக்கியஸ்தர்கள் இந்த ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். (ஸ)

எரிபொருள் விலை உயர்வு:

# ஆகக் குறைந்த கட்டணத்தை ரூ. 40ஆக அதிகரிக்க நேரிடும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



எரிபொருள் விலை அதிகரிப்பு உள்ளிட்ட செலவினங்கள் காரணமாக ஆகக் குறைந்த பஸ் கட்டணத்தை 40 ரூபாவாக அதிகரிக்க நேரும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார். அதற்கிணங்க அனைத்து பஸ் கட்டணங்களும் 50 வீதத்தால் அதிகரிக்க நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்படும் வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தின் போது கட்டணங்களை இவ்வாறு அதிகரிக்க நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐஓசி எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மாத்திரம் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தாலும் நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை மற்றும் சில பிரதேசங்களில் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இல்லாத காரணத்தினாலும் அதிக விலைக்கு டீசலைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும்தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தற்போதைக்கு பஸ் கட்டணத்தில் திருத்தமொன்றை எதிர்பார்க்கவில்லையென்றும் எனினும் ஜூலை

06

# லங்கா IOC நிறுவனம்: எரிபொருள் விலையை மீண்டும் அதிகரித்தது

எரிபொருட்களின் விலைகள் நேற்று முன்தினம் (17) நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளதாக லங்கா IOC நிறுவனம் அறிவித்துள்ளது.

சகல வகையான பெற்றோலின் விலைகளும் லீற்றருக்கு 35 ரூபாவினாலும் டீசலின் விலை 75 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக IOC நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, IOC நிறுவனத்தில் ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெற்றோல் புதிய விலை 338 ரூபா ஆகும் ; 95 ஒக்டேன் பெற்றோல் புதிய விலை 367 ரூபா ஆகும். யூரோ 3 பெற்றோல் விலை 347 ரூபா ஆகும்.

06

உணவு நெருக்கடியை நிவர்த்திக்க:

# 05 செல்வந்த நாடுகளுடன் ரணில் பேச்சுவார்த்தை

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டில் நிலவும் உணவு நெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க ஐந்து செல்வந்த நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அதற்கிணங்க அவர், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இங்கிலாந்து, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு எதிர்காலத்தில் மேலும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிவரும் என மேற்படி நாடுகள் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளன.

அந்த வகையில் இலங்கைக்கு எவ்வாறு உதவமுடியுமென தற்போது ஆராய்ந்து வருவதாகவும் அந்த நாடுகள் முன்னாள் பிரதமரிடம் தெரிவித்துள்ளன. அதேவேளை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடொன்றை எட்டுமானால் இலங்கைக்கு இலகுவாக உதவ முடியும் என்றும் அந்த ஐந்து நாடுகளினதும் பிரதிநிதிகள் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளனர். (ஸ)

# 120,000 மெ.தொன் நிலக்கரி துறைமுகத்தில் தேக்கம்!

## அனல் மின் உற்பத்திக்கு பாதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

டொலர் தட்டுப்பாடு காரணமாக துறைமுகத்தில் இரண்டு கப்பல்களில் நிலக்கரி தேங்கியுள்ளதாகவும் அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளப்படாவிட்டால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் என மின்சார சபை தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

டொலர் வழங்கி விடுவிக்காமை காரணமாக கொழும்பு துறைமுகத்தில் இரண்டு கப்பல்களில் 120,000 மெட்ரிக் தொன் நிலக்கரி தேங்கிக் கிடைப்பதாகவும் கப்பலில் இருந்து நிலக்கரி விடுவிக்காமை காரணமாக அந்தக் கப்பல்கள் மீண்டும் திரும்பிச் செல்லும் எச்சரிக்கை நிலை உருவாகியுள்ளதாகவும் மின்சார சபை தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இம்மாதம் 12ம் திகதி மேற்படி இரண்டு கப்பல்களும் துறைமுகத்தை வந்து சேர்ந்துள்ள நிலையில் அதற்காக 34 மில்லியன் டொலர்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் டொலர் வழங்கப்படாமை காரணமாக நேற்றுடன் 6 நாட்களாக இரண்டு கப்பல்களும் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விரைவாக இந்த நிலக்கரி விடுவிக்கப்படாவிட்டால் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் பாதிப்படையலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ)

# ஆளும் தரப்பின் பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன நியமனம்!

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஆளும் தரப்பின் பிரதான அமைப்பாளராக (பிரதம கொறடா) நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.



புதிய அமைச்சரவை அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. புதிய அமைச்சர்கள் 17 பேர் பதவியேற்ற இந்நிகழ்வில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக பிரசன்ன ரணதுங்க பதவியேற்றிருந்தார். இதற்கு முன்னர், பிரதான அமைப்பாளராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பதவி வகித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 17


## குறள் தரும் சிந்தனை



உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு

அள்ளி வழங்கும் ஆர்வம் இல்லாத ஒருவர் தம்மை வள்ளல் எனப் பெருமைப்பட்டுக் கொள்ள வழியே இல்லை.

# பொருளாதார நெருக்கடி தீர்ப்பதில் புதிய அமைச்சரவையின் பொறுப்பு

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார சவால் ஊடாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் நெருக்கடியின் பின்னணியில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் (03.04.2022) அமைச்சரவை அமைச்சர்கள் தங்களது அமைச்சுப் பதவிகளை இராஜிநாமா செய்தனர்.

நாட்டில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட அரசாங்கத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கொண்டிருந்த போதிலும், இப்பொருளாதார நெருக்கடிக்கு சகல தரப்பினரையும் உள்ளடக்கி தீர்வு தேட வழிவகை செய்யும் வகையிலேயே அமைச்சர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

இந்த நிலையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துக் கட்சிகளுக்கும் உடனடியாக அழைப்பு விடுத்தார். ஜனாதிபதியின் அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி நிராகரித்த போதிலும், பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்து அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக் கொண்டன.

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் வரையும் தற்காலிக ஏற்பாடாக வெளிவிவகார அமைச்சராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸும், நிதியமைச்சராக அலி சப்ரியும், நெடுஞ்சாலைகள் அமைச்சராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும், கல்வி அமைச்சராக தினேஷ் குணவர்தனவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஸ்ரீ.ல.சு.க உள்ளிட்ட கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வந்தன. இந்தச் சூழலில் குருநாகல் மாவட்ட ஸ்ரீ.ல.பொ. பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார கடந்த 12 ஆம் திகதி இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். இவர் ஸ்ரீ.ல.பொ.பெரமுன பாராளுமன்ற உறுப்பினரான போதிலும் ஸ்ரீ.ல.சு.கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராவார். கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீ.பொ. பெரமுனவுடன் ஸ்ரீ.ல.சு.கட்சி கூட்டிணைந்து போட்டியிட்டமை தெரிந்ததே.

தமது கட்சி எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு மாற்றமாக சாந்த பண்டார எம்.பி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து ஸ்ரீ .ல.சு.கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஜனாதிபதியுடன் முன்னெடுத்த இடைக்கால அரசாங்கம் குறித்த பேச்சுவார்ததையை இடைநிறுத்தியுள்ளன.

தற்போதைய சூழலில் நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு எல்லா தரப்பினரையும் உள்ளடக்கி தீர்வு தேட முயற்சிக்கப்படுகின்ற போதிலும், அதற்கு கடந்த அரசாங்கத்திலிருந்து விலகி நடுநிலை வகிக்கும் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை நல்கத் தவறியுள்ளன. இதன் விளைவாக இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிகளும் சாத்தியமாகாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடிகளும் அசௌகரியங்களும் நீடித்த வண்ணமே உள்ளன.

ஜனநாயக நாடொன்றில் அமைச்சரவை இன்றி இரு வாரங்களுக்கும் மேலாக நாடு செல்வது ஆரோக்கியமானதல்ல. அது நாட்டில் ஸ்திரமற்ற நிலைக்கும் வழிவகுத்து விட முடியும். இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அமைச்சரவை இன்றி நாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது ஜனநாயக விழுமியங்களுக்கும் நல்லதல்ல எனக் கருதி மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி இருபது பேர் கொண்ட அமைச்சரவையை நியமித்துள்ளார். பெரும்பாலான புதிய முகங்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள இந்த அமைச்சரவை ஜனாதிபதி முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டது. இந்த அமைச்சரவையில் ஏற்கனவே அமைச்சுப் பதவி வகித்த பலருக்கு இடமளிக்கப்படவில்லை.

நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நியமிக்கப்பட்டுள்ள புதிய அமைச்சரவை பாரிய பொறுப்பை தன்னகத்தே கொண்டுள்ளது. அப்பொறுப்பு உரிய ஒழுங்கில் நிறைவேற்றப்படும் போது நாடு எதிர்கொண்டுள்ள இப்பொருளாதார நெருக்கடி பெரும்பாலும் தணிந்து குறைந்து விடும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே ஜனாதிபதியின் எதிர்பார்ப்புக்கு அமைய மக்கள் எதிர்கொண்டுள்ள அசௌகரியங்களை தணித்து தீர்க்கும் வகையிலான வேலைத்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் விரைவாகவும் வேகமாகவும் முன்னெடுக்க வேண்டும். அதன் ஊடாக இந்நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும். அதுவே மக்களின் விருப்பமும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# சத்தியத்தை உறுதிப்படுத்திய பத்ர் களம்

## பத்ர் ஸஹாபாக்களை நினைவுகூருமுகமாக இன்று இக்கட்டுரை பிரசுரமாகிறது

இஸ்லாமிய வரலாற்றில் பத்ர் நிகழ்வு மகத்தான மாற்றத்தையும், புரட்சிகரமான திருப்பத்தையும் ஏற்படுத்தியது. நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஏற்பட்ட பலப்பரீட்சையில், சத்தியத்திற்காகப் போராடியோர் சிறுகுழுவினராக இருந்து கொண்டே தமக்கு எதிராகப் போராடியோரைத் தமது இறைநம்பிக்கையின் வலிமையால் தோற்கடித்தனர்.

பத்ர் நிகழ்ந்த ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, ரமழான் திங்கள், பதினேழாம் நாள் இஸ்லாத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக நோக்கப்படுகிறது. மிகத் திறமை வாய்ந்த 1000 போர் வீரர்களைக் கொண்டிருந்த குறைஷிகளின் அணியை எதிர்கொள்ள, 313 ஸஹாபாத் தோழர்கள் மிகக் குறைந்த ஆயுதபலத்துடன், அன்றைய தினம் நோன்பு நோற்றவர்களாக இருந்தனர்.

முஸ்லிம்களை விட எதிர்ப்படையினர் மூன்று மடங்கு அதிகமாகவே இருந்தனர். எனினும், முஸ்லிம்கள் ஈமானிய பலத்தால் அனைத்தையும் மிகைத்து, அல்லாஹ்வின் உதவியோடு வெற்றிவாகைசூடினர்.

உண்மையில் பத்ர் களத்தில் நின்றவர்கள் நோன்பு நோற்றவர்களாக இருந்தனர். அவர்கள் ஆயுத மற்றும் படைப்பலம் குன்றிய நிலையில் காணப்பட்டனர். எதிரிகள் பலமான போர்வீரர்களுடனும், போர்க் குதிரை, தளபாடங்களுடனும் களம் புகுந்தனர். எதிரிகளின் படையுடன் ஒப்பிடும் போது, இறை நம்பிக்கையாளர்கள் (முஃமின்கள்) மூன்றில் ஒன்றாக குறைந்தே இருந்தனர். ஆனால், அல்லாஹ்வின் அருளில் உறுதியான நம்பிக்கை வைத்த உள்ளங்கள் இறை நாட்டத்தினூடாக இறுதியில் வெற்றிவாகை சூடினர்.

### நபி (ஸல்) அவர்களின் பிரார்த்தனை:

இந்த யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னரான இரவு நபி (ஸல்) அவர்கள், உறங்காது காலை வரையிலும் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். அன்னார் நெஞ்சுருக அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்தனை செய்தார்கள்.

'இறைவா! நீ எனக்கு வாக்களித்ததை நிறைவேற்று. நீ எனக்கு வாக்களித்ததை வழங்கு! இறைவா! இஸ்லாமிய இக்கூட்டம் அழிக்கப்பட்டால் இப்பூமியில் உன்னை வணங்குபவர்கள் (இதன் பின்னர்) எவரும் இருக்க மாட்டார்கள். (ஆதாரம்: ஸஹீஹு முஸ்லிம்)

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்த பின்னர் அல்லாஹ் பின்வரும் வசனத்தை இறக்கி அருளினான்.

'நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத் தேடிய போது (அணி அணியாக) உங்களோடு இணைந்து (அடுத்து) வரக் கூடியவர்களாக மலக்குகளில் ஆயிரம் (பேர்களைக்) கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன் என்று அவன் உங்களுக்கு பதிலளித்தான்.' (அல் குர்ஆன் 08:09)



### யுத்தம் ஆரம்பம்:

நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களை அணிவகுக்கச் செய்து யுத்த தர்மங்களைப் போதித்து, அறிவுறுத்தினார்கள். ஹிஜ்ரி 2ஆம் ஆண்டு, ரமழான் மாதம் பதினேழாம் நாள் காலை பத்ருப் போர் நடைபெற்றது. இங்கு இஸ்லாமியர்கள் நோன்பு நோற்றவர்களாக இறைவனின் உதவியில் முழுமையாக நம்பிக்கை வைத்தவர்களாகக் களத்தில் பிரவேசிக்க எதிரிகள் களியாட்டத்துடன் களம் புகுந்தனர்.

அன்றைய போர் முறைப்படி, எல்லோரும் ஒரே நேரத்தில் களத்தில் புகுவதில்லை. ஆரம்பத்தில் சிலர் மோதிக் கொண்டு, படையின் பலத்தை பரிசீலிப்பர். இதனடிப்படையில் எதிர்படை சார்பாக மூவர் வந்தனர். முஸ்லிம்கள் சார்பாக அன்சாரிகள் மூவரை நபிகளார் அனுப்பிய போது, எங்களுக்கு நிகரான குறைஷிகளை அனுப்புங்கள் என்றனர். அப்போது நபியவர்கள் உபைதா (ரலி), ஹம்ஸா (ரலி), அலி (ரலி) ஆகிய மூவரையும் அனுப்பினார்கள். இவர்கள் மூவரும் எதிர்ப்படை சார்பாக வந்த பின்வரும் மூவருடன் போரிட்டு அவர்களை தோற்கடித்தார்கள். ஹம்ஸா (ரலி) உத்பாவுடனும், உபைதா (ரலி) வலீதுடனும், அலி (ரலி) ஷைபாவுடனும் போரிட்டனர்.

### அல்லாஹ்வின் உதவி:

இப்போரில் கலந்து கொண்டவர்களில் முஸ்லிம் தரப்பினர் குறைவாக இருந்தும், அல்லாஹ் அவர்களுக்கு எதிரணியினரை குறைவாகக் காண்பித்து, முஃமின்களின் தொகையைக் காபிர்களுக்கு அதிகமாகக் காண்பித்தான். (நபியே! உம்முடைய கனவில் அல்லாஹ் (எண்ணிக்கையில்) அவர்களைக் குறைத்துக் காண்பித்ததையும், (நினைவு கூர்வீராக) அவர்களை (எண்ணிக்கையில்) அதிகப்படுத்தி உமக்குக் காண்பித்திருந்தால், நீங்கள் தைரியமிழந்து யுத்தம் செய்வதைப் பற்றி உங்களுக்குள் ஒருவருக்கொருவர் பிணங்கிக் கொண்டு இருந்திருப்பீர்கள். எனினும், அல்லாஹ் (உங்களைப்) பாதுகாத்து விட்டான். நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை நன்கறிந்தவன். (அல்குர்ஆன்)

அல்லாஹுத்தஆலா, தனது உதவியை நேரடியாக வழங்கினான், வானவர்களை அனுப்பியும் உதவி புரிந்தான், ஆயிரம் வானவர்களை அனுப்பி உதவி புரிந்தான்.

### சத்தியத்திற்கு வெற்றி:

போரில் கலந்து கொண்ட குறைஷிகளின் முக்கிய தலைவர்களில் 24பேர் மரணித்தனர். (ஆதாரம்: புகாரி 3976, முஸ்லிம்) மொத்தமாக 70 பேர் மரணித்தனர், 70 நபர்கள் கைது செய்யப்பட்டனர். முஸ்லிம்களில் 14 பேர் ஷஹீதாகினர். அவர்களில் ஆறு பேர் குறைஷியர் (முஹாஜிர்கள்), எட்டு பேர் (அன்ஸாரிகள்) ஆவர்.

எனவே, முஸ்லிம்களின் ஈமானிய பலத்தினால் பத்ர் களத்தில் மகத்தான வெற்றி கிடைத்தது.

### படிப்பினைகள்:

ஈமானிய பலமுள்ளவர்களுடன் அல்லாஹ் எப்பொழுதும் இருக்கின்றான். ஈமானிய பலத்தை எந்த பலமும் மிகைக்க முடியாது, ஒரு சமூகத்தின் வெற்றி அவர்களின் ஒற்றுமையிலும் அவர்களது தலைவர்களுக்கு வழிப்படுதலிலும் தங்கியுள்ளது. ஒரு சமுகத்தை கட்டியெழுப்புவதற்கு அவர்களது தலைவர்கள் தன்னிச்சையாக செயற்படாமல் அவர்களுடன் கலந்தாலோசித்து செயற்படல் வேண்டும், தியாகத்திற்கு பின்னால் பல நலவுகள் உண்டாகும்.

எனவே இந்நிகழ்வை நினைவு கூர்வதுடன் இதன் மூலம் படிப்பினை பெற வல்ல அல்லாஹ் துணை புரியட்டும்.




அஷ்ஷெய்க்
ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி
(காஷிபி)


# ரஷ்ய சார்பு நிலைப்பாட்டிலிருந்து சீனாவை விடுவிப்பது எவ்வாறு?

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஒரு மாதகாலம் கடந்து விட்ட நிலையில், இப்போரில் சீனாவின் நிலைப்பாடு என்ன என்பது முக்கிய கேள்வியாக பார்க்கப்படுகிறது. சீனாவின் பனிக்கால ஒலிம்பிக் போட்டி நிறைவு பெற்ற போது, அதில் கலந்து கொண்ட மிகச் சில தலைவர்களில் ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் ஒருவர். உக்ரைனின் இரண்டு சுதந்திரம் கோரும் மாகாணங்களுக்கு ஆதரவான குரலை அங்கே ரஷ்யா எழுப்பியது.



அதேசமயம் சீனா வெளியிட்ட அறிக்கையில் உக்ரைனில் பதற்ற நிலையைத் தணிக்கும் வகையில் இரு தரப்பினரும் நடந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படவிருந்தது.

ஆனால் இதையெல்லாம் ரஷ்யா கவனத்தில் கொள்ளாத நிலையில், உக்ரைன் தொடர்பான ரஷ்ய கொள்கையை சீனா எப்படிப் பார்க்கிறது என்பது முக்கிய கேள்விதான்.

ரஷ்யப் படையெடுப்பின் பின்னர் சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இடையில் மெய்நிகர் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது. இவ்விவகாரத்தில் சீனா எந்தப் பக்கம் என்பதை அமெரிக்கா அறிய முயன்ற ஒரு அணுகுமுறையாகவும் இச்சந்திப்பைக் கருதலாம்.

உக்ரைனில் நிலைமைகள் மோசமடைந்து வருகின்றன. இந்நிலை மேலும் மோசமடைவதை சீனா விரும்பவில்லை என்றும் சீனாவின் வரலாற்று ரீதியான மற்றும் கலாசார பாரம்பரியம் என்றைக்குமே பிணக்குகளுக்கு எதிரானது மட்டுமல்ல சமாதானத்தை முன்னகர்த்துவதாகவே இருந்திருக்கிறது என்று பைடனிடம் சீன ஜனாதிபதி கூறினார்.

இச்சந்திப்பின் போது உக்ரைன் விடயத்தில் ரஷ்யாவுக்கு நேரடி உதவிகள் இல்லை என்றொரு நிலைப்பாட்டில் சீனா இருப்பதாகக் காட்டிக் கொள்ள இந்தச் சந்திப்பை சீனா பயன்படுத்திக் கொண்டாலும் தாய்வான் விடயத்தில் அமெரிக்காவுக்கு ஒரு கவலை உள்ளது. உக்ரைன் ஒரு சமயத்தில் சோவியத் ரஷ்யாவின் கீழ் இருந்த ஒரு நாடு. சோவியத் ரஷ்யா சிதறுண்ட போது உக்ரைன் மீண்டும் சுதந்திர நாடானது.

வளம் கொண்ட அந்த நாட்டை மீளவும் தன்னுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யாவின் புட்டின் நிர்வாகம் விரும்புகிறது. இந்த ஆபத்தை உணர்ந்திருப்பதால் தான் உக்ரைனை ஐரோப்பிய நாடாக அங்கீகரிக்கும்படியும் நேட்டோவில் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளும்படியும் உக்ரைன் தொடர்ச்சியாகக் கேட்டு வந்திருக்கிறது. உக்ரைனை முற்றிலும் அடிமைப்படுத்த முடியாவிட்டாலும் அதன் ஒரு பகுதியை பிரித்து தன்வசம் வைத்துக் கொள்ள ரஷ்யா நிர்வாகம் விரும்புவதால்தான் இந்த யுத்தம் வெடித்தது. தன் வீட்டு முற்றத்தில் நேட்டோவின் பிரசன்னம் என்பது ரஷ்ய நிர்வாகத்தினால் கற்பனையும் செய்ய முடியாத ஒரு விஷயம்.

ரஷ்யாவுக்கு அண்மித்ததாக உக்ரைன் அமைந்திருப்பது போலவே சீனாவுக்கு மிக அருகே தாய்வான் அமைந்துள்ளது. மாவோசேதுங்கின் செம்புரட்சியின் போது சீனாவை ஆண்டு வந்த சியாங் கைஷேக் தப்பியோடி தாய்வானில் அரசமைத்தார். தாய்வானை உலக நாடுகள் அங்கீகரித்தன. ஆனால் இன்றுவரை சீனா தாய்வானை தனது நிலப்பரப்பின் ஒரு பகுதியாகவே கருதுவதோடு, தனிநாடாக தாய்வானை அங்கீகரிக்கவில்லை. உக்ரைன்_ ரஷ்யா பிணக்கு உச்சத்துக்கு சென்ற போது, அடுத்ததாக என்ன நடக்கும் என்று எதிர்பார்த்திருந்த சீனா, உக்ரைனில் ரஷ்யா நடத்தும் ஆக்கிரமிப்பை உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்பதை அறிவதில் ஆர்வமாக இருந்தது.

தாய்வான் மீது படையெடுத்து ஆக்கிரமித்தால் அதை மேற்குலகம் எவ்வாறு எடுத்துக் கொள்ளும் என்பதற்கு ரஷ்யா_ உக்ரைன் போரை சீனா ஒரு முன்னோட்டமாகக் கருதலாம் என்பது அமெரிக்காவின் கவலை. பலாத்காரமாக தாய்வானை தன்னுடன் இணைத்துக் கொள்வதென்பது சீனாவுக்கு பெரிய காரியமில்லை என்றாலும் தாய்வானின் இறைமைக்கு பங்கம் ஏற்படும் பட்சத்தில் இராணுவ ரீதியாக தாய்வானுக்கு உதவ அமெரிக்கா கடமைப்பட்டுள்ளது என்பதால் சீனா தயங்கி வருகிறது. மேற்குலகை திசைதிருப்பும் வகையில் பல்வேறு வழிகளைக் கையாளவும் செய்கிறது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையில் தாய்வான் பிரச்சினை முறையாகக் கையாளப்படாவிட்டால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் அது பாதிப்பை ஏற்படுத்தும் என சீனா கருதுகிறது. இவ்விடயத்தில் அமெரிக்கா போதிய கவனம் செலுத்த வேண்டும். அமெரிக்க_சீன உறவு இன்று தொய்வடைந்து காணப்படுகிறது என்றால் அதற்கான காரணம் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தங்களை சரியாகக் கடைப்பிடிக்க சில அமெரிக்க ஜனாதிபதிகள் முன்வராமையே என்கிறார் சீன ஜனாதிபதி. அவர் டொனால்ட் ட்ரம்பை குறிப்பிடுவதாகவே கருத வேண்டியிருக்கிறது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம், ஜனாதிபதி பைடனுடன் ஸ்கீன்பிங் பேசுவதற்கு முன்னர் தாய்வான் நீரிணைக்கு சீனா ஒரு விமான தாங்கிக் கப்பலை அனுப்பி வைத்திருந்ததைத் தான்.

இதேசமயம், ரஷ்யாவுக்கு நேரடியாக பொருளாதார உதவிகளையோ அல்லது ஐ. நா. பாதுகாப்பு சபையில் வீட்டோ மூலம் ரஷ்யாவை பாதுகாக்க முனைந்தாலேதான் வர்த்தகத்துக்கு பெரிதும் நம்பியிருக்கும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளை பகைத்துக் கொள்ள நேரிடும் என்ற அச்சம் சீனாவிடம் உள்ளது.

சீனாவுக்கு வர்த்தகம் மிக முக்கியம். சீனா தனது கம்யூனிச கொள்கைகளை 1970களில் அறிவித்த பின்னர் மேற்குலகுடனான அதன் உறவு பலவீனமடையத் தொடங்கியது.

இன்றைய நிலை மோசம் என்றுதான் குறிப்பிட வேண்டும். மேலும் ரஷ்யா போரில் சீனா வெளிப்படையான ஆதரவு நிலைப்பாட்டை எடுக்குமானால் கம்யூனிச நாடு இன்னொரு கம்யூனிச நாட்டு பக்கமே ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கும் என்ற மேற்குலக நாடுகளின் 1950 காலப்பகுதி சிந்தனையை மீளவும் ருசுப்படுத்தியதாக அமைந்து விடும் என்ற எச்சரிக்கை உணர்வும் சீனாவுக்கு உண்டு.

இதே சமயம் சீன வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஒரு குறிப்பில், சீனா தாய்வான் பிரச்சினையை ரஷ்யா_ உக்ரைன் விவகாரத்தோடு ஒப்பிடுவதற்கில்லை என்றும் உக்ரைன் ஒரு சுதந்திர நாடாகவே திகழ்வதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, தாய்வானை என்றைக்குமே சுதந்திர நாடாக நாம் கருதவில்லை, அது என்றைக்குமே சீனாவின் ஒரு தவிர்க்க முடியாத பகுதிதான் என்பதே எமது மாறாத நிலைப்பாடு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க – சீன உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் மூலமே சாத்தியம் என்பதே இராஜதந்திரிகளின் நம்பிக்கை

எனவே அமெரிக்கா சீனாவோடு உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். ஏனெனில் தான் ஒரு உலகத் தலைவராக, வல்லரசாக வர வேண்டும் என்பதே சீனாவின் இலக்கு. அவ்வாறு நிகழ்வதற்கு சுதந்திர வர்த்தக நாடுகளுடன் சீனா போட்டிபோட வேண்டியிருக்கும். எண்ணெய் நாடான 'ஒரு கட்சி ஆட்சி' ரஷ்யாவுடன் உறவைப் பேணுவதா அல்லது மேற்குலகின் வளர்ந்த நாடுகளுடன் போட்டி போடுவதா என்பதைத் தீர்மானிக்கும் வகையில் சீனாவுடனான பேச்சுவாத்தைகள் அமைய வேண்டும் என்பது மேற்குலக இராஜதந்திரிகளின் பார்வையாக இருக்கின்றது.

இவ்வாறான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் சீனாவை ரஷ்ய ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தும் தாய்வான் மீது கை வைப்பதில் இருந்தும் சீனாவை விலக்கி வைக்கலாம் என இராஜதந்திரிகள் நம்புகின்றனர்.

# நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் எவை?

## விளக்கம் தருகிறார் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க

பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து மீள்வது ஒரு நாளிலோ ஒரு வாரத்திலோ செய்ய முடியாத ஆச்சரியமான விடயம் என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்' என இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார். மத்திய வங்கியின் புதிய ஆளுநர் தமது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை நிலைபெறச் செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி எமக்கு வழங்கிய விசேட பேட்டியில் கருத்துகள் தெரிவித்தார்.



**கேள்வி: தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

**பதில்:** வேகமாக பள்ளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் வண்டியின் நிலைமையையே எமது தற்போதைய பொருளாதாரம் கொண்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். இவ்வேளையில் அவ்வாறான சிரமமான நிலைமைக்கு ஆளாகியுள்ள பொருளாதாரத்தை அதில் இருந்து மீட்பதற்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி: வேகமாக பள்ளத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் வாகனத்தை மீட்பதற்கு நீங்கள் முதலில் எடுக்கும் நடவடிக்கை என்ன?**

**பதில்:** இச்சந்தர்ப்பத்தில் நாம் உடனடியாக செய்ய வேண்டியது வாகனத்திற்குச் சென்று வேகமாகச் செல்லும் வாகனத்தின் வேகத்தை குறைக்க பிரேக்கை அழுத்தி, அதன் பின்னர் வாகனம் விபத்துக்குள்ளாவதை தடுக்க வேண்டும். அதுவே எமது கடமையாகும்.

**கேள்வி: அதனைச் செய்வதற்கு நீங்கள் தயாராக உள்ளீர்களா?**

**பதில்:** ஆம், நிச்சயமாக அதனைச் செய்ய வேண்டும். அதற்காகவே ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். அவுஸ்திரேலியாவில் இருந்த என்னை உடனடியாக வந்து மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்று இதனை நிறைவேற்றும்படி வேண்டுகோள் விடுத்தார். நான் அவ்வேளையில் இலங்கையின் மத்திய வங்கியின் நிதி சட்ட வரையறைகளுக்கு அமைய வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டேன்.

**கேள்வி: உலகில் எந்த ஒரு நாட்டிலும் மத்திய வங்கி சுயாதீனமான நிறுவனமாகவே செயல்பட வேண்டுமா?**

**பதில்:** நிச்சயமாக... உலகில் எந்த ஒரு நாட்டிலும் மத்தியவங்கி சுயாதீனமாக, சுதந்திரமாக வெளிப்படைத் தன்மையுடன் செயல்படக் கூடிய நிறுவனமாக இருக்க வேண்டும். இலங்கை மத்திய வங்கியும் அவ்வாறான நிலைமைக்கு வருவதற்கு நான் முயற்சி செய்கின்றேன். என்னுடன் நிதிச் சபையும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடும். நிதிச் சபையின் ஒத்துழைப்பு நூறுவீதம் எமக்குக் கிடைத்துள்ளது. எனக்கும் பெரும் நம்பிக்கை உண்டு. நாம் எடுக்கும் நடவடிக்கைகள் ஊடாக இந்த பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை காப்பாற்ற முடியும் என்று எனக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் இது மிகவும் கவனமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும்.அதனை நாம் அவ்வாறே மேற்கொள்ள வேண்டும். அதனால்தான் நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இனி எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் எனக்கு பெரும் பல விடயங்கள் உள்ளன. அவற்றின் இடையே மிக விரைவாக புதிய அமைச்சரவை ஒன்று நியமிக்கப்பட்டு, புதிய நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்படுவதாகும். தற்போது நிதி அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். அதே போன்று நிதியமைச்சின் செயலாளராக இலங்கை மத்திய வங்கியில் பிரதி ஆளுநராக கடமையாற்றிய மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். அதனால் மத்திய வங்கி தரப்பிலான நிதிக் கொள்கைகள் மற்றும் நிதி அமைச்சின் தரப்பில் எடுக்கப்படுகின்ற அரச நிதி கொள்கை ஆகியவற்றுக்கிடையே மோதல் ஏற்படாமல் நடவடிக்கை மேற்கொள்ள இலகுவாக உள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களிலும் உள்ள இரு தரப்பாரும் ஒரே நோக்கத்தை வெற்றி கொள்வதற்காக நடவடிக்கையில் ஈடுபடுவதால் பிரச்சினை மோசமாக இருந்தாலும் விரைவாக தீர்வு காண முடியும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

**கேள்வி: இலங்கை முகம் கொடுத்துள்ள டொலர் பற்றாக்குறை தற்போது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது. இதனைத் தீர்ப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?**

**பதில்:** உண்மையில் இலங்கையின் பொருளாதாரம் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினை டொலர் பற்றாக்குறை ஆகும். இதனால் நாம் உடனடியாக செய்ய வேண்டியது டொலர் பற்றாக்குறை ஏற்படக் காரணமான விடயங்களை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து டொலர் கையிருப்பை அதிகரிப்பதாகும். இவ்வேளையில் நாம் முதலில் செய்ய வேண்டியது பற்றாக்குறைக்கு காரணமான விடயங்களில் பணத்துக்கான தீர்வைக் காண்பதாகும். அங்கு எமக்கு தெரிய வரும் விடயம் என்னவென்றால் எமது வெளிநாட்டு கடன்களை செலுத்துவதை தாமதப்படுத்துவது பிரதான அம்சமாகும்.

பிரச்சினை ஏற்படாத விதத்தில் தீர்வுக்கு செல்வதே நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கையாகும். அதற்காக சமூகத்தில் அநேகமானோர் கூறுவது போன்று சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் செல்ல வேண்டியுள்ளது.

**கேள்வி: ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அதனால் கிடைக்கும் பலன் என்ன?**

**பதில்:** நாம் ஒரு நாடாக தற்போது சிரமத்துக்குள்ளாகி இருந்தாலும் அது தொடர்ந்தும் அவ்வாறே இருக்கவும் கூடாது, இருப்பதும் நல்லதல்ல. அதன்படி உடனடியாக நாம் வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய அந்நிய செலாவணி கடனை திரும்ப செலுத்துவதை ஓரளவுக்கு தாமதப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைத் தவிர எமக்கு நிவாரணமாக சலுகை அடிப்படையில் கடன்களை பெற்றுக் கொள்ள அக்கறை செலுத்த வேண்டியும் உள்ளது. இங்கு சர்வதேச நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டு முதலாவதாக கடன் மீள் கட்டமைப்பு திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. அதற்காக அவர்களின் ஒத்துழைப்பை இரண்டு வழிகளில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**கேள்வி: சர்வதேச நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கான அவ்விரண்டு வழிகளும் எவை?**

**பதில்:** அதில் முதலாவது செய்ய வேண்டியது கடன் மீள் கட்டமைப்பாகும். கட்டமைப்புக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை பெற்றுக் கொள்வது இரண்டாவதாகும். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதியை பெற்றுக் கொள்ள இவ்விரண்டையும் நாம் ஆறு மாதத்திற்கு முன்னர் மேற்கொண்டிருந்தால் இந்த பிரச்சினை இவ்வளவு மோசமாக மாறியிருக்காது. ஆனால் நாம் அவ்வாறு செயல்படவில்லை. இங்கு எனது பொறுப்பு மரண விசாரணை நடத்துவது அல்ல. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மேம்படுத்துவதே எனது நோக்கம். அதன்படி மிக விரைவாக தற்போது ஆரம்பித்துள்ள சர்வதேச நித்தியத்துடனான கலந்துரையாடலை விரைவுபடுத்துவதற்கு நான் எதிர்பார்த்து உள்ளேன்.

> ‘ இலங்கை முகம் கொடுத்துள்ள இன்றைய பிரச்சினைக்கு அரச வருமானம் குறைந்ததே காரணமாக உள்ளது. அரசின் வரி வருமானம் குறைவதற்கு காரணமான பல செயல்கள் நடைபெற்று உள்ளன. அதனால் அரசாங்கத்தின் வருமானம் இல்லாமல் போனது. நாம் இச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியது முடிந்தளவு அரசு வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகும். அதற்காக வரிக் கொள்கையில் மாற்றங்கள் பல மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோன்று அரச செலவுகளை முடிந்தளவு குறைக்க வேண்டியுள்ளது. அத்தியாவசிய செலவுகளை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. விரயம், ஊழல்களைக் குறைக்க வேண்டும். அரசின் செலவை முடிந்தளவு பயன் மிக்கதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ள வேண்டும் ’

**கேள்வி: இன்றோ நாளையோ சர்வதேச நாணய நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இலங்கை அரசு கலந்துரையாட வேண்டியுள்ளது அல்லவா? அதனை எவ்வாறு மேற்கொள்வீர்கள்?**

**பதில்:** தற்போது நிதி அமைச்சின் செயலாளருடன் பிரதிநிதிகள் குழு ஆரம்பக் கலந்துரையாடலை தொடங்கியுள்ளது. நாம் வோஷிங்டனில் அதன் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடல் நடத்தவுள்ளோம். ஆனால் அதற்கு முன்னர் எமது நாட்டிலிருந்து இருந்து தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கலந்துரையாடல்களை மேற்கொள்கிறோம்.

**கேள்வி: சர்வதேச நாணய நிதியத்தால் இந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு வழங்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?**

**பதில்:** உண்மையில் இலங்கை முகம் கொடுத்துள்ள இந்தப் பிரச்சினைக்கு அரச வருமானம் குறைவே காரணமாக உள்ளது. அரசின் வரி வருமானம் குறைவதற்கு காரணமான பல செயல்கள் நடைபெற்று உள்ளன. அதனால் அரசாங்கத்தின் வருமானம் இல்லாமல் போனது. நாம் இச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியது முடிந்தளவு அரசு வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாகும். அதற்காக வரிக் கொள்கையில் மாற்றங்கள் பல மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதேபோன்று அரச செலவுகளை முடிந்தளவு குறைக்க வேண்டியுள்ளது. அத்தியாவசிய செலவுகளை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. விரயம், ஊழல்களை குறைக்க வேண்டும். அரசின் செலவை முடிந்தளவு பயன் மிக்கதாகவும் செயல்திறன் மிக்கதாகவும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான யோசனைகளை சர்வதேச நிதியம் சொல்வதால் மாத்திரமல்ல நாம் யோசனைகளை முன்வைத்து செயல்படுத்தினால் அது அரசின் சார்பாகவும் நாட்டின் சார்பாகவும் மக்களின் பக்கமிருந்தும் நல்ல பலனை பெற்றுக் கொள்ள முடியும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. இந்த நல்ல யோசனைகளை யார் செய்தாலும் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் என்றால் அதனை நாம் செய்ய வேண்டும்.

**கேள்வி: தற்போது நாடு முகம் கொடுத்துள்ள உயர் பணவீக்கத்துக்கு காரணம் பணத்தை அச்சிட்டது என குற்றச்சாட்டு உள்ளது. மத்திய வங்கியின் தேவையின் பேரில் பணத்தை அச்சிட்டதுடன் மேலதிகமாகவும் பணத்தை அச்சிட்டதாக சில சமூக ஊடகங்களில் கதைக்கப்படுகின்றது. இந்நிலைமையை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

**பதில்:** பணம் அச்சிடுவது என்பது ஆழமாக பேசப்பட வேண்டிய தலைப்பாகும். சிலர் பணத்தை அச்சிடுவதை பிழையான விதத்தில் முன்வைக்கின்றார்கள். ஆனால் இலங்கை மத்திய வங்கி நிதி வர்த்தக சந்தையின் தேவையின் பேரிலேயே நோட்டுகளை அச்சடித்து உலாவ விட்டது. அதைச் செய்ய வேண்டும். அதற்காக இலங்கை மத்திய வங்கி செயல்படுவது தொழில்நுட்ப முறைகளுக்கு அமையவேயாகும். அதற்கு மேலதிகமாக பணத்தை அச்சிட்டு நிதி சந்தைக்கு உலாவ விடக் கூடாது. 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 300 பில்லியன் ரூபா சந்தைக்கு விடுவிக்கப்பட்டது. நாம் அது தவறல்ல என அன்று கூறினோம். சிலர் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இன்று உண்மை வெற்றி கண்டுள்ளது. அதனால் நிதி சுழற்சியை எமக்கு வேண்டியவாறு மேற்கொள்ள முடியாது. நீங்கள் இரண்டாவதாக கூறுவது போன்று பணத்தை அச்சிடுவதாக சமூக ஊடங்களில் பரிமாறப்படும் செய்திகள் தொடர்பாக உடனடியாக இலங்கை பொலிசாருக்கு அறிவிப்பது பொறுப்பு வாய்ந்த நாட்டு மக்களின் கடமையாகும். அவ்வாறான விடயம் பொலிசாருக்கு தெரியவந்தவுடன் அதற்கு உடனடியாக அவர்கள் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பார்கள். மத்திய வங்கியும் எம்மால் வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச பங்களிப்பை பெற்றுக் கொடுத்து மோசடியாக பணத்தை அச்சிடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக செயல்படுத்துவதற்கு தயங்க மாட்டோம்.

> ‘ இலங்கையின் பொருளாதாரம் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினை டொலர் பற்றாக்குறை ஆகும். இதனால் நாம் உடனடியாக செய்ய வேண்டியது டொலர் பற்றாக்குறை ஏற்படக் காரணமான விடயங்களை ஆராய்ந்து அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து டொலர் கையிருப்பை அதிகரிப்பதாகும். நாம் முதலில் செய்ய வேண்டியது பற்றாக்குறைக்கு காரணமான விடயங்களில் பணத்துக்கான தீர்வைக் காண்பதாகும் ’

**கேள்வி:இலங்கை ரூபாவின் பெறுமதியைப் பாதுகாப்பதற்கு நீங்கள் வழங்கும் யோசனைகள் எவை?**

**பதில் :**அதனைத்தான் நாம் கடந்த வெள்ளிக்கிழமை செயல்படுத்தினோம். சரித்திரத்திலேயே முதல் தடவையாக கொள்கை அளவிலான வட்டி வீதத்தை 7 வீதத்தால் அதிகரிக்கச் செய்தோம். அதன் மூலம் இறக்குமதியை குறைப்பதற்கும் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் வழி ஏற்பட்டுள்ளது. இந்த முடிவுகளின் பலன் நாட்டிற்கு இன்றே கிடைக்காது. ஆனால் அம்முடிவு காரணமாக இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் நல்ல நன்மைகள் எமக்குக் கிடைக்கும்.

**கேள்வி:வெளிநாட்டு பணியாளர்களிடமிருந்து எமக்குக் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லவா?**

**பதில்:** நிச்சயமாக அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் இங்கு ரூபாவின் பெறுமதியை டொலருக்கு இணைந்ததாக வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு சந்தைக்கு இடமளிக்க வேண்டும். அதன்படி அதிகமாக டொலரை பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, அவற்றை சட்டத்தின் மூலம் வர்த்தமானி அறிவித்தல் செய்து சட்டங்களை விதித்து செய்ய முடியும் என நாம் நம்பவில்லை.

**கேள்வி: கடன் மீள்கட்டமைப்பு செய்யும் வேளையில் இலங்கை பெற்றுள்ள வெளிநாட்டு உள்நாட்டு கடன்கள் இரண்டும் மீள்கட்டமைப்பு செய்யப்படுமா?**

**பதில்:** தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை வெளிநாட்டு கடன் பிரச்சினையாகும் .அதனால் வெளிநாட்டு கடனைச் செலுத்துவதற்கு மீள்கட்டமைப்பு செய்து சலுகைக் காலத்தை பெற்றுக் கொள்ளுதல் மீண்டும் வட்டி வீதத்தை குறைத்தல் போன்றவை கலந்துரையாடப் பட்டுள்ளன. உள்ளூர்க் கடனை திரும்பச் செலுத்துவது தொடர்பாக பிரச்சினை இல்லை என்பதால் அதனை மீள்கட்டமைப்பு செய்யும் நோக்கம் இல்லை.

**கேள்வி: மத்திய வங்கி ஆளுநருக்கு அமைச்சரவை அமைச்சுப் பதவியில் அதிகாரங்கள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றன . உங்களது பதவியின்படி நீங்கள் ஐந்தாவது இடத்தில் உள்ளீர்கள். அது அண்மையில் இடம் பெற்ற ஒன்றாகும். நீங்களும் அதனை ஏற்றுக் போகின்றீர்களா?**

**பதில்:** எனக்கு வழங்கப்பட்டுள்ளது நிதி தொகுதியின் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தி செயல்படுத்துவதாகும். அவர்கள் பொதுமக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர்கள். நான் அவ்வாறு தெரிவாகவில்லை. அதனால் நான் அது குறித்து கவனம் செலுத்தத் தேவையில்லை. நான் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுவேன். அதற்கு அப்பால் நான் எதிர்பார்ப்பது எதுவுமில்லை.

> ‘ ஒரு நாளிலோ அல்லது வாரத்திலோ சாத்தியமாகக் கூடிய காரியமல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்’

**ஜயஸ்ரீ முனசிங்க...**
*(தமிழில்: வி.ஆர். வயலட்)*

---

21 ஆவது நினைவு தினம் இன்று

# இஸ்லாமிய ஆன்மிகப் பாடல்கள் இசைத்து அக்கரைப்பற்று பிரதேச மக்கள் உள்ளத்தில் வாழும் கலாபூஷணம் ஜமால்டீன் பாவா

அகத்தினில் உயிராய் வந்து அருள் மழை பொழிய நின்று...என்று கணீரென்ற குரலில், ரபான் முழக்கத்துடன் பாடல் தந்தவர் கிழக்கின் பிரபல ‘ரபான் பைத்’ முன்னோடி கலாபூஷணம் ஜமால்டீன் பாவா அவர்கள்.

அவர் மறைந்து இன்று 21 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. கிழக்கு முஸ்லிம்களின் உள்ளத்தில் என்றும் நீங்காதஇடத்தைப் பெற்றவர் மர்ஹூம் கலாபூஷணம் ஜமால்டீன் பாவா. அக்கரைப்பற்று பிரதேசமெங்கும் புனித ரமழான் மாதம் வந்தால் முதலில் நினைவு வருவது பக்கீர் பாவாக்களின் ரபான் பைத் ஆகும். அக்கலைக்கு உயிரூட்டியவர் ஜமால்டீன் பாவா.

குப்பிவிளக்குகளும் பந்தங்களும் மின்விளக்குகளுக்குப் பதிலாக பாவனையிலிருந்த காலகட்டத்தில், ரபான் முழக்கம் புனித ரமழான் மாதத்தில் ‘சஹர்’ வேளைகளில் மக்களை நித்திரையிலிருந்து விழித்தெழச் செய்வதுண்டு. இக்கலையை பாவா சமூகத்தினர் நிறைவேற்றிவந்தாலும் அக்கலையைப் பேணி பாதுகாத்து வளர்த்தவர்களுள் முக்கிய பங்கெடுத்தவர் கலாபூஷணம் மர்ஹூம் ஜமால்டீன் பாவா. அன்னாரின் கணீரென்ற குரலைக் கேட்டதுமே சிறுவர்கள் விழித்துக் கொள்வர். சிறுவர் படையொன்று அவர் பின்னால் சஹர் ரபான் பைத்துடன் தொடர்ந்து செல்வர். அவர்கள் அவருடன் சேர்ந்து பாடல்களை இசைப்பதில் அவர் மகிழ்ச்சி அடைவார். சிறுவர்களும் மகிழ்ந்தனர்.

அக்கரைபப்பற்றில் 1942 ஆம் ஆண்டு மே மாதம் எட்டாந் திகதி பக்கீர் மொஹிடீன் – ரகுமதுல்லாஹ் தம்பதிகளின் மூன்றாவது மகனாகப் பிறந்த ஜமால்டீன் பாவா சிறுவனாக இருக்கும் போதே இஸ்லாமியர்களின் பாரம்பரியக் கலையாக இருந்து வரும் சீனடி, சிலம்படி, பொல்லடி, பக்கீர்பைத், ரபான் பைத், வெட்டுக் குத்து, வாள்வீச்சு, மாப்பிள்ளை பைத் குரவை போன்றவற்றைக் கற்றுக் கொள்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார். தாம் கற்றுக் கொண்ட அனைத்துக் கலைகளையும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் மிகுந்த அக்கறை காட்டி வந்தது அவரது சிறந்த பண்பாக இருந்தது. இஸ்லாமிய இசைத்துறைக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது. தனது அயராத உழைப்பினால் நூற்றுக்கு மேற்பட்ட இஸ்லாமிய ஆன்மிகப் பாடல்களை தனது சொந்த மெட்டில் பாடி இத்துறையை ஓர் உயிரோட்டமுள்ள கலையாக மாற்றினார்.

இவரின் திறமையையும், ஆற்றலையும் நன்கு அறிந்து கொண்ட இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியன 1960 – 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அன்னாருக்கு இஸ்லாமிய சேவையில் ஓர் இடத்தை வழங்கின.

பலாங்கொடையில் அமைந்துள்ள ஜெய்லானி, கதிர்காமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல், அழுப்பொத்த பள்ளிவாசல், கல்முனைக் கடற்கரைப் பள்ளிவாசல் போன்றவற்றின் வருடாந்த வைபவங்களிலும் அவர் கலந்து கொள்வதுண்டு.

இத்தகைய ஆளுமையும் திறமையும் கொண்ட மர்ஹூம் ஜமால்டீன் பாவாவை முதன் முதலாக கௌரவித்த பெருமை சேர் ராசிக் பரீத் தலைமையிலான இலங்கை சோனகர் இஸ்லாமிய சங்கத்தையே சாரும். கண்டி மாநகரில் 1988.08.16 ஆம் திகதி நடைபெற்ற இந்த கௌரவப்பு வைபத்தில் 'ஈழமுரசு' என்ற பட்டம் அன்னாருக்கு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலாசார அமைச்சு ‘கலாபூசணம்’ என்ற தேசிய விருதை வழங்கியது. அக்கரைப்பற்று தேசிய கலைஞர் பேரவையினராலும் 1966 ஆம் ஆண்டு அவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, கிழக்கிலுள்ள பல்வேறு சமூகசேவை அமைப்புகளும் ஜமால்டீன் பாவாவை விருதுகள் வழங்கி பொன்னாடை போர்த்தி போர்த்தி கௌரவித்தன.

அவர் புனித ரமழான் மாதம் நோன்பு பதினேழில் (03.11.2001) பதுர்சஹாபாக்கள் தினத்தில் காலமானார். அன்னாரின் ஜனாசா அக்கரைப்பற்று தைக்கா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. கலாபூஷணம் ஜமால்டீன் பாவாவை இப்பிரதேச மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர்.



கலாபூஷணம் **எம்.ஏ பகுர்தீன்...**
*(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)*

### தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில்

# 17 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்து

### பெண்கள் உட்பட நால்வருக்கு காயம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 17 வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தம் காரணமாக இரண்டு பெண்கள் உட்பட நால்வர் காயங்களுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சொகுசு கார்கள், வேன்கள், மற்றும் லொறி உள்ளிட்ட வாகனங்கள் இதில் உள்ளடங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் களுத்துறைக்கு கிலோமீட்டர் 23.3 பகுதியிலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால் கொழும்பை நோக்கி பயணிக்கும் வாகனங்கள் இப்பகுதியில் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியதாகவும் பல கிலோமீற்றர்கள் தூரம் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் தெரிவித்த அவர்கள் விபத்துக்குள்ளான வாகனங்கள் அகற்றப்பட்டு அந்த வீதியை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

வாகன அணியில் முன்னால் சென்ற வேன் ஒன்று சடுதியாக பிரேக் பிடித்ததால் அதன் பின்னால் சென்ற 17 வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தாண்டு பண்டிகைக் கால விடுமுறையில் ஊர்களுக்கு சென்றிருந்தவர்கள் மீண்டும் விடுமுறை கழித்து தமது வாகனங்களில் திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஸ)

# மதுரங்குளி பிரதேசத்தில் வீதி விபத்து; இருவர் பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி செம்பட்டை பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு (17) இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மதுரங்குளி வேல்சிமனபுர பகுதியைச் சேர்ந்த 49 வயது நபரும், மதுரங்குளி வீரபுர பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுரங்குளியிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் எதிர்த் திசையில் இருந்து வந்த துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சாரதியும், பின்பக்கமாக அமர்ந்து சென்ற நபரும், துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபரும் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், மோட்டர் சைக்கிளில் பயணித்த இருவரும் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த நபர் புத்தளம் தள வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் கூறினர்.



அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட 17 அமைச்சர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து கலந்துரையாடியபோது...

## திட்டமிட்டு நாட்டை... (03ஆம் பக்கத் தொடர்)

கொண்டு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது போன்று தோன்றுவதாகவும் இதன்போது சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

88,89 காலப்பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களின் போது, அன்றைய நாட்டின் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்தனவை படுகொலை செய்ய வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், நாட்டிற்கு பெரும் அழிவை ஏற்படுத்தியே நிறைவடைந்தது.

கடந்த காலம் மற்றும் தற்போதைய சட்டங்களைப் பற்றிய புரிதலின்றி இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டத்தினை, நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது நாட்டில் மீண்டும் ஒரு பேரழிவை ஏற்படுத்தும் என சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தற்போதைய ஆர்ப்பாட்டங்களுக்கு நிதி பெற்றுக்கொடுத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு சாதாரண பொதுமக்கள் பணம் வழங்கியுள்ளதாக தெரியவில்லை எனவும், ஏதேனுமொரு அமைப்பொன்றினால் திட்டமிட்டு இதற்கான பணத்தை செலவிட்டு நாட்டை சீர்குலைக்க முயற்சிப்பதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

பல்வேறு வழிகளிலும் நாட்டை சீர்குலைக்கும் போராட்டத்திற்கு இலங்கை ஊடகங்கள் தெரிந்தோ தெரியாமலோ ஆதரவளிக்கக் கூடாது எனவும் இவ்வாறான நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்களை மதிப்பிடல் காலத்திற்கு உகந்தது என்றும், அதனை அரச நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகளிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனவும், மக்கள் பிரதிநிதிகள் காலத்திற்கு காலம் மாறினாலும் அரச அதிகாரிகள் மாற்றமடையாமை மற்றும் அரச நிறுவனங்களதும், அதிகாரிகளதும் ஊழல் மற்றும் மோசடிகள் இன்று அரசியல்வாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்கள் மக்களை ஈடுபடுத்தி அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமரை நீக்கி அவர்களது குறுகிய இலக்குகளை அடைவதற்கு முயற்சிப்பதாகவும், எனவே, இந்த நெருக்கடியை மிகுந்த புரிதலுடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, ஜனாதிபதியும் பிரதமரும் துணிச்சலுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சட்டத்தரணிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், மக்களை ஈடுபடுத்தி வேறு அமைப்புகள் முன்னெடுத்துவரும் அரசியல் சதி குறித்து மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான டப்ளிவ். தயாரத்ன, ரஷிக் ஷாருக் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## எரிபொருள் விநியோகம் நேற்று முதல்...

கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்குப் போதுமான அளவில் எரிபொருள் தற்போது கைவசம் உள்ளதாகவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, உலகச் சந்தையில் எரிபொருள் விலை நேற்றைய தினம் மேலும் அதிகரித்துள்ளது. ப்ரேன் ரக மசகு எண்ணெயின் விலை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் பத்து டொலரால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அந்த ரக மசகு எண்ணெயின்விலை நேற்று பிற்பகல் முதல் 111.70 டொலராக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மசகு எண்ணெயின் விலை கடந்த வாரம் 100.58 டொலராக இருந்தது. இந்த வாரத்தில் அது மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உக்ரேன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான யுத்தம் காரணமாக ஐரோப்பிய நாடுகள் வேறு நாடுகளில் மசகு எண்ணையை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிலையிலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக துறைசார்ந்த நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.(ஸ)

## ஐந்து தினங்களுக்குப் பின்னர்...

பௌஸர்கள் உரிமையாளர்கள் சங்கத்திற்கும் இடையே நேற்று விசேட பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது. கடந்த 13ம் திகதி முதல் ஐந்து நாட்களாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை லிற்றோ கேஸ் நிறுவனம் நிறுத்தியிருந்தது. புதுவருட விடுமுறை காரணமாகவே அவ்வாறு விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததாக அந்த நிறுவனம் தெரிவித்தது.

அத்துடன் லிற்றோ காஸ் நிறுவனத்தின் தலைவராக செயற்பட்ட தெஷார ஜயசிங்க அந்த பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். எவ்வாறெனினும் தொடர்ந்தும்தட்டுப்பாடின்றி சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

## டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட்...

சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருந்த நிலையிலேயே நேற்றைய தினம் 17 புதிய அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன ஏற்கனவே கல்வியமைச்சராக சத்தியபிரமாணம் செய்து கொண்டிருந்தார். இந்நிலையில் அவரது அமைச்சுப் பதவி மாற்றம் பெற்று நேற்று அவர் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஏற்கனவே பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்த ரமேஷ் பத்திரன புதிய அமைச்சரவையில் கல்வியமைச்சராகவும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராகவும் பதவியேற்றுள்ளார்.

## ஆகக் குறைந்த கட்டணத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

மாதத்தில் இடம்பெறும் வரவு செலவுத் திட்ட திருத்தத்தின் போது மேற்படி விலை அதிகரிப்பை மேற்கொள்ள நேரும். முறையான முறைமையொன்றை உருவாக்கி செயற்படுத்தாவிட்டால் எதிர்கொள்ள நேரும் செலவினங்களை நிவர்த்தி செய்வதற்கு மேற்படி அதிகரிப்பை மேற்கொள்ள நேரிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

## லங்கா IOC நிறுவனம்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒட்டோ டீசல் புதிய விலை 289 ரூபா ஆகும். சுப்பர் டீசல் விலை 327 ரூபா, ப்ரீமியம் விலை 295 ரூபா ஆகும்.

## அஜித் கப்ராலின் பயணத்தடை...

அஜித் நிவாட் கப்ராலுக்கு நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நேற்று வரை தடை விதிக்கப்பட்டிருந்த தடையை நீடித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) அறிவித்தது.

மேலும் மே இரண்டாம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் கொழும்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராக 2006 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், அமைச்சரவையின் அல்லது நிதிச் சபையின் அனுமதியின்றி இமாத் ஷா சுபைரிக்கு, 6.5 மில்லியன் டொலர்களை செலுத்தியதன் மூலம், கப்ரால் குற்றத்தை புரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் ஆளுநராக இருந்த போது, 2022 ஜனவரி 18ஆம் திகதி செலுத்த வேண்டிய முறிப் பத்திரங்கள் மூலம் இலங்கை அரசாங்கத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டத்தை ஏற்படுத்தியதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆளுநராக இருந்த காலத்தில், மத்திய வங்கிக்குள் பதவிகளுக்கு தனது நெருங்கிய உறவினர்களை நியமித்ததன் மூலம் இரகசியத் தகவல்களை வெளியிட்டதன் மூலம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் இலங்கை அரசாங்கம் 10.04 பில்லியன் ரூபாய் நஷ்டமடைந்துள்ளதாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் நிலையில், அஜித் நிவாட் கப்ரால் நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், அவரை நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மனுதாக்கல் செய்யப்பட்டது.

இதனை பரிசீலித்த நீதவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கும் உத்தரவை பிறப்பித்திருந்தார்.(ஸ)

## இராஜாங்க அமைச்சர்களாக...

சேவைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சராக முன்னாள் வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக ஏ. அரவிந்த குமாரும் கிராமிய பொருளாதார பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக காதர் மஸ்தானும் நேற்றைய தினம் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் - பாதுகாப்பு,

ரோஹண திசாநாயக்க- உள்ளூராட்சிச் சபை மற்றும் மாகாண சபைகள்,

அருந்திக்க பெர்னாண்டோ- பெருந்தோட்டக் கைத்தொழில்,

லொஹான் ரத்வத்தை- நகர அபிவிருத்தி,

தாரக்க பாலசூரிய- வெளிவிவகாரம்,

இந்திக்க அனுருத்த - வீடமைப்பு,

அசோக்க பிரியந்த - வர்த்தகம்,

கீதா குமாரசிங்க - கலை,

குணபால ரத்னசேகர - கூட்டுறவு சேவை, விற்பனை அபிவிருத்தி, நுகர்வோர் பாதுகாப்பு,

கபில நுவன் அத்துகோரள - சிறு ஏற்றுமதி,

கயாஷான் நவனந்த- சுகாதாரம்,

சனத் நிஷாந்த – நீர் வழங்கல்,

சிறிபால கம்லத் - மகாவலி

அனுராத ஜயரத்ன - நீர்ப்பாசனம்,

சிசிர ஜயகொடி- சுதேச மருத்துவம்,

பிரசன்ன ரணவீர- கைத்தொழில்,

டி.வி.சானக்க- சுற்றுலாத்துறை மற்றும் கடற்றொழில், டி.பி. ஹேரத்- கால்நடை வளங்கள்

ஆகியோரும் இராஜாங்க அமைச்சர்களாக சத்தியபிரமாணம் செய்து கொண்டனர். (ஸ)

## சீனாவில் மீண்டும் கொரோனா...

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்கு, வீடுகளில் உள்ள மக்களை வெளியேற்றும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஷங்காய் நகரில் நேற்று ஒரே நாளில் 2,417 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, 3 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நகரின் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கை அமுல்படுத்தியுள்ள நிலையில் கூட, கொரோனா வைரஸ் தொற்றினால் முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சபாநாயகரிடம் 20ஆம் திகதி...

இணக்கப்பாட்டையும் பெற்றுக் கொண்ட பின்னர் கையளிக்க இருப்பதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் பிரேரணையை வெற்றிகொள்வதற்கு பாராளுமன்றத்தில் 113 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

எதிர்க்கட்சியில் இருக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து கைச்சாத்திட்டுள்ளனர். எனினும் ஐக்கிய தேசிய கட்சி சார்ப்பில் ரணில் விக்ரமசிங்கவிடம் இதுதொடர்பாக பல தடவைகள் கேட்டிருந்தபோதும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என அவ் உறுப்பினர் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்திருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாடு மற்றும் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை. என்றாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரேரணைக்கு ஆதரவளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதேபோன்று அரசாங்கத்தில் இருக்கும் சிலர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக எமக்கு தெரிவித்துள்ளனர். அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை ஆகியவற்றுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தை பெற்றுக்கொண்ட பின்னர், அதனை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க முன் பிரேரணையில் கைச்சாத்திட்டவர்களின் பெயர் பட்டியலை ஊடகங்களுக்கு வெளியிட தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## மக்களின் போராட்டத்தை...

தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது,

10 நாட்களாக காலி முகத்திடலிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரு பொதுவான நோக்கத்திற்காகவே தொடர்ந்து அனைவரும் போராடிவருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதேபோன்று அத்தியாவசியப் பொருட்களுக்கும் பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளதுடன், மின்சார துண்டிப்பபு இடம்பெற்று வருகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளையே காணமுடிகிறது.எந்த பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களுக்கு சுமைக்கு மேல் சுமை அதிகரித்துள்ளது. வரலாறு காணாத ஒரு பொருளாதார நெருக்கடியை அரசின் செயற்பாட்டால் மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இவை அனைத்துக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளார்.

மக்களின் பிரச்சினைகள் ஒருபுறம் இருக்கின்ற சூழலில், அமைச்சரவை மாற்றுகிறோம், அரச அதிகாரிகளை மாற்றுகிறோம் எனக் கூறி அரசாங்கம் மக்களின் போராட்டத்திற்கு தீர்வுக்காணாமையானது,அரசாங்கத்தின் முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிகாட்டுகிறது.

மக்களின் கோரிக்கை ஒன்றாகவும் அதற்கு அரசாங்கம் வழங்கும் பதில் வேறொன்றாகவும் உள்ளது. இது தலைவலிக்கு மருந்து வாங்க சென்றால் மூட்டு வலிக்கு மருந்து கொடுப்பது போன்ற ஒரு செயற்பாடாகும்.

ஜனாதிபதி செயலகத்திற்கே ஜனாதிபதியால் செல்ல முடியாத சூழல் இருக்கும் தருணத்தில் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு ஜனாதிபதி தீர்வுகளை பெற்றுக் கொடுக்க போகின்றார் என்பது கேள்விக்குறியானதொரு விடயமாக மாறியுள்ளது. எனவே மக்களின் போராட்டங்களுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும் என செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு பயணத்தை தடை செய்ய...

மனுவை கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோர் பிணைமுறி சம்பவம் சம்பந்தமான சாட்சியாளர்களாக பெயரிடப்பட்டு அவர்களின் வெளிநாட்டுப் பயணத்தை தடை செய்யுமாறு கோரி ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

நேற்றைய தினம் மேற்படி முறைப்பாடு தொடர்பில் நடைபெற்ற விசாரணையின் போதே கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் ஹர்சன கெக்குணாவலவினால் அந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி சம்பவம் தொடர்பாக 500 பில்லியன் ரூபா நிதி வழங்கப்படவேண்டிய நபர்களின் பெயர் பட்டியலை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான உத்தரவை விடுத்துள்ள நீதவான் அதற்காக எதிர்வரும் மே மாதம் 02 ஆம் திகதி வரை கால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான முறைப்பாட்டை முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## தற்போதைய சவால்கள்,சிரமங்களை...

அமைச்சர் பதவி என்பது ஒரு பாரிய பொறுப்பாகும் என்றும் மேலதிக சலுகைகளை பயன்படுத்தாமல் நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறும் புதிய அமைச்சர்களிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

நாட்டின் சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உரியது. அதற்கிணங்க அரசியலமைப்பில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் பல்வேறு அரசியல் கட்சிகளும் தெரிவித்த கருத்துக்கள் பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எந்த சந்தர்ப்பத்திலும் அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

எதிர்கால சந்ததியினரின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் பொருளாதாரத்தை சீர் செய்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதி உயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து தேவையான மாற்றங்களை செய்வதன் மூலம் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேர்மையானதும் சிறப்பானதும் தூய்மையானதுமான நிர்வாகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது முக்கியமென்றும் இதன்போது ஜனாதிபதி புதிய அமைச்சர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

பெரும்பாலான நிறுவனங்கள் தற்போது பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளன என்பதை சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி அந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை நாட்டு மக்கள் கோரும் "சிஸ்டம் சேஞ்ஜ்" ஒன்றை உருவாக்குவதற்கான வாய்ப்பும் புதிய அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

# சர்வதேச செய்திகள்

## தென்னாபிரிக்க வெள்ளம்: 63 பேர் தொடர்ந்து மாயம்



தென்னாபிரிக்காவின் க்வாசுலு நடால் மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கர வெள்ளம் காரணமாக தொடர்ந்தும் 63 பேர் காணாமல் போயிருக்கும் நிலையில் தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தால் இரு அவசர பிரிவு பணியாளர்கள் உட்பட 440க்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். சிலர் பெருக்கெடுத்த ஆற்றில் மூழ்கி பலியானதோடு சிலர் நிலச்சரிவுகளில் புதையுண்டுள்ளனர்.

வெள்ளத்தினால் சுமார் 4,000 வீடுகள் அழிக்கப்பட்டு 8,000க்கும் அதிகமானவை சேதமடைந்திருப்பதாக க்வாசுலு நடால் மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார். துறைமுக நகரான டர்பன் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதோடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மேலும் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டதாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

சுமார் 300 பாடசாலைகள் மற்றும் சுகாதார வசதிகளும் சேதமடைந்துள்ளன. வீதிகள் மற்றும் பாலங்கள் துண்டிக்கப்பட்டதால் சில பகுதிகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

தனது மறுமகளை இன்னும் காணவில்லை என்று லித்வே சிபியா என்ற பெண் குறிப்பிட்டுள்ளார். “நிலச்சரிவு ஏற்பட்டபோது அடித்துச் செல்லப்பட்டாள். அவள் எங்கே என்று எமக்குத் தெரியவில்லை. நாம் பொலிஸார் மற்றும் அவர்களின் நாய்களை கொண்டு தேடுதலை மேற்கொண்டபோதும் இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை” என்று அவர் குறிப்பிட்டார்.

## உக்ரைனின் பல நகரங்களிலும் ரஷ்ய படை பயங்கர தாக்குதல்



இரண்டு மாதம் நீடித்த கடும் மோதலுக்குப் பின் தெற்கு துறைமுக நகரான மரியுபோலை முழுமையாக கைப்பற்றியதாக ரஷ்யப் படை அறிவித்துள்ள நிலையில் உக்ரைனின் மேற்கு மற்றும் தென் பகுதிகளில் கடும் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

வடக்கில் உக்ரைனின் கடும் எதிர்ப்பால் பின்னடைவை சந்தித்த ரஷ்யா, டொன்பாஸ் பிராந்தியத்தில் தரைவழி தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. அதேபோன்று தலைநகர் கியேவ் உட்பட வேறு பகுதிகள் மீது நீண்ட தூர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

லிவிவ் மற்றும் டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பிராந்தியங்களில் நேற்று திங்கட்கிழமை பல வெடிப்புகள் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லிவிவ் மற்றும் பிற மேற்கு உக்ரைனிய பகுதிகள் இந்த போரினால் குறைந்ததாக பாதிக்கப்பட்டதாக கருத்தப்பட்டன. குறிப்பாக லிவிவ் மற்ற நகரங்களை விட பாதுகாப்பானது எனவும் கூறப்பட்டது.

இந்நிலையில் நேற்று அந்த நகரத்தின் மீது வரிசையாக ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த தகவலை லிவிவ் மேயர் அண்ட்ரி சாடோவி தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

கியேவில் டினிப்ரோ நதியின் கிழக்குக் கரையில் தீவிர வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருக்கும் ரோய்ட்டர்ஸ் செய்தியாளர் தெரிவித்துள்ளார். இதற்கான காரணம் பற்றி நிர்வாகம் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

வடகிழக்கு நகரான கார்கிவில் கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் பதினெட்டு பேர் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

“சாதாரண குடியிருப்பு பகுதிகள் மீதான மோட்டார், பீரங்கி தாக்குதல்கள் திட்டமிட்ட பயங்கரவாதத்தை தவிர வேறு ஒன்றுமில்லை” என்று அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக கூறப்படும் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்து வருகிறது. எனினும் அமைதிப் பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்கும் வகையிலான அட்டூழிய செயல்கள் பற்றிய ஆதாரங்கள் இருப்பதாக உக்ரைன் குறிப்பிடுகிறது.

உக்ரைனின் இராணுவமயமாதலை தடுப்பது மற்றும் அபாயகரமான தேசியவாதத்தை ஒழிப்பதற்கான சிறப்பு இராணுவ நடவடிக்கை எனக் கூறியே அந்நாட்டின் மீது ரஷ்யா படையெடுத்தது.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமான ரஷ்ய படையெடுப்புக்குப் பின் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு பல நகரங்களும் அழிவடைந்துள்ளன. இதுவரை சுமார் நான்கு மில்லியன் உக்ரைனியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

## ரஷ்யா எச்சரிக்கை



ஆர்ட்டிக் வட்டாரத்தில் நேட்டோ படைகளின் நடவடிக்கை அதிகரித்திருப்பது எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும் என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.

அண்மையில் நோர்வேயின் வட பகுதியில் நடத்தப்பட்ட இராணுவப் பயிற்சிகள் போன்றவை ரஷ்யாவின் கவனத்துக்கு உரியவை என்று ரஷ்யத் தூதர் நிக்கோலாய் கோர்சுனொவ் கூறினார்.

அது எதிர்பாராத சம்பவங்களை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்த அவர் அது பற்றி மேல்விவரம் தரவில்லை.

கடந்த மாதம் நேட்டோ கூட்டணியைச் சேர்ந்த 27 நாடுகள் நோர்வேயில் கூட்டுப் பயிற்சியை நடத்தின. அதில் 30,000 படைவீரர்கள் ஈடுபட்டனர்.

## 19 பலஸ்தீனர் காயம்



இஸ்ரேலிய படையினருக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையே ஜெருசலத்தில் நடந்த மோதலில், 19 பேர் காயமுற்றதாக பலஸ்தீனச் செம்பிறைச் சங்கம் கூறியுள்ளது.

ஜெருசலத்தில் உள்ள அல்அக்சா பள்ளிவாசலுக்கு அருகே இந்த மோதல் ஏற்பட்டது.

இஸ்ரேலிய படை, நிலைமையைக் கட்டுப்படுத்த வளாகத்துக்குள் சென்றதாகக் கூறியது. தங்களுடைய நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டதாகப் பலஸ்தீனர்கள் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை முதல் இதுவரை நடந்த மோதல்களில், காயமுற்றவர்களின் எண்ணிக்கை, 170ஐத் தாண்டியுள்ளது.

## குர்ஆன் தீவைப்பு: சுவீடனின் பல நகரங்களிலும் கலவரம்



சுவீடனில் குடியேற்ற எதிர்ப்பு தீவிர வலதுசாரி குழு ஒன்றினால் அல்குர்ஆன் எரிக்கப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து பல நகரங்களிலும் கடந்த ஞாயிறன்று நான்காவது நாளாகவும் மோதல் வெடித்தது.

கிழக்கு நகரான நொர்கொபிங்கில் கலகக்காரர்கள் மீது பொலிஸார் எச்சரிக்கை வேட்டுகளை செலுத்திய நிலையில் மூவர் காயமடைந்துள்ளனர். பல வாகனங்கள் தீ வைக்கப்பட்டிருப்பதோடு குறைந்தது 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை தெற்கு நகரான மல்மோவில் தீவிர வலதுசாரி பேரணி ஒன்றின் போது பஸ் ஒன்று உட்பட வாகனங்கள் மீது தீ வைக்கப்பட்டன.

முன்னதாக குர்ஆன் தீ வைக்கப்பட்டதற்கு ஈரான் மற்றும் ஈராக் அரசுகள் சுவீடன் தூதுவர்களை அழைத்து கண்டனத்தை வெளியிட்டுள்ளன. கடும்போக்கு அமைப்பான ஸ்ட்ராட் கர்ஸ் தலைவர் ரஸ்முஸ் பலுடான், அல்குர்ஆன் வாசகங்களை தீ வைத்ததாகவும் தொடர்ந்து அதனை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தீவிர வலதுசாரிகளின் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்ட ஸ்டொக்ஹோம் புறநகர் பகுதி உட்பட நகரங்களில் கடந்த வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இடம்பெற்ற பதற்றத்தில் குறைந்தது 16 பொலிஸார் காயமடைந்ததோடு பல பொலிஸ் வாகனங்கள் அழிக்கப்பட்டன.

## மரியுபோலில் கடைசிவரை போராட உக்ரைன் முடிவு



மரியுபோல் நகரம் இன்னமும் வீழ்ந்துவிடவில்லை என்றும் அங்கு சுற்றி வளைக்கப்பட்டிருக்கும் வீரர்கள் கடைசிவரை போராடுவார்கள் என்றும் உக்ரைனியப் பிரதமர் டெனிஸ் ஷ்மைஹல் அறிவித்துள்ளார்.

சரண் அடைந்தால் உயிரோடு விடுகிறோம் என்று ரஷ்யா விதித்த காலக்கெடு முடிந்த சில மணி நேரத்துக்குப் பின்னர் உக்ரைனியப் பிரதமரின் தொலைக்காட்சிப் பேட்டி வந்துள்ளது.

மரியுபோல் நகரின் கோட்டை போன்ற உருக்கு ஆலையில் சில ஆயிரம் உக்ரைனிய வீரர்கள் எஞ்சி உள்ளனர்.

முன்னதாக ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி அந்த வீரர்கள் கொல்லப்பட்டால் அமைதிப்பேச்சு கைவிடப்படும் என்று எச்சரித்தார்.

ஏற்கனவே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அமைதிப் பேச்சு இனி முன்னேற முடியாத அளவுக்குத் தேங்கி நின்றுவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

உக்ரைனில் சுமார் 1,000 நகரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஹெர்சன் நகரம் மட்டும்தான் ரஷ்யப்படையின் வசம் சென்றுள்ளது என்று உக்ரைன் பிரதமர் குறிப்பிட்டார்.

மரியுபோல் ரஷ்யா கைக்குச் சென்றால் ஏற்கனவே அதன் வசம் இருக்கும் கிரிமியா வட்டாரத்தோடு நிலப் பாதை அமைக்க வாய்ப்பு ஏற்படும். அது உக்ரைனுக்கு மிக்பெரிய பின்னடைவாக அமைந்துவிடலாம் என்று அஞ்சப்படுகிறது.

## கொவிட்–19: ஷங்ஹாய் நகரில் மூவர் உயிரிழப்பு



சீனாவின் வர்த்தக மையமாக இருக்கும் ஷங்ஹாய் நகரில் கடந்த மார்ச் மாதத்தில் முடக்க நிலை அறிவிப்பட்டது தொடக்கம் முதல் முறையாக மூவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

89 மற்றும் 91 வயதுக்கு இடைப்பட்ட தடுப்பூசி பெறாதவர்களே உயிரிழந்திருப்பதாக அந்த நகர சுகாதார ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நகரின் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 38 வீதமானவர்களே முழுமையாக தடுப்பூசி பெற்றிருப்பதாக ஷங்ஹாய் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் அந்த நகர் மீண்டும் முழுமையாக கொரோனா சோதனையை எதிர்கொண்டிருப்பதோடு நகரில் பெரும்பாலான மக்கள் நான்காவது வாரமாக கடுமையான பொது முடக்கத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை பதிவான மரணங்கள் கடந்த 2020 மார்ச் மாதத்திற்கு பின்னர் ஒட்டுமொத்த நாட்டிலும் உத்தியோக பூர்வமாக அறியப்பட்ட கொரோனா தொடர்பான முதல் மரணங்களாக உள்ளன.

சீனாவில் அண்மையில் ஏற்பட்டிருக்கு கொரோனா தொற்று அதிகரிப்பு சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவான எண்ணிக்கையாக உள்ளது.

எனினும் அந்த நாடு கொரோனா தொற்றை முற்றாக ஒழிக்கும் திட்டங்களை செயற்படுத்துவதோடு, இதற்காக கடும் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மரண தண்டனை முறையினை தீர்மானிக்க கைதிக்கு வாய்ப்பு





அமெரிக்காவின் தெற்கு கரோலினாவைச் சேர்ந்த கைதி ஒருவர் தம்மீதான மரண தண்டனையை மின்சார நாற்காலியில் அல்லது துப்பாக்கிச் சூடு மூலம் பெறுவதை தீர்மானிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

1999 ஆம் ஆண்டு கொள்ளை ஒன்றின்போது எழுதுனர் ஒருவரை கொலை செய்த குற்றத்துக்கு 57 வயதான ரிச்சர்டட் மூர் மீது வரும் ஏப்ரல் 29 ஆம் திகதி மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

அமெரிக்காவில் அண்மைக் காலத்தில் விஷ ஊசி செலுத்தியே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டபோதும் அதற்கு அத்தியாவசியமான மூலப்பொருட்களை வழங்க மருந்து உற்பத்தியாளர்கள் மறுத்து வருகின்றனர். இதனால் மின்சாரக் கதிரை அல்லது துப்பாக்கிச் சூடு குழுவால் சூடு நடத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவது பற்றி கைதி தீர்மானிக்கவிருப்பதாக சீர்திருத்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த இரு மரண தண்டனை முறைகளும் அரசியலமைப்பை மீறுவதாக அவரது வழக்கறிஞர்கள் வாதிட்டுள்ளனர். இதனை விசாரிக்க நீதிபதி ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

1976 இல் அமெரிக்காவில் மீண்டும் மரண தண்டனை அமுல்படுத்தப்பட்ட பின் இதுவரை மூன்று முறையே துப்பாக்கிச்சூடு மூலம் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாக். வான் தாக்குதலில் ஆப்கானில் 47 பேர் பலி



கிழக்கு ஆப்கானிஸ்தான் மாகாணங்களான கோஸ்ட் மற்றும் குனாரில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய வான் தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“கோஸ்ட் மாகாணத்தில் துரான் கோட்டுக்கு அருகில் பாகிஸ்தான் படையினரால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்களை பிரதானமாகக் கொண்டு 41 பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 22 பேர் காயமடைந்துள்ளனர்” என்று கோஸ்டின் தகவல் மற்றும் கலாசார பணிப்பாளர் ஷபீர் அஹமது ஒஸ்மானி தெரிவித்துள்ளார்.

கோஸ்டில் இடம்பெற்ற உயிரிழப்புகளை மேலும் இரு அதிகாரிகள் உறுதி செய்திருப்பதோடு குனார் மாகாணத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதாக ஆப்கான் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக கூறப்படும் சிறுவர்களின் சடலங்களின் படங்களை ஆப்கான் செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் தரப்பில் எந்த பதிலும் கூறப்படவில்லை. எனினும் ஆப்கானில் இருந்து ஆயுதக் குழுக்கள் பாகிஸ்தான் மீது நடத்தும் தாக்குதல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கும்படி தலிபான் நிர்வாகத்தை பாக். வெளியுறவு அமைச்சு கடந்த ஞாயிறன்று வலியுறுத்தி இருந்தது.

ஆனால் 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நாட்டைக் கைப்பற்றியதில் இருந்து எல்லை தாண்டிய தாக்குதல்களைக் கட்டுப்படுத்தியுள்ளதாகத் தலிபான் அதிகாரிகள் கூறுகின்றனர்.

# உயிர்ப்பின் மகத்துவம்



உயிர்ப்பு என்பது ஒருகடத்தல். இறப்பு என்ற நிலையில் இருந்து உயிர்ப்பு என்ற மறுநிலைக்கு கடத்தல். இந்த உலகத்தில் இறந்த எவரும் உயிர்த்ததில்லை என்பதைநாம் அறிவோம். இயேசு ஒருவரே இந்தஉலகத்தில் மனிதனாய் பிறந்து வாழ்ந்து இறந்து உயிர்த்திருக்கின்றார்.

இயேசுவின் உயிர்ப்பு என்பது வெறும் உடல் உயிர்ப்பு என்று மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது. அவருடைய உயிர்ப்பு பன்முகத்தன்மை கொண்டது. ஆன்மீகத்திலேஅடிமையாக உண்மைக்கடவுளை மறந்து மனம் போல வாழ்ந்தவர்களை மீண்டும் கடவுள் பக்கம் திருப்பிய உயிர்ப்பு. இஸ்ராயேல் மக்கள் தங்களை படைத்த பராமரித்த கடவுளை மறந்து தங்களுக்கென தெய்வத்தை செய்துகொண்டார்கள். தாங்கள் படைத்ததெய்வங்கள் உண்மைக்கடவுள் அல்ல. அவர்களால் அவர்களை மீட்கமுடியாது என்ற உண்மையைக் கற்றுக் கொடுத்து யாவே கடவுள் மீது மீண்டும் திரும்ப வைத்த உயிர்ப்பு.

மக்கள் அன்றும் இன்றும் பாவத்தில் விழுந்து அதிலே மயங்கி கிடந்தார்கள். உலகக் காரியம் மட்டுமே போதுமானது என்று சுயநலத்திலே வீழ்ந்து கிடந்தார்கள்.

உன்னுடையதெல்லாம் என்னுடையதே என்னுடையதும் என்னுடையதே என்ற மனநிலையில் வாழ்ந்து வந்தார்கள். தனக்கென வாழ்வது வாழ்க்கையல்ல பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை என்று வாழ்ந்து காண்பித்து அதற்காகவே தன் வாழ்க்கையை கையளித்து இப்படிவாழ்வதே உண்மையான வாழ்க்கை உயிர்ப்பு வாழ்க்கை என்று இயேசு வாழ்ந்து காட்டிய உயிர்ப்பைத்தான் நாம் கொண்டாடுகின்றோம். ஆக சுயநலத்திலிருந்து பிறர் நலம் பேணுவது உண்மையான உயிர்ப்பு.

மக்களின் தேவை என்ன என்பதை உணர்ந்து அவர்களுக்காக வாழும் வாழ்க்கை ஒரு உயிர்ப்பு. மனிதர்களைஅடிமைகளைப்போல நடத்தாமல் அவர்களுக்கும் உணர்வுகள் உணர்ச்சிகள் உண்டு. அவர்களும் சுதந்திரமாய் வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து நல்லாட்சி கொடுப்பது என்பதும் ஒருஉயிர்ப்பே.

இருளில் வாழுகின்ற மக்களுக்கு ஒளியைக் கொடுப்பது ஒருஉயிர்ப்பு. அடிமைச் சங்கிலியை உடைத்து அவர்களின் சுதந்திரத்தை மதித்து அவர்களுக்கு விடுதலை கொடுப்பதும் ஒருஉயிர்ப்பு. அதனைத்தான் நாம் பாஸ்கா என்கிறோம்.

இஸ்ராயேல் மக்கள் அடிமைகளாக இருந்த போது எங்களை மீட்க வாரும் ஆண்டவரே என்று கதறியபோது அவர்களை விடுவிக்க மோயீசனை அனுப்பி அவர்களை மீட்டதைத்தான் நாம் பாஸ்கா என்கிறோம். அதனைத்தான் இயேசுவும் செய்தார். பாவத்திலே வீழ்ந்து கிடந்த ஒவ்வொருவருக்கும் அவர்களின் பாவங்களை மன்னித்து புது வாழ்வு கொடுத்தாரே. அதனைத்தான் நாம் பாஸ்கா என்கிறோம்.

அருட்தந்தை
**ஜோசப் கென்னடி...**

சமுதாயத்தில் மக்களை நிறத்தால் மொழியால், மதத்தால் பிரித்துப்பார்த்து அதன் அடிப்படையில் அவர்களை கேவலமாக நடத்து கின்ற நிலைமாறி மனிதாபிமானம் இலலாமல் நடத்துகின்ற நிலைமாறி நாம் அனைவரும் சகோதர சகோதரிகள் என்றஉணர்வை கொண்டுவரும்போது அது உயிர்ப்பாகின்றது. அதாவது வேற்றுமையில் ஒற்றுமை என்ற உண்மையை உணர்ந்து நமக்குள் வித்தியாசம் இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே என்ற உணர்வைக் கொண்டுவரும்போது நாம் உயிர்ப்பின் மக்களாக இருக்கின்றோம்.


அதனைத்தான் இயேசு தன் வாழ்க்கையில் செய்தார். அவர் அனைவரையும் அரவணைத்தார். அனைவரையும் ஏற்றுக்கொண்டார். எனவேதான் அவரது ஆட்சிவரவேண்டும் என்று மன்றாடுகின்றோம். தந்தை ஒருவரே நாம் அனைவரும் அவரின் மக்கள். ஆக மக்களை பிரித்துப் பார்க்காமல் ஒன்றுபடுத்தி வாழவைப்பதே உண்மையான உயிர்ப்பு.

அதிகாரம் என்பது மக்களை வழிநடத்த கொடுக்கப்பட்ட ஒரு பணிதானே தவிர அதனைத் தன்னை வளர்த்துக் கொள்வதற்காகவோ, பிறரை பயன்படுத்தி நாம் அவர்களை நசுக்குவதற்காகவோ கொடுக்கப்பட்டதுஅல்ல. மாறாக இயேசுவைப் போல இடுப்பில் துண்டைக்கட்டிகொண்டுஅடிமையின் கால்களை கழுவி என்னைப்போல வாழுங்கள் என்றுஅறைகூவல் விடுத்தாரே அதுதான் உண்மையானபாஸ்கா. ஏனென்றால் அடிமை எப்போதும் அடிமையாக இருக்கவேண்டும் பதவியில் இருப்பவன் எப்போதும் பதவியில் இருக்கவேண்டும். அந்தப் பதவியை தக்கவைக்க நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்ற நிலையில் இருக்காமல்,மக்களைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் இருக்கின்ற தலைவர்களைப் போல இருக்காமல், இயேசுவைப் போல பிறருக்காக தன் உயிரையும் கொடுக்க முன்வந்ததைப் போல நாமும் வாழும்பொழுது நாமும் உயிர்ப்பின் தலைவர்களாக வாழுகின்றோம் என்பதுதான் உண்மை.

ஆக உயிர்ப்பு என்பது ஒன்றில் இருந்து மற்றொன்றுக்கு கடந்துபோவதே. நம்முடைய வாழ்வில் உயிர்ப்புஅனுபவம் வேண்டும் என்றால் அல்லது இயேசுவின் உயிர்ப்பில் பங்குபெறவேண்டும் என்றால் நாமும் அவரது வழிகாட்டலில் நடப்பதே அந்த அனுபவத்தைத் தரும். நாம் மனிதர்கன்,மனிதபலவீனம் உள்ளவர்கள் ஆனாலும் உயிர்த்த இயேசுதன் சீடர்களுக்கு சொன்னது போலஅஞ்சாதீர்கள் உலக முடிவுவரை உங்களோடு இருப்பேன் என்ற வார்த்தைக்கேற்ப இறைவன் என்னைவழிநடத்துவார் என்றஉணர்வோடு மேற்படிஒவ்வொரு இறப்பிலும் இருந்து நாம் உயிர்க்க வேண்டும்.

இயேசு இறந்தார் ஆனால் அவர் குழியில் முடங்கிப் போய்விடவில்லைஅவர் வெற்றியின் வீரராகஉயிர்த்தெழுந்தார். அவரைப் பின்பற்றி வாழும் நாமும் நம்முடைய எண்ணத்தில்,சிந்தினையில்,செயல்பாட்டில் இறந்தாலும் நம்மாலும் உயிர்த்தெழமுடியும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையை கொடுப்பதே இந்த உயிர்ப்பு.

# கிறிஸ்துவின் அமைதி நம் உள்ளங்கள் இல்லங்கள் உலகமனைத்திலும் நிலவுவதாக



## உயிர்ப்புப் பெருவிழா திருப்பலியில் ஐம்பதாயிரம் விசுவாசிகள் மத்தியில் திருத்தந்தை பிரான்சிஸ்

உலக அமைதிக்காகச் செபிக்குமாறு தெரிவித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் உயிர்த்த இயேசு தீமையின் வல்லமையை வெற்றிகண்டார் என்றும் உயிர்த்த கிறிஸ்துவின் அமைதி நம் உள்ளங்கள் இல்லங்கள் மற்றும் உலகமனைத்திலும் நிலவுவதாக எனவும் தெரிவித்தார்.

புனித நாட்களில் திருத்தந்தை தலைமையேற்று நிறைவேற்றிய திருவழிபாடுகளில் பங்குபெறுவதற்காக உரோம் பெருநகருக்கு வந்திருந்த திருப்பயணிகள் கூட்டத்தினால் தூய பேதுரு வளாகம் நிரம்பி வழிந்தது.

கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவான ஏப்ரல் ஞாயிறன்று காலை வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் திருத்தந்தை நிறைவேற்றிய பெருவிழாத் திருப்பலியானது தூய பேதுரு வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த திருப்பலி பீடம், மற்றும் அதற்கு அருகிலுள்ள பகுதிகள் ஹாலந்து நாட்டிலிருந்து வழங்கப்பட்ட நாற்பதாயிரம் பல வண்ண மலர்களால் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

**மேரி தெரேசா...**

திருத்தந்தை தலைமையேற்று நிறைவேற்றிய இப்பெருவிழா திருப்பலியில், ஏறத்தாழ ஐம்பதாயிரம் விசுவாசிகள் பங்குபற்றினர். நற்செய்தி வாசகத்திற்குப்பின் விசுவாசிகள் அவ்வாசகத்தின் உட்பொருளைத் தியானிக்கும் வகையில் திருத்தந்தை சிறிதுநேரம் அமைதியாக அமர்ந்திருந்தார். இத்திருப்பலியில் உக்ரேனியம் உட்பட பல்வேறு மொழிகளில் இடம் பெற்ற விசுவாசிகள் மன்றாட்டில் உலகத் தலைவர்கள் பொதுநலனுக்காகப் பணியாற்றவும் உக்ரைனில் போரில் இறந்தவர்களின் ஆன்மா நிறைசாந்தியடையவும் வேண்டுதல்கள் இடம்பெற்றன.

திருப்பலியின் இறுதியில், அமைதிக்காகச் செபிக்குமாறு விண்ணப்பித்து தனது ஆசிரை அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்திருப்பலிக்குப் பின்னர் திறந்த காரில் அவ்வளாகத்தில் வலம் வந்து விசுவாசிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் திருத்தந்தை பின்னர் பகல் 12 மணிக்கு வத்திக்கானின் தூய பேதுரு பெருங்கோவில் மாடத்திலிருந்து, “ஊர்பி எத் ஓர்பி (Urbi et Orbi)” என்றமொழியில் உலகமனைத்திற்குமென செய்தி ஒன்றை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.




லோரன்ஸ் செல்வா

## மட்டக்களப்பு மரியாள் பேராலய ஈஸ்டர் திருப்பலி






மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலி மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது. ஆலய முன்றலில் புதிய தீ மூட்டப்பட்டு தீ ஆசீர்வதிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு புதிய நீர் ஆசீர்வதிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.ஆலய பங்குத்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளாருடன் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் உள்ளிட்ட பெருமளவான விசுவாசிகளும் திருப்பலியில் கலந்து கொண்டிருந்தனர்.
(படங்கள்: கல்லடி குறூப்நிருபர்)

# உயிர்ப்பு தரும் புது உறவு

ஈஸ்டர் பெருவிழா இறைமகன் இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததன் மாட்சிமையைக் கொண்டாடுகின்ற திருவிழா.

மூன்று ஆண்டுகளாகத் தனது சீடர்களோடு நெருக்கமாக உறவாடி, இறையரசின் மேன்மையை எடுத்துச் சொல்லி, பற்பல போதனைகளைச் செய்து, எத்தனையோ அருள் அடையாளங்கள் வாயிலாகத் தன் இறை தன்மையை நிரூபித்து அவர்களைத் திடப்படுத்தி வழிநடத்தி வந்த இயேசு வெள்ளிக்கிழமையன்று கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு உயிரிழந்துவிட்டார்.

அவர் கல்வாரிக் குன்றில் சிலுவையில் அறையப்பட்டு இறந்துபோனதை சீடர்கள் பலரும் நேரிலே கண்டார்கள். “ஆண்டவர் போதகர் என்று அவர்கள் கொண்டாடிய இயேசு இப்போது இல்லை” என்ற எண்ணமே அந்தச் சீடர்களின் மனதில் இருளையும் குழப்பத்தையும் அச்சத்தையும் உண்டாக்கியிருந்தது.

அடுத்த ஓரிரு நாட்களுக்கு சீடர்களின் மனதில் இந்தச் சங்கடமான நிலைமையே நீடித்திருந்தது. ஆனால், ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கல்லறைக்குப் போய்விட்டு மிரட்சி கலந்த வியப்போடும், மகிழ்ச்சியோடும் திரும்பிவந்த மற்றச் சீடர்கள், "கல்லறை திறந்து கிடக்கிறது, இயேசுவின் உடல் அங்கே இல்லை: அவர் உயிர்த்துவிட்டார்!" என்று கூறியதைக் கேட்டபோது அனைவரது உள்ளமும், உடலும் புத்துணர்ச்சியாலும் புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்தாலும் நிறைந்தது.

வெள்ளிக்கிழமை வேதனையிலிருந்து விடுபட்டு, வெற்றித் திருநாளாம் உயிர்ப்பு ஞாயிறின் உன்னதத்தை, உற்சாகத்தைக் கண்டுகொண்டார்கள்.

ஆம்..! சாதாரணத் தண்ணீரைச் சுவைமிகு இரசமாக மாற்றிய இறைமகன் இயேசு, தனது உயிரற்ற உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையைப் புதிய வாழ்வின் கருவறையாக மாற்றினார். கிறிஸ்துவின் உயிர்ப்பு, கிறிஸ்தவத் திருமறையின் மறையுண்மையும், வலிமையுமாக இருக்கின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பு, புராணக் கதையல்ல; மாறாக, திடமான, நம்பத்தகுந்த சாட்சியங்களோடு நிரூபிக்கப்பட்ட மறுக்கமுடியாத வரலாற்று உண்மையாகும்.

வெற்றி ஆரவாரத்தோடு இயேசு எருசலேம் நகருக்குள் நுழைந்ததும், அதனைத் தொடர்கின்ற அவரது பாடுகளும், மரணமும் பழைய ஏற்பாட்டு நூலில் பல இறைவாக்கினார்களால் முன்னுரைக்கப்பட்டுள்ளன. "பல துன்பங்களை அனுபவித்து உயிர் துறந்த பின்னர் மூன்றாம் நாளில் நான் உயிர்த்தெழுவேன்" என்று இயேசு பல தடவைச் சொன்னது அவரது உயிர்ப்பில் நிரூபிக்கப்பட்டது.

சாவை வென்று உயிர்த்தெழுதல்: என்னைப் பாதாளத்திடம் ஒப்பவிக்கமாட்டீர்; உம் அன்பனைப் படுகுழியைக் காண விடமாட்டீர். வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு; உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு.(திருப்பாடல் 16:11,12) ஆனால், கடவுள் என்னுயிரை மீட்பது உறுதி; பாதாளத்தின் பிடியினின்று விடுவித்து என்னைத் தூக்கி நிறுத்துவார். (திருப்பாடல் 30:3) நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர்; சாவுக் குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர். (திருப்பாடல் 49:15)

தனது உயிர்ப்பை இயேசு முன்னறிவித்தது: இயேசு மறுமொழியாக அவர்களிடம், "இக் கோவிலை இடித்துவிடுங்கள். நான் மூன்று நாளில் இதைக் கட்டி எழுப்புவேன்" என்றார். அப்போது யூதர்கள், "இந்தக் கோவிலைக் கட்ட நாற்பத்தாறு ஆண்டுகள் ஆயிற்றே! நீர் மூன்றே நாளில் இதைக் கட்டி எழுப்பி விடுவீரோ?" என்று கேட்டார்கள். ஆனால் அவர் தம் உடலாகிய கோவிலைப்பற்றியே பேசினார். (யோவான் 2:1921)

திருத்தூதர் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடலின் பதினைந்தாம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு உறுதியான சான்று பகர்கின்றார். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்" என்று 14ஆம் வசனத்திலும், "இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது" என்று 20ஆம் வசனத்திலும் தெளிவாக எழுதுகிறார்.

வலியும், துயரமும், கண்ணீரும் மிகுந்த இவ்வுலகில், உயிர்வாழ்வதன் மேன்மையை இந்த உயிர்ப்பு விழா நமக்கு நினைவூட்டுகின்றது.

**திருஇரான்சம் அமிர்தமணி...**

"நமது ஆன்மாவில், அவர் நிறுவிய திருச்சபையில், புனிதமிகு திருநற்கருணையில், விண்ணகத்தில் கிறிஸ்து உண்மையாகவே வாழ்கிறார்" என்ற நமது விசுவாசமே, நம்முடைய தனிப்பட்ட வேண்டுதல்களுக்கும், கூட்டுப் பிரார்த்தனைகளுக்கும் பொருளைத் தருகின்றது. உயிர்த்



தெழுந்த கிறிஸ்து இயேசு எங்கும் எப்போதும் பிரசன்னமாயிருக்கிறார் என்ற நம்பிக்கையே, சோதனைகளை ஜெயித்திடும் வலிமையையும், தேவையற்ற கவலைகள்அச்சங்களிலிருந்து விடுதலையும் நமக்குத் தருகின்றது.

அன்று எம்மாவு கிராமத்திற்கு செல்லும் வழியில் இரண்டு சீடர்களோடு கூடவே பயணித்தது போல, இன்றும் நம் வாழ்க்கைப் பாதையில் உயிர்த்த இயேசு நம்மோடு துணையாக வந்துகொண்டிருக்கிறார். அன்றாட வாழ்வில் நமது எதிர்பார்ப்புக்களை மாற்றியமைப்பதன் வழியே, பல நிகழ்வுகளில் நாம் எதிர்கொள்ளுகின்ற பல மனிதர்களின் வடிவில் நம்மை சந்திக்கின்றார். எப்போதும் துணைநிற்கின்ற நண்பனின் தோள்களில் எதிர்பாராத நேரத்தில் கைகொடுக்கின்ற அயலானின் கருணையில் தேவையான சமயத்தில் உதவி செய்கின்ற அறிமுகமற்ற ஒருவரின் பரிவில் நமது குடும்பத்தாரின் உண்மையான அன்பில் சிறு குழந்தையின் பாசாங்கு இல்லாத சந்தோஷத்தில் இங்கெல்லாம் அவரது பிரசன்னத்தை நாம் அறிந்துகொள்ள நமது கண்களை திறக்க முயற்சி செய்கிறார்.

நமது அகக்கண்களைத் திறந்து நாமும் இயேசுவோடு பணி செய்யத் தயாராவோம்.

# இந்திய மீனவர்கள் 19 பேர் நிபந்தனையுடன் விடுதலை

நாகர்கோவில் விஷேட நிருபர்

இந்திய மீனவர்கள் 19 பேருக்கு 18 மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதித்து அதை10 வருட காலத்திற்கு ஒத்திவைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றால் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணமாக மூன்று சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 19 இந்திய மீனவர்களுக்கான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது நீரியல் வளத்துறையினரினால் 19 பேருக்கு எதிராகவும் மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.இம் மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா ஆறுமாத சாதாரண சிறை தண்டனைப்படி 18 மாத சிறைத்தண்டனை விதித்து அதை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்தார்.

கடந்த 3ஆம் மாதம் 28ஆம் திகதி படகு ஒன்றில் நான்கு மீனவர்களும், மூன்றாம் மாதம் 30ஆம் திகதி ஒரு படகில் மூன்று மீனவர்களும், இம் மாதம் 2ஆம் திகதி ஒரு படகில் 12 மீனவர்களுமாக 19 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதில் 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட படகின் உரிமையாளர் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவதனால் அப்படகு அரசுடமையாக்கப்பட்டது.மற்ற இரண்டு படகின் உரிமை கோரும் வழக்கு எதிர்வரும் 15.07. 2022க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# புகையிரதத்துடன் மோதுண்டு ஓமந்தையில் இளைஞர் மரணம்

வவுனியா விசேட நிருபர்

கொழும்பில் இருந்து யாழ். நோக்கி சென்ற புகையிரதம் வவுனியா, ஓமந்தை, அரச வீட்டுத் திட்டத்திற்கு அண்மித்த பகுதியில் மோதியதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 11 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,..

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கடுகதி புகையிரதமானது ஓமந்தை, அரச வீட்டு திட்டத்திற்கு அண்மித்த பகுதியில் பயணித்த போது தண்டவாளப் பகுதியில் பயணித்த இளைஞன் ஒருவருடன் புகையிரதம் மோதியதில் இளைஞன் மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் புகையிரத்தில் எடுத்துச் செல்லப்பட்டு ஓமந்தை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.விபத்தில் ஓமந்தை அரச வீட்டுத் திட்டம் 6 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த 21 வயதுடைய சுந்தரமூர்த்தி சுதன் என்ற இளைஞரே மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தற்கொலை முயற்சியா அல்லது விபத்தா என்ற கோணத்தில் ஓமந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் தீப்பந்த போராட்டம்





யாழ். விசேட நிருபர்

ஜனநாயகத்திற்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் தீப்பந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பண்ணைக் கடற்கரையில் இரவு 7 மணியளவில் அமைதியாக ஆரம்பித்த தீப்பந்த போராட்டம் பண்ணைப் பாலத்தில் இருந்து பண்ணை சுற்றுவட்டம் வரை பேரணியாக சென்றது.

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம் ஏ சுமந்திரன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் எங்கே எங்கே உறவுகள் எங்கே,சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டது. இந்த போராட்டமானது காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு ஆதரவாக முன்னெடுக்கப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# "உள்ளம்" காலாண்டு சஞ்சிகை அறிமுக விழா

ஓமந்தை விஷேட நிருபர்

"உள்ளம்" காலாண்டு இதழ் அறிமுக விழா வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கலாநிதி அகளங்கன் தலைமையில் நேற்று முன்தினம் (17) சிறப்புற நடைபெற்றது. வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் நூலினை அறிமுகம் செய்ய திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள் மற்றும் திருமதி. விஜேந்திரன் தம்பதிகள் நூலின் முதற் பிரதியை பெற்று விழாவை சிறப்பித்தனர்.

நூலிற்கான நயவுரையை 35 இலக்கியச் செயற்பாட்டாளர்கள் நிகழ்த்தியதுடன் 15 வளர்ந்து வரும் கலைஞர்கள் இணைந்து நிகழ்வை தொகுத்து வழங்கினர். நிகழ்வில் 200 வரையான பார்வையாளர்களில் மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினரின் பங்குபற்றல் அதிகமாக இருந்தமை சிறப்பம்சமாகும்.

# ஒஸ்மானியாவில் மூவர் சித்தி

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில், யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் மூவர் சித்தியடைந்துள்ளனர். M.N.M.நாஷிக்170,S.M. ஆஷித்150,M.A.M. அஹ்ஸான்148

ஆகிய மாணவர்களே சித்தியடைந்தவர்களாவர்.அதிபர் K.M.முஹம்மது அனீஸ்,கற்பித்த ஆசிரியர்கள்றிஸானா பர்மின்றியாழ், பாத்திமா ஷப்னா றிஸ்வான் ஆகிய ஆசிரியைகளுக்கும் பொற்றோர்கள் நன்றி தெரிவிக்கின்றனர்.

# செட்டிகுளம் - நேரியகுளத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

வவுனியா விசேட நிருபர்

செட்டிகுளம் நேரியகுளம் பகுதியில் வீட்டில் இருந்து பெண் ஒருவரின் சடலம் செட்டிகுளம் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.நேற்று மதியம் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம், நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சின்னக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கணவன், மனைவி ஆகிய இருவரும் வசித்து வந்த நிலையில் கணவன் வீட்டில் இருந்து தேவை நிமிர்த்தம் காலையில் வெளியில் சென்றுள்ளார். வெளியில் சென்ற கணவன் காலை 11 மணியளவில் வீட்டிற்கு வந்த போது வீட்டில் மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் பொலிசாருக்கு கணவனால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிசார் குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

ஜேசுதாசன் மெட்டிலம்மா என்ற 57 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

# அவுஸ்ரேலியாவில் இருந்து வந்தவர்கள் வீட்டில் திருட்டு

சாவகச்சேரி விசேட நிருபர்

அவுஸ்ரேலியாவில் இருந்து நாடு திரும்பிய தென்மராட்சி மிருசுவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் திருட்டு இடம்பெற்றிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.அவுஸ்ரேலியாவில் இருந்து சொந்த இடமான மிருசுவிலுக்கு தாய்,தந்தை மற்றும் அவர்களுடைய மகன் ஆகியோர் வந்திருந்த நிலையிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

குறித்த மூவரும் ஈஸ்டர் வழிபாட்டுக்காக தேவாலயம் சென்றிருந்த வேளையில் இத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.இதன்போது வீட்டில் இருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம்,3 இலட்சம் பெறுமதியான நகைகள்,பெறுமதியான கையடக்கத் தொலைபேசி,வெளிநாட்டு இனிப்பு வகைகள்,வெளிநாட்டு ஆடைகள் ஆகியனவும் திருடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.இத் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மக்கள் வங்கியின் அனுசரணையில் வாழ்வாதார முயற்சிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்









வவுனியா விசேட நிருபர்

மக்கள் வங்கியின் அனுசரணையில் வாழ்வாதார முயற்சிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.இந் நிகழ்வானது வவுனியா இறம்பைவெட்டி கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இதன்போது, இறம்பைவெட்டி மற்றும் கருப்பனிச்சங்குளம் கிராமங்களின் அபிவிருத்தியினை கருத்திற் கொண்டு முதற்கட்டமாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள முயற்சியாளர்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டதுடன், வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கான உதவித் திட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், குறித்த கிராமத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் கிராம மக்களுக்கு தெளிவுபடுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. இதில், வட பகுதிக்கான அமைச்சுக்களின் இணைப்பாளர் கா. சயந்தகுமார், வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர், மக்கள் வங்கி வன்னி பிராந்திய முகாமையாளர், உதவி பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி வவுனியா கிளை முகாமையாளர், மக்கள் வங்கி ஊழியர்கள், இறம்பைவெட்டி மற்றும் கருப்பனிச் சங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரமுகர்களும் கிராம மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.




# மலையக மக்கள் எதிர்பார்ப்புக்கு இணங்க அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படும்

## இ.தொ.காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

இலங்கை மக்களின் உணர்வுகளையும், மலையக மக்களின் எதிர்பார்ப்புக்களையும் உதாசீனம் செய்துவிட்டு அரசாங்கத்தை காப்பாற்ற வேண்டிய அவசியம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இல்லை என காங்கிரஸின் பிரதி தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார பின்னடைவுக்கும் அரசியல் நெருக்கடிக்கும் காரணமானவர்களை காப்பாற்றுவதற்கு மலையக மக்கள் எமக்கு வாக்களிக்க வில்லை. காலத்தின் தேவைக்கேற்ப மலையக மக்களின் கோரிக்கைக்கு இணங்கி எமது எதிர்கால நடவடிக்கைகள் அமையும். அதனால்தான் அரசியல் நெருக்கடி ஆரம்பிக்கும் முன்பே சர்வகட்சி மகாநாட்டை காங்கிரஸ் புறக்கணித்தது. அதனைத் தொடர்ந்து காங்கிரஸுக்கு வழங்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சுப் பதவியை ஜீவன் தொண்டமான் இராஜினாமா செய்தார். பாராளுமன்றத்திலும்,



பாராளுமன்றத்துக்கு வெளியிலேயும் எமது மக்களின் நலன் கருதி உறுதியான தீர்மானத்தை நாங்கள் எடுப்போம். எவருக்கும் முட்டுக் கொடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. மற்றவர்களைப் போல் பெரும்பான்மைக் கட்சிகளை ஆட்சிபீடம் ஏற்றி அழகு பார்க்க மலையகத்தில் அரசியல் கூட்டங்களை நடத்த வேண்டிய அவசியம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இல்லை.

# பாராளுமன்ற உறுப்பினர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு நிர்வாகத்தை யார் கையில் ஒப்படைப்பது

## கெஹெலிய ரம்புக்வெல்ல

**அக்குறணை குறூப் நிருபர்**

ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட 225 பேரை வீட்டுக்கு அனுப்பி விட்டு நாட்டு நிர்வாகத்தை யார் கையில் ஒப்படைப்பது என முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கேள்வி எழுப்பினார்.

கண்டியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,...

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை சட்டரீதியாகவே கையாள வேண்டுமே தவிர ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவது போல் பாராளுமன்றத்தில் உள்ள 225 பேர் அல்லாத ஒரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. எதிர்க்கட்சி கூறுவதுபோல் அரசுக்கு பெரும்பான்மை இல்லாவிட்டால் அவர்கள் பெரும்பான்மையை நிரூபித்து ஆட்சியை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைப்பதில் எதுவித தடையும் இல்லை. அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.



அதே நேரம் ஆர்ப்பாட்டம் மற்றும் பலவந்தம் ஊடாக ஆட்சி அதிகாரங்களைப் பெற்ற நாடுகளின் இன்றைய நிலையைப் பாருங்கள். ஈரான், ஈராக், சிரியா, லெபனான், லிபியா போன்ற நாடுகளுக்கு தற்போது என்ன நடந்துள்ளது?

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் செய்வோர் புத்திசாலிகள் எனக் கூறிக்கொள்கின்றனர்.

அப்படியாயின் பாராளுமன்றத்திற்குத் தெரிவானவர்கள் அல்லாத ஒரு குழுவால் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளக் கூடிய வழிமுறை ஏதும் இருப்பின் காட்டித் தாருங்கள். அப்படி ஏதும் இல்லை.

ஜனாதிபதியின் அதிகாரத்தையும், பாராளுமன்றத்தையும் கலைத்து விட்டு ஆட்சி அதிகாரத்தை யார் கையில் கொடுப்பது? நாடு அராஜகத்திற்கு செல்ல வழி வகுக்க முடியாது என்றார்.

# பதுளைக்கு எரிபொருள் கொண்டு சென்ற பவுசர் விபத்து



சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்குச் சொந்தமான எரிபொருள் பவுசர் ஒன்று, பதுளை பண்டாரவளை பிரதான வீதியின் உடகும்பல்வெல பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. கொழும்பில் இருந்து பதுளைக்கு எரிபொருளை ஏற்றிச் சென்ற போதே, இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதனால் பதுளையிலுள்ள எரிபொருள் நிலையங்களுக்கு, எரிபொருள் கிடைப்பது மேலும் தாமதமாகலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஹற்றன் மல்லியப்பு சந்தியில் தொடரும் போராட்டம்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

கொழும்பு காலி முகத்திடல் மற்றும் நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டை தெரிவிக்கவும், வலுசேர்க்கவும் நேற்று இரண்டாவது நாளாக ஹற்றன் மல்லியப்பு சந்தியில் போராட்டம் தொடர்கின்றது.

ஜனநாயகத்துக்கான மக்கள் குரல் எனும் தொனிப்பொருளின் கீழ் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து இந்த போராட்டத்தை ஆரம்பித்தனர்.




இந்த நிலையில், நேற்று போராட்டத்தில் மலையக மக்களுக்கு விடிவு கிடைக்க வேண்டும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆளுமை உள்ள அரசாங்கம் உருவாக வேண்டும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மனசாட்சியோடு நடந்துக் கொள்ள வேண்டும், விலை குறை அடுத்த தலைமுறை வாழ வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை காட்சிப்படுத்தினர்.

அத்தோடு, கறுப்பு கொடிகளை ஏந்தியிருந்ததோடு, கோஷங்களையும் எழுப்பியிருந்தனர். பொலிஸாரின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

# கண்டியில் ஹோட்டல் மூன்றாம் மாடியில் தீ பரவல்

கண்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள ஹோட்டலொன்றின் மூன்றாம் மாடியில் ஏற்பட்ட தீ பரவல் கண்டி மாநகரசபையின் தீயணைப்பு படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (17) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு விடுமுறையையொட்டி, குறித்த ஹோட்டல் சில நாட்களாக மூடப்பட்டிருந்ததாகவும் இதன்போது, மூன்றாம் மாடியில் புகை வருவதை அவதானித்த நபர் ஒருவர், கண்டி மாநகரசபையின் தீயணைப்பு படையினருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து தீ ஏனைய இடங்களுக்கு பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை கண்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









புனித நோன்பு தினத்தினை முன்னிட்டு கண்டி மாவட்டத்திலுள்ள விதவைத் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகள் கட்டுகஸ்தோட்டை மாத்தளை வீதியிலுள்ள சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம் ரிஷ்மியின் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது மாத்தளை மாவட்ட வை.எம்.எம்.ஏ பேரவையின் மாவட்டப் பணிப்பாளர்களான பௌஸ் ஏ. காதர், கண்டி மாவட்ட பணிப்பாளர் இஹ்திசாம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்



# கண்டி கெலிஓயா நகரில் பெற்றோலுக்காக போராட்டம்

**கம்பளை நிருபர்**

கண்டி கெலிஓயா நகரில் இருக்கும் பெற்றோல் நிலையத்தில் பெற்றோல், டீசல் இன்மையால் நேற்று அதிகாலை முதல் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மதியம் வரை பெற்றோல் டீசல் கிடைக்காத காரணத்தால் வாகன சாரதிகள் கம்பளை கண்டி பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணித்தியாலம் அப்பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. பாதையை முழுமையாக மறைத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் பேராதெனிய போக்குவரத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடியபின் எரிபொருள் பவுசர் ஒன்றை வரவழைப்பதாக வழங்கிய வாக்குறுதியை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட வாகன சாரதிகள் போராட்டத்தை நிறுத்தியுள்ளனர்.

# ஹற்றன் நகரில் எரிபொருள் தட்டுப்பாடு

ஹற்றன் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசலுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து காணப்படுவதால் நேற்றும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அதிகாலை தொடக்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் நீண்ட வாகன வரிசைகள் காணப்பட்டன.

ஹற்றனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்று முன்தினம் (17) போதியளவு எரிபொருள் தொகை கிடைத்துள்ள நிலையில், எரிபொருளை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்குமாறு, எரிபொருள் கூட்டுதாபனம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் எரிபொருள் நிலைய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மீண்டும் எத்தனை நாட்களுக்குப் பிறகு தமது எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்பது தமக்கே தெரியாதென்றும் முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பதுளை - கொழும்பு பிரதான வீதியை மறித்து பலாங்கொடையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

இரண்டு தினங்களாக எரிபொருள் கிடைக்காமையினால் பொதுமக்கள் பதுளை, கொழும்பு பிரதான வீதியை மறித்து பலாங்கொடை நகரின் தும்பகொடை எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் வீதிக்கு குறுக்கே வாகனங்களை நிறுத்தியும் வீதியில் அமர்ந்தும் கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன் காரணமாக கொழும்பு, பதுளை வீதியில் போக்குவரத்து முற்றாக முடங்கியது. பலாங்கொடை பொலிஸ்நிலைய போக்குவரத்து பிரிவின் பொலிஸார் பொதுமக்களுடன் சமரசத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக பிரதான வீதியில் இரு பகுதிகளிலும் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில் நெருக்கடி ஏற்பட்டது.

இரண்டு எரிபொருள் நிரப்பிய பவுசர்களை பயணிக்க இடமளிக்காமையினால் இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. பவுசரில் உள்ள எரிபொருளினை பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் பொலிஸாரின் உறுதிமொழியை அடுத்து இரண்டு பவுசர்களையும் அவ்விடத்திலிருந்து செல்வதற்கு பொதுமக்கள் இடமளித்தனர்.



புத்தாண்டு சம்பிரதாயங்களில் ஒன்றான நீண்ட ஆயுளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இடம் பெறும் எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு மஹியங்கனை தம்பானை ஆதிவாசிகள் கிராமத்தில் ஆதிவாசிகள் தலைவன் ஊருகே வன்னியலத்தோ தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதன் போது ஆதிவாசிகள் தலைவன் ஊருகே வன்னியலத்தோ தமது இளைய சகோதரன் குனபண்டியா அத்தோவுக்கு எண்ணெய் தோய்த்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். படம்: அக்குறணை குறூப் நிருபர்

# நகர்வலம்



வென்னப்புவ தேர்தல் தொகுதி;

# எரிபொருள் நிலையங்களில் இடைத்தரகர் தலையீட்டினால் மக்களுக்கு பெரும் பாதிப்பு

## நீண்ட கியூ வரிசையில் நின்றும் மக்கள் ஏமாற்றம்!



நீர்கொழும்பு தினகரன் நிருபர்

வென்னப்புவ தேர்தல் தொகுதியிலுள்ள போதலேகம மற்றும் லுணுவில ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோல் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட கியூ வரிசையில் பொது மக்கள் நீண்ட நேரமாக காத்திருந்த போதிலும் இடைத்தரகர்களின் ஆட்கள் மிகவும் சூட்சுமமான முறையில் தமது கொள்கலன்களில் எரிபொருளை நிரப்பி எடுத்துக் கொண்டு செல்வதாகவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதற்கு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர்கள் மற்றும் சேவையாளர்களும் உடந்தையாகவும் செயல்பட்டு வருகின்றனர். இதனால் அன்றாட பயணங்களை மேற்கொள்ளும் பிரயாணிகள், வியாபாரிகள் மற்றும் சிற்றுண்டி கடைகளின் உரிமையாளர்கள் நீண்ட கியூ வரிசையில் நின்றுகொண்டு காத்திருந்த போதிலும் எரிபொருளைப் பெறமுடியாமல் ஏமாற்றமடைந்து வீடு திரும்புகின்றனர். எரிபொருள் கிடைக்காமல் போனதால் மோட்டார் சைக்கிள் பிரயாணிகள் தமது மோட்டார் சைக்கிள்களை மிக நீண்ட தூரத்திற்கு தள்ளிக்கொண்டு செல்ல வேண்டிய நிலைமைகளும் ஏற்பட்டு வருகின்றன. உரிய அதிகாரிகள் இவை தொடர்பாக கவனம் செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர் .

# அமைச்சர் டக்ளஸுக்கு இந்துமத பீடம் ஆசி



ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மீண்டும் ஜனாதிபதியினால் மீன்பிடி தொழில் அமைச்சராக நியமணம் செய்யப்பெற்றமைக்கு சர்வதேச இந்துமத பீட செயலாளர் கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா வாழ்த்துக்களுடன் ஆசிகளையும் தெரிவித்துள்ளார்.

றுகுணு இ.போ.சவினால்

# விசேட பஸ் சேவை 475 பஸ் வண்டிகள் சேவையில்

மாத்தறை தினகரன் நிருபர்

தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின் சொந்த இடங்களிலிருந்து கொழும்பு போன்ற வெளியூர்களுக்குச் செல்வதற்காக இ.போ.சபை விசேட பஸ் சேவையை ஆரம்பித்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் றுகுணு பிரதேசத்தின் பிரதான பிரதேச முகாமையாளர் பிரபாத் குமார தெரிவித்தார்.

பிரயாணிகளின் தேவைக்கு ஏற்ற விதமாக வழமையாக பயணிக்கும் பஸ் வண்டிகளுக்கு மேலதிகமாக இந்த விசேட பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த மாதம் 17,18, 19ந் திகதிகளில் இந்த பஸ் சேவை நடாத்தப்படுகிறது. இலங்கை போக்கு வரத்துச் சபையின் றுகுணு டிப்போக்களின் மூலமாக 475 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளுக்கு அவசியமான எரிபொருள் கிடைத்திருப்பதாகவும் எந்தப் பிரச்சினையும் ஏற்படாதெனவும் தெரிவித்த அவர், கடந்த 09ந் திகதியிலிருந்து றுகுணு பிரதேச பஸ்களின் மூலம் ஒரு கோடி 12 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நிறுத்தி வைக்கப்பட்ட இ.போ.ச பஸ்ஸுடன் கார் மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்



கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மதுரங்குளி கரிக்கட்டை பகுதியில் (17) அதிகாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் ஆபத்தான நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளி கரிக்கட்டை பகுதியில் பயணிகளை இறக்குவதற்காக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றுடன், சொகுசு கார் ஒன்று பின்னால் வந்து மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து நேற்றிரவு மன்னாரை நோக்கிப் பயணம் செய்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் புத்தளம் கரிக்கட்டை பகுதியில் பயணிகள் இறக்குவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது புத்தளம் நோக்கிப் பயணம் செய்த சொகுசு கார் ஒன்று, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குறித்த பஸ் மீது பின்னால் வந்து மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சொகுசு காரின் சாரதி படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் குறித்த சொகுசு காரின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

அத்துடன், விபத்து சம்பவம் தொடர்பில் இ.போ.ச. பஸ்ஸின் சாரதியிடம் வாக்குமூலம் பெறப்பட்டு, அந்த பஸ் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெலிகம பகுதிகளில் இன்று பத்ர் தினம் அனுஷ்டிப்பு

வெலிகம தினகரன் நிருபர்)

பத்ர் ஸஹாபாக்கள் தினத்தையொட்டி ரமழான் பிறை 17 ஆகிய இன்றைய தினம் வெலிகம பகுதியிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் ஸாவியாக்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. விசேட பயான் நிழச்சிகள், இப்தார், மௌலூத் மஜ்லிஸ் என பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் கொரோனா தாக்கத்தினால் பத்ர் ஸஹாபாக்கள் தினம் அனுஷ்டிக்கப்படவில்லை. அதனால் இம்முறை தென் மாகாணத்தின் பல பகுதிகளிலும் பத்ர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

# தென் கிழக்கு பல்கலைக்கு தெரிவு



நீர்கொழும்பு தினகரன் நிருபர்

நாத்தாண்டிய, இஹல கொட்டராமுல்லையைச் சேர்ந்த அல் ஆலிம் எம். எஸ்.எம் ஸஜ்ஜாத் (கபூரி) இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பைத் தொடர தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொட்டாரமுல்ல அல்ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை கல்வியையும், மகரகம, கபூரிய்யா அரபுக் கல்லூரியில் அல் ஆலிம் மற்றும் க.பொ .த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் கல்வியையும் இவர் பூர்த்தி செய்துள்ளார்.

உயர் தர பெறுபேறுகளின் அடிப்படையில் அவர் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு மேற்படிப்பைத் தொடர தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியத்தின் மதச் சார்பற்ற சமூகத்தின் உறுப்பினராகவும். ஐ.எப்.ஈ. நிறுவனத்தின் புத்தளம் மாவட்ட ஆண்கள் பிரிவின் ஒருங்கிணைப்பாளராகவும், ஜே.எம்.ஆர். நிறுவனத்தின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளராகவும் கடமையாற்றும் இவர், கொட்டராமுல்லையைச் சேர்ந்த எம். ஐ.எம். சரீப் மற்றும் ஹைருன் பாரிகா ஆகியோரின் மூத்த புதல்வர் ஆவார் .

# இறந்த நிலையில் யானையின் சடலம் மீட்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

யால தேசிய சரணாலயத்தின் பாதைக்கருகாமையில் இறந்திருந்த யானை ஒன்றின் சடலத்தினை வனசீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உடவலவை யானைகள் பராமரிப்பு நிலைய மிருக வைத்தியர்களினால் மேற் கொள்ளப்பட்ட மரண பரிசோதனையின்போது யானையின் உடம்பில் முகம் மற்றும் நெஞ்சுப் பிரதேசங்களில் துப்பாக்கியால் சுடப்பட்ட சூட்டுக் காயங்களுக்குள்ளாகி இந்த யானை இறந்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மேலும் யால வாவிக்கு அருகாமையில் இன்னுமொரு யானையின் சடலமும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த சடலம் அழுகிய நிலையிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சரணாலயத்தினுள் சட்டவிரோதமான முறையில் வேட்டையாடுவதில் ஈடுபட்டிருந்த மூவரை இதன் போது கைது செய்ததாகவும் வனசீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தூபிக்கு மேல் ஏறி எதிர்ப்பு தெரிவித்த நபர் கைது

## ஜேத்தவனாராம புனித பூமி பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் புனித பூமியில் அமைந்துள்ள ஜேத்தவனாராம தூபிக்கு மேல் ஏறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆரக்ஷக நியாமக்க) ஒருவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புனித பூமி ஜேத்தவனாராம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 46 வயதுடைய மத்திய கலாசார நிதியத்தின் கீழ் கடமை புரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்பது தெரியவந்துள்ளது.

எதற்காகவேண்டி தூபிக்கு மேல் ஏறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார் என பொலிஸாரால் வினவப்பட்டபோது அவர், ரஷ்யாவினால் உக்ரைனுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள போரினை நிறுத்த வேண்டும் என்பதற்காக வேண்டி என அவர் தெரிவித்துள்ளார்.

தூபியிலிருந்து பாதுகாப்பான முறையில் கீழே இறக்கப்பட்ட நபர் மனநிலை பாதிப்பினால் இவ்வாறு நடந்துகொண்டாரா என்பதை அறிந்து கொள்வதற்காக வேண்டி குறித்த நபர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை;

# நளீம் ஹாஜியார் தேசிய பாடசாலை 15 மாணவிகள் சிறந்த பெறுபேறு


மர்யம் ஸிம்னா (179 புள்ளிகள்)


பாத்திமா ஷைரீன் (173 புள்ளிகள்)


பாத்திமா ஹப்ஸா (172 புள்ளிகள்)


பாத்திமா மனார் (169 புள்ளிகள்)


பாத்திமா லீனா (169 புள்ளிகள்)


ஆயிஷா ரஹ்மத் (166 புள்ளிகள்)


ஆயிஷா மர்யம் (161 புள்ளிகள்)


பாத்திமா இம்லா (159 புள்ளிகள்)


பாத்திமா அப்தா (158 புள்ளிகள்)


இஸ்ஸத் ரிஷாதா (155 புள்ளிகள்)


பாத்திமா அமானா (154 புள்ளிகள்)


பாத்திமா நுஹா (153 புள்ளிகள்)


பாத்திமா குல்தூம் (153 புள்ளிகள்)


பாத்திமா ஸலாமத் (152 புள்ளிகள்)


நஸ்ஹத் ஆயிஷா (149 புள்ளிகள்)

அண்மையில் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலையில் 15 மாணவிகள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவ்வாறு புகழ் ஈட்டிக்கொடுத்த மாணவிகளை அதிபர் எம்.என்.எப். பஹீமா பாயிஸ், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் பாராட்டியுள்ளனர்.

படங்கள்: பேருவளை விசேட நிருபர்



கொடிகாவத்தை கேம்பல் சர்வதேச பாடசாலையின் வருடாந்த சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வைபவம் அண்மையில் பாடசாலை வளாகத்தில் அதிபர் திருமதி ஷர்மைன் பிரேமலால் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதை படங்களில் காணலாம். படம்: ருஸைக் பாரூக்

# கிழக்கின் குரல்



## புற்று நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் அதிகரிப்பு

**(முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)**

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமூடாக இது வரை காலமும் புற்று நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, நோயின் தன்மையின் அடிப்படையில் 3000 ரூபா தொடக்கம் 5000 ரூபா வரை வழங்கப்படவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு இக்கொடுப்பனவுகள் நேற்று (18) வழங்கப்பட்டன. குறித்த கொடுப்பனவுகளை பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி வழங்கி வைத்தார். சுமார் 25 பயனாளிகளுக்கு இதன்போது கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

## ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது

**(ஹஸ்பர்)**

ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் ஞாயிற்றுக்கிழமை (17)இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாறப்பட்டுள்ளது. இருபதாவது திருத்த சட்டத்துக்கு ஆதரவளித்த எம்பிக்களுக்கு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர். ஆனால், எதுவும் நடைபெறவில்லை.



மீண்டும் நிதிச் சட்டமூலம், வரவுசெலவு திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

ஆனால், நான்கு மாதங்கள் கடந்தும் எதுவும் நடக்கவில்லை. சில அரசியல் வாதிகள் சிங்கள மக்களை ஏமாற்றுவதைப்போல, முஸ்லிம்களை சிலர் ஏமாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## எரிபொருளை பதுக்கி வைப்போரை கைது செய்ய பொலிஸார் ஏற்பாடு

**(ஒலுவில் விசேட நிருபர்)**

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருப்பவர்களை கைது செய்வதற்கு, திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம். சதாத் தெரிவித்தார்.

இச்சோதனையின் போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரசஉடமையாக்கப்படுவதுடன், உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தொடர்ச்சியாக மக்களின் நீண்ட வரிசை காணப்படுகின்றது. இதற்கு காரணம் சிலர் எரிபொருளை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்து பதுக்கி வைப்பதே. இதுபற்றி பல தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு எரிபொருளை பதுக்கி வைத்திருப்போர் சம்மந்தமாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## குமுக்கன் ஆற்றங்கரையில் 210 சித்தர்களுக்கு அற்புத வேள்வி



**( காரைதீவு குறூப் நிருபர் )**

அகிலத்தை ஆளுகின்ற 210 சித்தர்களை வேண்டி, கிழக்கின் தென்கோடியிலுள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் அருள் பாலிக்கும் காளியம்மனுக்கு, அற்புத வேள்வி நடாத்தப்பட்டது.

சித்ரா பௌர்ணமி அன்று(17) சித்தர்களின் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் இந்த யாகம் சிறப்பாக நடைபெற்றது. நாள் முழுவதும் நிறைவான அபூர்வ மூலிகைகளால் ஒரு அற்புத வேள்வி, ஆயிரக்கணக்கில் மந்திர ஜெபம், பல மணி நேர அபிஷேகம், நிறைவான வன போஜனமும் இங்கு வழங்கப்பட்டது.

பூரண ஒத்துழைப்பு தந்த சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணை தலைவர் மகேஸ்வரன் சுவாமிகள், சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள், விவே, விஷோ பிரசாத், டிரோன் மற்றும் பூரண பாதுகாப்பு வழங்கிய குமண சரணாலய வனத்துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## மகன் தாக்கியதில் தந்தை மரணம்

**(ரொட்டவெவ குறூப் நிருபர் )**

மகன் தாக்கியதில், தந்தை உயிரிழந்த சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது. இச்சோக சம்பவம் திருகோணமலை பாலத்தடிச்சேனை பகுதியில் நேற்றிரவு (18) இடம் பெற்றுள்ளது.

முருகப்பிள்ளை கைலாசப்பிள்ளை (59 வயது) என்பவரே மகனின் தாக்குதலில், உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது ஏற்கனவே குடும்பத் தகராறில், மகன் தனது தந்தையை தாக்க முற்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்றிரவு மதுபோதையில் வந்த மகன், உறங்கிக்கொண்டிருந்த தந்தையை தாக்கியதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின்பேரில், மகன் கே.வினோதன் (29வயது) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்ல மூதூர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

## சமூக நீதிக் கட்சியின் கலந்துரையாடல்

**(அக்கரைப்பற்று வடக்கு நிருபர்)**

நாட்டின் தற்கால சூழ்நிலை குறித்த சமூக நீதி கட்சியின் அரசியல் கலந்துரையாடல், வெள்ளிக்கிழமை (15) மருதமுனையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி. ருடானி சாகிரின் ஏற்பாட்டில், இது நடைபெற்றது.கட்சியின் மருதமுனை அமைப்பாளர் மின்ஹாஜின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கட்சியின் தலைவர் நஜா முகம்மட், செயலாளர் சிராஜ் மசூர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸஆகியோர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில், தற்கால அரசியல் நிலைமைகள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டுவது சம்பந்தமாகவும், சமூக நீதிக் கட்சியின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும் விரிவான பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

## வீதிகள்,வீடுகளுக்கருகில் மரங்கள் காணப்படுவதால் பயணிகள் அவதி

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது,கல்முனை ,மருதமுனை ,பாண்டிருப்பு ஆகிய இடங்களிலுள்ள உள்ளூர் வீடுகளுக்கு அருகில் வளர்ந்து காணப்படும் மரங்களினால் வீதியில் பயணிகளும் , பொது மக்களும், வாகன சாரதிகளும் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த பல வருடங்களாக வீதிகளுக்கு அருகாமையில் உள்ள வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில், நடப்பட்ட மரங்கள் தற்போது வளர்ந்து அவற்றின் கிளைகளும் இலைகளும் வீதியில் மத்திய பகுதிக்கு வந்துள்ளன. இதனால்,விஷேடமாக தென்னை மரங்களிலிருந்து திடீரென விழும் தேங்காய், காய்ந்த ஓலைகள், மற்றும் பாளை என்பவற்றால் வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி, உபாதைக்கும் உள்ளாகின்றனர்.

அண்மையில் இவ்வாறான சம்பவம் நிகழ்ந்ததால் யாழ்ப்பாணத்தைச் சேரந்த ஆசிரியரொருவர் உயரிழந்தமை தெரிந்ததே.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பொது மக்கள் கேட்டுள்ளனர்.

## இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் விஷேட கூட்டம்

**(பெரியநீலாவணை விஷேட நிருபர்)**

இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவையின் விஷேட கூட்டம் மருதமுனை அல்மதீனா வித்தியாலையத்தில் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் ஏ.எல். அப்றித் அஹமத்தின் ஏற்பாட்டில் (16) நடைபெற்றது.

இதன்போது பேரவைக்கு சமாதான நீதிவான்களை உள்வாங்குதல், பேரவையின் எதிர்கால திட்டம் மற்றும் மக்களுக்கான சேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மருதமுனையின் சில சமாதான நீதவான்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில்,

ஊடகவியலாளரும் இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் தேசியப் பணிப்பாளருமான அல்ஹாஜ் டாக்டர்.பஹத் ஏ.மஜீத், பிரதி தேசியப் பணிப்பாளர் டாக்டர்.எம்.ஐ.பௌசில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சேவைநலன் பாராட்டு விழா புலமையாளர்கள் கௌரவிப்பு

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அட்டாளைச்சேனை கல்விக் கோட்டத்திலுள்ள பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி

ஏற்பாடு செய்த சேவைநலன் பாராட்டு விழா, ஒலுவில் கிறீன்வில்லா வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி அதிபர். எஸ்.எம்.ஸாஹிர் ஹூஸைன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், சேவையிலிருந்து ஓய்வு பெற்ற, முன்னாள் கல்லூரி பிரதியதிபர் ஏ.எல். கே.முகம்மட் உள்ளிட்ட இடமாற்ற ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஓய்வுநிலை பிரதியதிபர், இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த ஏ.எல்.கே.முகம்மட் தனது சேவைக்காலத்தில் பாடசாலைக்கு ஆற்றிய அரும்பணிகள் தொடர்பில் அதிதிகள் சிலாகித்து உரையாற்றினர்.

நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் ஏ.ஜி.பஸ்மில், எம்.எம்.சித்தி பாத்திமா, உதவிக் கல்விப்ப ணிப்பாளர் எம்.ரி;. ஜனுபர், ஆசிரிய ஆலோசகர் ஏ.ஜி.சமூர் ஆகியோர் ஏனைய அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.




## திருக்கோவில் கல்வி வலய சகல பாடசாலைகளும் நேற்று ஆரம்பம்



**(வாச்சிக்குடா விஷேட நிருபர்)**

சித்திரைப்புத்தாண்டுக்காக (04) முதல்பாடசாலைகளுக்குவிடுமுறை வழங்கப்பட்ட நிலையில், இவ்வருட முதலாம் தவணைக்காக நேற்று மீண்டும் பாடசாலைகள் திறக்கப்பட்டன. அதிகமான மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளித்த நிலையில் கற்றல் செயற்பாடுகளும் இடம்பெற்றன. இதற்கமைவாக ஆலையடிவேம்பு கல்வி கோட்டத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலைக்கு மாணவர்கள் ஆர்வத்துடன் சமுகமளித்ததை காண முடிந்தது.

## பெரியபிள்ளையார் ஆலயத்தில் முதற் தடவையாக சித்திர தேரோட்டம்

**(வாச்சிக்குடா விஷேட நிருபர்)**

வரலாற்றுச் சிறப்புமிகு அக்கரைப்பற்று கருங்கொடித்தீவுறை அருள்மிகு பெரிய பிள்ளையார் ஆலயத்தில் (ஸ்ரீ சித்திவிநாயகர் மகாதேவஸ்தானம்) வரலாற்றில் முதற்தடவையாக சித்திர தேரோட்டம் நடைபெற்றது.



சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழாவின் முன்னிட்டதாக 21 அடி உயரமாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரோட்டத்திற்கான வெள்ளோட்டம் இடம்பெற்ற நிலையில், மறுநாள் காலை தேரோட்டத்திற்கான விசேட பூஜைகள் வசந்த மண்டபத்தில் இடம்பெற்றது.இதன்பின்னராக விநாயகப்பெருமான் அழகிய தேரில் எழுந்தருளி; உள்வீதிவலமாக அடியார்கள் தூக்கிச் செல்லப்பட்டார்.

21 அடி உயரத்தில் ரூபா 45 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் எழுந்தருளிய சித்திவிநாயகப்பெருமானை, அடியார்கள் புடைசூழ்ந்து வடம்பிடித்து இழுத்துச் சென்றனர்.

பக்தர்களின் அரோகரா முழக்கங்களுக்கு மத்தியில் மங்கள வாத்தியம் முழங்க இந்த தேரோட்டம் நடந்தது. இதில்,பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சிவபூமி என அழைக்கப்படும் அக்கரைப்பற்று பதிதனில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் பெரிய பிள்ளையார் ஆலயத்தின், சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவம் கடந்த,04ஆம் திகதி வாஸ்த்து சாந்தி கிரியைகளுடன் ஆரம்பமாகி 05ஆம் நடைபெற்ற கொடியேற்றம் 14ஆம் திகதிவரை இடம்பெற்றன.

ஆலய தலைவர் மு.கு.வடிவேல் தலைமையில் இடம்பெற்ற சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழா கிரியைகள் யாவும், உற்வசகால பிரதமகுரு பிரதிஷ்டா இளவரசன் பிரதிஷ்டா கலாநிதி தற்புருச சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முகவசந்தன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றதுடன் சர்வ சாதகாசிரியராக சிவஸ்ரீ ந.கு.பத்மநிலோஜ சிவம் கலந்து கொண்டார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த அமரத்துவமடைந்த ஊர்ப்போடியாரும் ஆலய முன்னாள் தலைவருமான சிவஞானமூர்த்தியின் புதல்வியும், புலம்பெயர்ந்து வாழ்பவருமான ரோகினி சிங்கராசா, இந்த சித்திரத்தேரை ஆலயத்திற்கு உபயமாக பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## மீனவ குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள்

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடியில் தேவையுடைய 24 மீனவ குடும்பங்களுக்கு ரூபா 2000 பெறுமதியான உலர் உணவு பொருட்கள் நேற்று (18) வழங்கப்பட்டன.

இதன்போது,இப்தார் நிகழ்வும் இடம்பெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 1992ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரம், உயர் தர வகுப்பு மாணவர் சமூகத்தின் தலைவரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான கலீலுர் ரஹ்மான் தலைமையில்

இந்நிகழ்வு பூநொச்சிமுனையில் இடம்பெற்றது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 1992ம் ஆண்டு கல்விப் பொதுத் தரதரரம் மற்றும் உயர் தர வகுப்பு மாணவர்களின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

## சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்

**(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)**

அட்டாளைச்சேனை, கோணாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஏ.எல்.றியாஸ் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயம் மற்றும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைகளின் பழைய மாணவரான இவர், செக்டோ ஸ்ரீலங்கா அமைப்பின் தலைவராகவும், அல்நஜா விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகருமாவார். மேலும் பாடசாலை அபிவிருத்திக் குழு, கிராம அபிவிருத்திச் சங்கம், சிவில் பாதுகாப்புக் குழு, விளையாட்டுக் கழகங்கள் என பல்வேறு பொது அமைப்புக்களில் பதவிகளை வகித்து, அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இவர், பெரும் பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊடகவியலாளர் றியாஸ், அட்டாளைச்சேனையைச் சேர்ந்த ஐ.எல்.ஆதம்லெப்பை, எம்.கதீஜாஉம்மா ஆகியோரின் புதல்வராவார்.

## பஸ்வண்டி, முச்சக்கரவண்டி மோதி விபத்து, நால்வர் காயம்



**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதி ஆரையம்பதி பாலமுனை சந்தியில், தனியார் பஸ்வண்டியும் முச்சக்கரவண்டியும் மோதியதில் (17) நால்வர் படுகாயமடைந்தனர். சிகிச்சைக்காக, இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# விபுலாநந்த அடிகளாரின் 98வது துறவற தினம்

**காரைதீவு குறூப் நிருபர்**



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில்,சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம் நடாத்திய சுவாமி விபுலாநந்தரின் 98வது துறவற தின விழா, சித்ரா பௌர்ணமி தினத்தில் ( 16) காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில், திருமுன்னிலை அதிதியாக சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் நந்தி கொடி ஏற்றி ஆசியுரை வழங்கினார்.

பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ இ.மகேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ சி. சாந்தரூபன் குருக்கள், சிவஸ்ரீ ந.பத்மலோஜன் சர்மா, சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா ஆகியோர் கலந்து கொண்டு வேதபாராயணம் ஓதி சிறப்பித்தனர்.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி புளொரன்ஸ் பாரதி கென்னடி பங்கேற்றார்.

சிறப்பு அதிதிகளாக தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சைவப்புலவர் சு.துஷ்யந்தன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக சுவாமி பிறந்த இல்லத்தில் விஷேட பூசை நடைபெற்றது. பின்னர் சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, காவி வஸ்திரம் போர்க்கப்பட்டு, துறவற கீதம் இசைக்கப்பட்டது. அரங்கில் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் மேடையேறின.

மாவட்ட செயலக இந்துசமய கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

## அல்ஜெஸீரா மகளிர் அரபுக் கல்லூரியில் சமூக ஒன்றுகூடலுடன் இப்தார் நிகழ்வு



**கிண்ணியா நிருபர்**

'முஸ்லிம் ஹேன்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்ஹ் ஏ.ஆர். நஸார் தலைமையில், (14) அல்ஜெஸீரா மகளிர் அரபுக்கல்லூரியில் பிரதேச தலைமைகளின் ஒன்று கூடலுடன் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எம்.நிவாஸ்,கிண்ணியா பிராதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ். நஸீர் ஆசிரியர்,கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி ஆகியோருடன் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வை அல்ஜெஸீரா அரபுக் கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பள்ளிவாசல்களில் புனித "லைலத்துல்" இரவை கழிப்பதற்கான ஏற்பாடுகள்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் புனித லைலத்துல் கத்ர் இரவை அனுஷ்டிப்பதற்கான துரித ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

லைலதுல் கத்ர் இரவு ஒற்றைப்படை நாட்களில் அனுஷ்டிக்கப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும் பெரும்பாலும் ரமழான் மாதத்தின்27ஆம் இரவிலே அனுஷ்டிக்கப்படுகிறது.

இவ்விரவில் குர்ஆன் ஓதுதல், திக்ர்செய்தல், இஃதிகாப் இருத்தல்,கியாமுல்லைல் தொழுகையில் ஈடுபடுதல் என்பவற்றில் முஸ்லிம்கள் ஆர்வம் காட்டுவர்.

இவ்விரவில் கேட்கும் துஆக்கள்அங்கீகரிக்கப்படுமென கூறப்படுவதால் மக்கள் பெரும்பாலும் நோன்பு 21, 23, 25, 27ஆகிய தினங்களில் பள்ளிவாசல்களில் தங்கியிருந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

## பிரதி சபாநாயகர் தெரிவின் போது, கட்சியின் தீர்மானத்துக்கு அமைய வாக்களிப்பேன்

**கிண்ணியா மத்திய நிருபர்**



பாராளுமன்றத்தில் இடம்பெறவுள்'ள பிரதி சபாநாயகர் தெரிவின் போது, கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டு, தலைவர் ரவூப் ஹக்கீமின் தீர்மானத்திற்கமைய வாக்களிக்கப் போவதாக திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தினை (17) அவர் தனது உத்தியோக பூர்வ முகநூல் பக்கத்தில் வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, அரசாங்கத்துக்கு, இது கால வரைக்கும் வழங்கி வந்த ஆதரவை விலகிக்கொள்வதாகவும் கடந்த வாரம் அவர் தெரிவித்திருந்தார்.

அரசியலமைபப்பின் 20 ஆவது திருத்தம், பெசில் ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்ட நிதி சம்மந்தப்பட்ட பிரேரணை மற்றும் 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பு ஆகியவற்றுக்கே அரசாங்கத்துக்கு வாக்களித்ததாகவும், இனிவரும் காலங்களில் இவற்றைச் செய்யப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிராந்தியத்தில் மருந்து தட்டுப்பாடு இல்லை

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் ஏற்படவில்லையென,கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியால், மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் தவிர்க்க முடியாதது.இச்சூழலில், கல்முனை பிராந்தியத்தில், மிகுந்த சிரத்தையோடு இம்மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்திக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.எனவே,வைத்தியசாலைகளில் இதுவரை மருந்து தட்டுப்பாடு ஏற்படவில்லையெனவும், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் அதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், நோயளிகளுக்கு கிரமமான முறையில் மருந்துகள் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

எவ்வாறான இடர்கள் ஏற்பட்டாலும் வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் வழமை போன்று வழங்கப்படுமெனவும், இதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளிகள் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டாமெனவும் கேட்டுள்ளார்.

## அம்பாறை மாவட்ட மக்களுக்கு ஆறு தொன் பேரீச்சம்பழம் விநியோகம்

**நூருல் ஹுதா உமர்**

அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ பொதி வழங்கும் செயற்றிட்டம் தொடர்ந்து மூன்றாவது வருடமாக இவ்வாண்டும் கல்முனை யன்ஸ் போரமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கல்முனையன்ஸ் போரம் விடுத்த வேண்டுகோளுக்கமைய 3.6 மில்லியன் ரூபா பெறுமதியான 6000 கிலோகிராம் பேரீச்சம்பழ தொகு திநன்கொடையாக வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புக்களூடாகவும், பள்ளிவாசல் நிருவாகத்தினர் ஊடாகவும் இணங்கானப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு இப்பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன. நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிருவாகத்தினர் மற்றும் கல்முனையன்ஸ் போரத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உயிர்த்த ஞாயிறு ஆராதனை



**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

உலக மீட்சிக்காக இயேசுபிரான் தன்னை சிலுவையில் பலியாக்கி மனுக்குலத்தின் மீட்சிக்காக உயிர்ப்புப் பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு ஆராதனை, சனிக்கிழமை நள்ளிரவு மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, தேவாலய பங்குத் தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் மற்றும் அருட்தந்தை ஏ.ஜே. மொறாயஸ் ஆகியோர் சிறப்பு திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

ஆராதனையில் கலந்து கொண்ட அடியார்களை ஆயர் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் ஆசீர்வதித்தமை குறிப்பிடத்தக்கது.

## கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு விழிப்புணர்வு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

இள வயதில் கர்ப்பமடைவதை குறைத்தல் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி அண்மையில் வரிப்பத்தாஞ்சேனை மருத்துவ நிலையத்தில் இடம்பெற்றது.

சிறுவயதுத் திருமணம் மற்றும் முன்கூட்டிய கர்ப்பத்தைத் தடுப்பது, ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

இந்நிகழ்வில் பேராதனை குழந்தைகள் நலன் பாதுகாப்பு அதிகாரி .எம்.எச்.வஹாப் , பிரதேச குழந்தை நலன் அதிகாரி ஆதம் இம்தாத் உட்பட வைத்தியசாலை உத்தியோஸ்தர்கள் மற்றும் பெண்களும் கலந்து கொண்டனர்.

## எரிபொருள் விநியோகத்தில் பொறிமுறை அவசியம்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனைப் பிரதேசத்தில் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், விற்பனை நிலையங்களில் பெரும்கியூவில் நின்று பல மணித்தியாலம் கழித்த பின்பே மக்கள் பெற்றோலை பெற்றுச்செல்லுகின்றனர்.

கலன்களில் பெற்றுச் செல்லும்முறை நிறுத்தப்பட்டாலும் கியூவில் நின்று பெற்றோல் பெறுவதற்கு நீண்டநேரம் செல்வதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, சில இடங்களில் கடைகள், வீடுகளில் கூடிய விலையில் தனியார் பெற்றோல் விற்பதாகவும் அறியக்கிடக்கிறது.

மத்தியமுகாம், சவளக்கடை, நற்பிட்டிமுனை மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது பெற்றோல் நிலையங்களில் அடிக்கடி பெற்றோல் வழங்கப்படினும் நீண்ட கியூவில் மக்கள் நின்று பெற்றோல் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எனவே பெற்றோல் விற்பனையில், பொறிமுறை ஏற்படுத்தப்படல் வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டக்களப்பு மாநகர சபைக்கு ஜேர்மன் எம்,பி நல்லெண்ண விஜயம்

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**



ஜேர்மனின் வெவேரியன் பாராளுமன்ற உறுப்பினரும் ஜேர்மன் முனிச் நகரத்தின் முன்னாள் முதல்வருமான ஹெப் மொணாட்செடர், மட்டக்களப்பு மாநகரசபைக்கு நண்லெண்ண விஜயத்தை (16) மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள், பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் பிரகாஷ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

முனிச் நகரத்தின் முதல்வராக இருந்த காலத்தில், மட்டக்களப்பு மாநகரசபையுடன் இணைந்து,இவர் செயற்படுத்திய வேலைத்திட்டங்களையும் மொணாட்செடர் மீளாய்வு செய்தார்.

மாநகரசபைக்கு வழங்கப்பட்ட அலுவலக பஜிரோ வாகனம் உள்ளிட்ட கனரக வாகனங்களையும் பார்வையிட்டு மாநகர சபையின் நினைவுப் பதிவேட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

சுனாமியினால் தாய், தந்தை மற்றும் கணவனை இழந்த பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு ரூபா 26 மில்லியன் செலவில் 2008 இல் திராய்மடுவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மற்றும்

மாநகரசபையில் பணிபுரிந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட,தொழிலாளர்களுக்கென சத்துருக்கொண்டானில் வழங்கப்படடிருந்த வீட்டுத் திட்டங்களையும் பார்வையிடுவதற்கு கள விஜயத்தையும் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## புனித ரமழான் ஹிஸ்பு மஜ்லிஸ்

பேருவளைவிசேட நிருபர்



புனித ரமழானை முன்னிட்டு பேருவளை சீனன் கோட்டை பெரு கமலை ஸாக்கிரீன் ஜூம்ஆ பள்ளிவாசலில் நடைபெறும் ஹிஸ்பு மஜ்லிஸில் இம்முறை பிரதேசத்தை சேர்ந்த 90 சிறுவர்கள் பங்குபற்றுகின்றனர்.

பள்ளிவாசல் பிரதம இமாம் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ஹூமைதி) உதவி இமாம் மௌலவி முஹம்மத் ரிஸ்கி (ஹிழ்ரி) ஆகியோரின் தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸில் பங்குபற்றும் சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் ரமழான் 14 ஆம் நாள் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸின் போது மபாஹிம் பாஸி ஒரு சிறுவருக்கு 500 ரூபா வீதம் பண அன்பளிப்பை வழங்கினார்.

புனித ரமழான் மாத இரவு நேரத்தை வீணான கேளிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபடாது புனித அல் குர்ஆனை ஓதும் ஹிஸ்பு மஜ்லிசில் பங்குபற்றுவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

பேருவளை பகுதியில் உள்ள எந்த ஒரு பள்ளிவாசலிலும் இவ்வாறான கூடுதலான தொகை சிறுவர்கள் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸில் பங்குபற்றுவதாக அறிவதற்கில்லை. அந்த வகையில் எமது பிரதேச சிறுவர்கள் 90 பேர் வகையில் அல் குர்ஆன் அருளப்பட்ட புனித மாதத்தில் குர்ஆனை ஓதுவதற்கு ஒன்றுசேர்ந்துள்ளதை பெரிதும் பாராட்டுகிறேன் என அதிபர் மௌலவி எஸ்.எச்.எம் இம்ரான் (ஹூமைதி) இதன் போது குறிப்பிட்டார்.


**பொருட்கொள்வனவு அறிவித்தல்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

N- 42

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் இந்தியாவின் உற்பத்தியாளர்கள் (இந்திய கிரடிட் லைன் நிறுவனத்தினால் நிதியளிக்கப்படுவதினால்) அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**White Printing Paper-17"-70 GSM**

| | |
|---|---|
| Material | : White Printing Paper |
| Quality | : Wood Free & Surface Sized |
| Substance | : 70±2.5% GSM |
| Width | : 17" |
| Quantity Required | : 200 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : S.I. 2022/08 |
| Bid Fee | : Rs. 15,000.00 |

**White Printing Paper-25"x35"-70 GSM**

| | |
|---|---|
| Material | : White Printing Paper |
| Quality | : Wood Free & Surface Sized |
| Substance | : 70 ± 2.5% GSM |
| size | : 25"x35" |
| Quantity Required | : 200 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : S.I. 2022/10 |
| Bid Fee | : Rs. 15,000.00 |

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.05.11.ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலை மனுக்கள் திறக்கப்படும்.

**Pre-bid meeting- 2022.04.26 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு இல.118, டனிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு 08. இல் அமைந்துள்ள அரச அச்சுத்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.**

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன், அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி.ப.2 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமானவிண்ணப்பத்தின் பேரில்கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை உரிய விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை, கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருட்கொள்வனவுக் குழுத் தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளங்கள்: www.documents.gov.lk**
**2022.04.08**


# இலங்கை குமரித் தமிழ் பணி மன்றத்தின் கலைஞர் கௌரவிப்பு



காடுகள் தம்பாட்டுக்கு வளரக் கூடியவை. ஆனால் தன் மேனியில் சுமந்து வருகின்ற அந்த நதியை ஒரு போதும் நம்பி இருப்பதில்லை. கிளிநொச்சிக் காடுகளின் சிறப்புக்களின் தன்மை அது.கனகராயன்குளம் வற்றிப் போனாலும் எமது காடுகள் காய்வதில்லை. அது தான் கிளிநொச்சியினுடைய சிறப்பு. அப்படித் தான் இங்கு வாழும் மனிதர்களும் சான்றோர்களும்உள்ளனர்என்றுகவிஞரும் எழுத்தாளருமான வண. முனை. து. சி. யோசுவா அடிகளார் தெரிவித்தார்.

இலங்கை குமரித் தமிழ் பணி மன்றம் நடாத்தும் முற்போக்கு சீர்திருத்த சிந்தனையாளரும் சமூகப் பணியாளரும் கலைஞருமான அமரர் நா. வை.குகராசா மணிவண்ணன் நினைவு நிகழ்வும் கலைஞர்கள் கௌரவிப்பு , பல்கலை புகு மாணவர்கள் கௌரவிப்பு , கலாபூசணம் நா. வை. குமரிவேந்தன் எழுதிய நூல் வெளியீட்டு விழா , பொது நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்தல் முதலிய நிகழ்வுகள் ஏ 9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் கவிஞரும் எழுத்தாளருமான வண. முனை. து. சி. யோசுவா அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது தலைமையுரையாற்றும் போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.











இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், திருகோணமலை தென்கயிலை ஆதின குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார், கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பண்பாட்டலுவல்கள் அதிகாரி பொன். இராசதுரை, கிளிநொச்சி தெற்கு வலயக் உதவிக் கல்விப் பணிப்பாளர் பழனீதரன், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையின் திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதில் கலைஞர்கள் மூத்த குடிகள், சமூகத் தொண்டர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர். சமூகத் தொண்டர் வே. சிதம்பரநாதன், கலாபூசணம், இரா. அ. இராமன், சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி , வளவை வளவன் மா. செல்லத்தம்பி, கலாபூசணம் இ. நடராசா, வள்ளுவதாசன் நா. சிவராசா, அண்ணாவியார் அ. அமிர்தநாயகம், திருவேணிசங்கமம் சோ. செல்வராணி, கை மணியம் நா. முருகானந்தம், பார்வதி நல்லதம்பி. கவிதா சண்முகநாதன், ச.மு.அருளம்பலம் இன்னும் பல்துறை சார்ந்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அடிகளார் தொடர்ந்தும் பேசுகையில்,..

இந்த அரங்குக்குள் வருகின்ற போது ஒரு மலர் கூட்டத்திற்குள் அல்லது ஒரு பூந்தோட்டத்திற்குள் உள் நுழையும் போது நுகர்ந்து கொள்ள முடிகின்ற தன்மை ஏற்படுகின்றது. ஏனென்றால் வாசமில்லாத மலர்கள் பூந்தோட்டத்தில் நிறைய இருக்கக் கூடும்.

எல்லா வாசமலர்களையும் வேரறாமல் கொண்டு வந்திருக்கின்றார்கள். அது தான் இந்த தமிழ் மணி மன்றத்தின் சிறப்பு.

கிளிநொச்சிக்கு ஒரு அடையாளம் உண்டு. கிளிநொச்சியில் சிறந்த அடையாளம் வளர்க்கப்படாத காடுகள். தான் தோன்றிய மரங்கள், தான் தோன்றிய காடுகள். அவைகளே விருசட்ங்கள்.

மலர்களின் வாசம் மட்டுமல்ல இந்த நிகழ்வுகளுடைய சிறப்பு மரங்களின் விருட்சங்களே அழகும் வளப்பும் இங்கு மெருகூட்டுகிறது.

விருது பெற வந்திருக்கக் கூடிய அத்தனை பேரும் பெரும் விருட்சங்களே.

தான் தோன்றிய மரங்கள். உயர்ந்து நின்று சிறப்பாக நிழல் பரப்பி எப்பொழுதும் சுவையான கனி கொடுக்கும் இந்த மகா விருட்சங்களை நான் காடுகளாகவே பார்க்கின்றேன். ஒரு காட்டின் நடுவில் அமர்ந்திருக்கின்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது.

கிளிநொச்சி குமரித் தமிழ்ப்பணி மன்றத்தினர் இந்த பெரிய மரங்களுக்கும் விருட்சங்களுக்கும் கௌரவிப்பு வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றனர் என்றார்.


**பொருட்கொள்வனவு அறிவித்தல்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்**

N- 45

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் இந்தியாவின் உற்பத்தியாளர்கள் (இந்திய கிரடிட் லைன் நிறுவனத்தினால் நிதியளிக்கப்படுவதினால்) அல்லது அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில், விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**White Printing Paper-17"-60 GSM**

| | |
|---|---|
| Material | : White Printing Paper |
| Quality | : Wood Free & Surface Sized |
| Substance | : 60 ± 2.5% GSM |
| Width | : 17" |
| Quantity Required | : 300 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : S.I. 2022/09 |
| Bid Fee | : Rs. 19,000.00 |

**White Printing Paper-30"x40"-70 GSM**

| | |
|---|---|
| Material | : White Printing Paper |
| Quality | : Wood Free & Surface Sized |
| Substance | : 70 ± 2.5% GSM |
| size | : 30"x40" |
| Quantity Required | : 100 ± 10% Metric Tons |
| Bid Reference No. | : S.I. 2022/14 |
| Bid Fee | : Rs. 9,000.00 |

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2022.05.11.ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலை மனுக்கள் திறக்கப்படும்.

**Pre-bid meeting- 2022.04.26 ஆந்திகதி மு.ப 11.30 மணிக்கு இல.118,டனிஸ்டர் டி சில்வா மாவத்தை கொழும்பு 08. இல் அமைந்துள்ள அரச அச்சுத்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.**

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்துடன், அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்தியதினம் பி.ப.2 மணிக்கு முன்னதாககிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிவரை உரிய விலை மனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை, கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருட்கொள்வனவுக் குழுத் தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளங்கள்: www.documents.gov.lk**
**2022.04.08**



**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**ஏல விற்பனை**

**இலகுவில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு விற்பனை**

**ஏல விற்பனைத் திகதி: 2022.04.20 ஆம் திகதியன்று**

எனது இல.: **LD/S/SLPA/2022/03/PC-05,06 LD/S/SAGT/2022/03/PC-04**

கொழும்புத் துறைமுக பண்டாரநாயக்க வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2022.04.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக SAGT & JCT திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ள (இந்திய வெள்ளை அரிசி, புதிய வெலன்ஷியா தோடம்பழங்கள்) ஆகியவற்றை அடக்கியுள்ள தடையகற்றப்படாத எளிதில் அழிந்துபோகக்கூடிய கப்பற் சரக்கு கொள்கலன்கள் மேற்குறிப்பிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

2022.04.19 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து மு.ப. 10 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக பெசேவ உடனான 1,000 ரூபாவை செலுத்திய பின்னர் கொழும்பு - 01, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் திறந்தவெளியின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் ஒரு நிறுத்த (One stop) ஆவணமாக்கல் நிலைய லொஜிஸ்டிக்ஸ் பிரிவின் விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏல விற்பனை ஆவணங்கள் மற்றும் உட்செல்லல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்களை சமர்ப்பிக்க ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படும் தொகையாக 200,000/= ரூபாவை செலுத்துதல் வேண்டுமென்பதுடன் அப்படியான விலைமனுக்களுக்கு மாத்திரமே ஏலத்தில் பங்கு பெறுவதற்கான அனுமதி வழங்கப்படும்

2022.04.19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் உரித்தான திறந்த வெளிகளில் விற்பனைக்கு பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளை பரீட்சிக்கலாம்.

**www.slpa.lk** என்ற இணையத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)**
**19.04.2022**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**


# எந்தவொரு அமைச்சு பொறுப்பையும் தற்போதைய நிலையில் ஏற்கமாட்டேன்

### எனக்கு பல தடவைகள் அழைப்பு வந்தன என்கிறார் இஷாக் எம்.பி

( கல்நேவ தினகரன் விசேட நிருபர்)



அமைச்சு அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை ஏற்கும்படி ஐந்து தடவைகளுக்கு அதிகமாக அரச மேல் மட்டத்திலிருந்து அழைப்பு வந்தது. நாட்டின் தற்போதைய நிலைகருதி அதனை ஏற்பதனை நிராகரித்துவிட்டேன். காலிமுகத் திடலில் இளைஞர்கள் முன்னெடுக்கும் போராட்டத்தையும் நான் ஆதரிக்கின்றேன் என அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை சம்பந்தமாக நேற்று (18) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

20 ஆவது யாப்பு சீர்திருத்ததை ஆதரித்த எம் ஏழு பேரில் இருவருக்கு அமைச்சரவை அமைச்சு பதவிகளும், மேலும் இருவருக்கு இராஜாங்க அமைச்சு பதவிகளும் தருவதாக அரசாங்க உயர் மட்டத்திலிருந்து பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் நாம் அதனை நிராகரித்தோம்.

அமைச்சுப் பதவிகள் மற்றும் அரசாங்கத்தின் சுகபோகங்களை விட மக்களின் இன்றைய நிலைமை தொடர்பிலேயே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம் எனவும் அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மேலும் தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினரான ஹாபிஸ் நஸீர் அஹமட் அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளமை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானிடம் வினவிய போது, ஹாபிஸ் நஸீர் அஹமட் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் இங்கு தெரிவிக்க விரும்பவில்லை என தெரிவித்த அவர், நாங்கள் ஏழு பேரும் எந்த அமைச்சுப் பொறுப்புகளையும் ஏற்பதில்லை என்றே முன்னர் தீர்மானித்திருந்தோம் என்றும் தெரிவித்தார்.

மேலும், இப்போது எழுந்துள்ள இவ்வாறான நிலைமையில் ஏனையோர் தொடர்பில் என்னால் எந்தக் கருத்துகளையும் தெரிவிக்க முடியாத நிலையில் கூட, எனது தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை. எதிர்காலத்தில் கூட எந்த அமைச்சுப் பொறுப்பையும் நான் ஏற்கப் போவதில்லை என்பதனை உறுதியாக தெரிவித்துக் கொள்ள விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். மேலும்,

நான் எப்போதும் எனக்கு வாக்களித்த மக்கள் பக்கமே இருப்பேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெலிகம பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எவரும் இல்லாத சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வீட்டினுள் புகுந்து ஒழிந்திருந்து இரவு நேரங்களில் அவர்களது கைவரிசையை காட்டி வருகின்றனர். இவ்வாறு பலவீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுள்ளன.

பணங்கள், தங்க ஆபரணங்கள் போன்றவைகளே இவ்வாறு திருடப்படுகின்றன.

மேலும் வீதியோரங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் துவிச்சக்கரவண்டிகளும் திருடப்பட்டுள்ளன. இது விடயமாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

எனினும் சகலரும் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் இருந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வீட்டில் ஆண்கள் இல்லாத சமயம் வீட்டின் கதவுகளை மூடிக்கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர். சந்தேகத்துக்கிடமாக நடமாடும் நபர்கள் மீதும் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

## பெயர் மாற்றம்

கொழும்பு-13, வுல்பெண்டல் வீதி, 185/9 ஐ சேர்ந்த மொஹமட் ஸமான் ஆகிய நான் எனது பிறப்புச் சான்றிதழில் தந்தையின் பெயர் விடுபட்டுள்ளது. எனவே கனபதி ரவிச்சந்திரன் எனும் பெயரைச் சேர்த்து எனது பெயரை கனபதி ரவிச்சந்திரன் மொஹமட் ஸமான் என மாற்றம் செய்துள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

**- கனபதி ரவிச்சந்திரன் மொஹமட் ஸமான்**

## O⁺ இன ஈரல் பகுதியொன்று வழங்குவதற்கான ஒருவர் தேவை (பரித்தியாகம் செய்யப்பட்ட ஈரல் பாகமானது குறுகிய காலத்துள் வளரும்.

0772001262

## ஒருங்கிணைப்பு அறிவிப்பு

2007 கம்பனிச்சட்டம் 7 இன் 9(1) சட்டத்திற்கமைய, இலக்கம் 52/3, முதலாம் தெரு ராஜகிரிய, ராஜகிரிய வீதி, சிறீ ஜயவர்தனபுர, சிறீ ஜயவர்தனபுர கோட்டை என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள பென்டா லங்கா எக்ஸ்பிரஸ் பிரைவட் லிமிடெட் (கம்பனி இல:PV,00252507), 2022 ஆம் ஆண்டு ஜனவரி 31ம் திகதியன்று 2007 கம்பனி சட்டம் இலக்கம் 7 இன் பகுதி 5 இற்கமைய வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் வரையறுக்கப்பட்ட கம்பனியாக இணைக்கப் பட்டது.

**நிபுனி பெரேரா**
**(SEC/IND(1)b(i)/2021/11996)**

## அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2021 மார்ச் 08 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு 2022 ஏப்பிரல் 26 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
|---|---|
| 2022 மே 07 – மு.ப. 10.00 | **வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்** இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>**நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்** இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

சிரேஷ்ட உப தலைவர் / பிரதம செயற்பாட்டு அதிகாரி
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk

ICRA லங்கா ரேட்டிங் [SL] AA- (ஸ்திரம்), ்பிச் ரேட்டிங் A+ (lka) ஸ்திரமான தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு

## விலைமனுக்கோரல் அறிவித்தல்

**மாவனல்லை பிரதேச சபைக்கு உரித்தான சொத்துக்களை குத்தகைக்கு வழங்குதல்**

2022 மே மாதம் முதல் 2022.12.31 ஆம் திகதி வரையிலான காலத்திற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- விலைமனுப் பத்திரங்களை வழங்குதல் - 2022.04.19 ஆம் திகதி முதல் 2022.05.10 ஆம் திகதி பி.ப.2.30 வரை
- விலைமனுப் பத்திரங்களை கையேற்றல் - 2022.05.11 ஆம் திகதி மு.ப. 10.00 வரை
- விலைமனுப் பத்திரங்களை திறத்தல் - 2022.05.11 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். குறித்த நிகழ்விற்கு விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்து மூலமான அதிகாரமளிக்கப்பட்ட முகவரொருவருக்கு பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திர கட்டணம் - 1000.00

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | விலைமனுக்கோரும் இடத்தின் பெயர் | குறைந்த வருடாந்த கேள்வி விலை | மீளச்செலுத்தும் விலைமனு வைப்புத் தொகை | மீளச்செலுத்தாத விலைமனு வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | ஹிஜ்ராகம மாட்டிறைச்சிக் கடை | 1380000.00 | 69000.00 | 5000.00 |

விலைமனுப் பத்திரங்களை உரிய நேரத்திற்கு முன் மாவனல்லை பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் அல்லது “தவிசாளர், பிரதேச சபை, மாவனல்லை” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு**
**T.P - 035-2246275**

**2022.04.18 ஆம் திகதி**
**மாவனல்லை பிரதேச சபையில்.**

**R.P.N தஸந்த ஸ்டிவன்,**
**தவிசாளர்,**
**மாவனல்லை பிரதேச சபை**

## 2011 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதி மோசடிகளைத் தடுக்கும் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இலக்கம் 274/197, துருலிய உயன ஹோமாகம என்ற முகவரியில் வசிக்கும் சஹன் சந்தருவன் உடுகம்பல என்பவரின் பெயரில் பதிவுசெய்யப் பெற்றுள்ள, காலி உயர் நீதிமன்றத்தின் எஸ்.பி.எல் 01/2022 என்ற வழக்கின் PI எனக் குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க் குறிப்பிடப்படும் காணி மற்றும் அதனுடன் இணைந்துள்ள, அனைத்து ஆதனங்களும், எவர் ஒருவருக்கேனும் விற்பனை செய்தல், ஒப்படைத்தல் அல்லது வேறு ஏதேனும் நடைமுறைகளை மேற்கொள்ளல்களைத் தடைசெய்யும் முகமாக 2011 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட, 2006 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதி மோசடிகளை தடைசெய்யும் சட்டத்தின் 8(2) ஆம் சட்டத்தின் பிரகாரம், கௌரவ உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 2022.02.07 முதல் 03 மாதங்களிற்கு அமுலாகும் வண்ணம் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திரு.உதயசான்த தடல்லகே என்பவரினால் 2018.12.19 அன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட பக்க இலக்கம் S142/162 இன் கீழ் 2019.01.04 அன்று காலி காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பெற்றுள்ள இலக்கம் 1037 என்ற உறுதி

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே, ஹபராதுவ பிரதேச செயலகப்பிரிவின், ஹபராதுவ பிரதேச சபை அதிகாரப்பிரிவில், மொரம்பிட்டிகொட கிராம அலுவலர் பிரிவின் ஹபராதுவயில் அமைந்துள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் திரு.ஏ.வீரசிங்ஹ என்பவரினால் 2018.12.18 அன்று அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 3063 உடைய வரைபடத்தின் நிருபித்த, பெலிகஹவத்த என்ற காணியின் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1 என்ற காணித்துண்டின் வடக்கில் ரத்மஹல் தெனியவத்த என்றழைக்கப்படும் பக்மீகஹகும்புர மற்றும் புஞ்சி வெலிபொத்தே கொரட்டுவ மற்றும் மஹவெலிபொத்தவும் கிழக்காக - பிரதான வீதியிலிருந்து ஊருக்குச் செல்லும் வீதியும், தெற்காக - வீடுகளிற்கு செல்லும் வீதியும், மேற்காக - புஞ்சி வெலிபொத்தே கொரட்டுவ மற்றும் மஹவெலிபொத்தவும் போன்ற குறிப்பிடப்பட்ட எல்லைகளிற்குள் அமைந்தள்ள ரூட் 01, பேர்ச் 3.5 விஸ்தீரணமான காணி

www.adz.lk
it's what you want

## விவசாயத் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

# பெறுகை அறிவித்தல்

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் விடயம் தொடர்பான கேள்வி கோரப்படுகின்றது

| S.No | Bid NO | DETAILS | Qty | Bid Security Amount | Non Refundable fee Rs | Bid Security Validity Period | PROGRAMME |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | GOSL/EP/25/PRO/ Agr i. Seeds(Red Onion) /2022 - 01 | Red Onion Seed Bulb | 34,800Kg | 100,000.00 | 2,000.00 | 16.08.2022 | Line Ministry |

1. பெறுகை ஆவணங்களினை **19.04.2022** ஆம் திகதியிலிருந்து **05.05.2022** ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரை திருகோணமலை கன்னியா வீதி, வரோதய நகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக இலங்கை வங்கி திருகோணமலை பிரதான கிளையில் (கிளை இல.006) மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம் ,என்ற பெயரில் கணக்கு இலக்கம் **0005849161** இற்கு மீளச்செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.**2,000.00** இனை தலா ஒவ்வொரு ஆவணத்திற்கும் செலுத்த வேண்டும்
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு **06.05.2022** ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, விவசாயத் திணைக்களம், கிழக்கு மாகாணம், கன்னியாவீதி, வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது கையால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடதுபக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே (06.05.2022) மு.ப. 10.31 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை கன்னியாவீதி, வரோதயநகரில் அமைந்துள்ள கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.
4. இவ்விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்ட ஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை கன்னியாவீதி,வரோதயநகர், திருகோணமலை கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைபேசி : 026-2222665/026-2223077**
**தொலைநகல் : 026-2222153**

**Dr. S.M.ஹுசைன்**
**மாகாணப் பணிப்பாளர்,**
**விவசாயத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**கன்னியாவீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

# Invitation for Bids (IFB)

## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA, VAVUNIYA DISTRICT

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)

**PROJECT ID : P 163305**

(1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

(2) The Chairman, Local Authority Procurement Committee(LAPC), on behalf of **Vengalacheddikulam Pradeshiya Sabha**, Vavuniya District now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs.Mn) | ICTAD Minimum Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | LDSP/NP/VN/ VCKPS/2022/PT2/01 | Improvements to Ganthinagar 5th Cross Street to Katkarankulam School near Road (0.000-0.350 km) | 4.36 | C8 | 44,000 | 17.08.2022 | 91 days |

(3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

(4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have valid CIDA registration in Highway Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

(5) Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Schedule in the Bidding Document.

(6) Interested bidders may obtain further information from **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachiya Road, Cheddikulam, Vavuniya** [Telephone No: 0242260914, 0242260055 Fax No: 0242260913] and inspect the bidding documents at the address **Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar- Madawachiya Road, Cheddikulam, Vavuniya from 09.00 Hrs to 15.00 Hrs on working days.**

(7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachiya Road, Cheddikulam, Vavuniya** from **19.04.2022 until 17.05.2022** from **09.00 Hrs to 15.00 Hrs on working days** upon payment of a non refundable fee of **Three Thousand Rupees. (Rs.3,000.00)for work**. The method of payment will be **by cash.**

(8) Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachiya Road, Cheddikulam, Vavuniya on or before 18th May 2022 at 14.00 Hrs**. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

(9) Bids shall be valid up to **20th July 2022.**

(10) All bids shall be accompanied by a *"Bid-Security"*, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above, shall be same as Schedule Clause 16.

(11) The pre-bid meeting will be held on **04.05.2022** at **10.30 Hrs** at the **Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Madawachiya Road, Cheddikulam, Vavuniya.**

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC).**
**Vengalacheddikulam Pradeshiya Sabha,**
**Mannar - Madawachiya Road,**
**Cheddikulam,**
**Vavuniya. [Fax No: 0242260913]**

19.04.2022

# Invitation for Bids (IFB)

## VAVUNIYA SOUTH TAMIL PRADESHIYA SABHA VAVUNIYA DISTRICT

## *LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT (LDSP)*

(1) The Democratic Socialist Republic of Sri Lanka has received a loan from the World Bank (WB) towards the cost of the Local Development Support Project (LDSP). Part of this loan will be used for payments under the contract named below.

(2) The Chairman, Local Authority Procurement Committee (LAPC), on behalf of **Vavuniya South Tamil Pradeshiya Sabha**, Vavuniya District now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S.No. | Contract No. | Name of the Contract | Estimated Civil Cost (Rs.Mn) | ICTAD Minimum Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| Package -1 | LDSP/NP/ VN/VSTPS/ 2022/PT2-1 | Improvements to Balavinayahar Road at Thavasikulam (140m) | 1.81 | C8 | 36,500.00 | 2022.08.17 | 91 days |
| | | Improvements to Muthumari Amman Road at Maharambaikkulam (140m) | 1.81 | | | | |
| | | Total | **3.62** | | | | |

(3) Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

(4) To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have valid CIDA registration in Building Construction for the Grade mentioned in the table above and possess valid business or company registration.

(5) Qualification requirements to qualify for contract award are given in Section 5 of the Bidding Data in the Bidding Document.

(6) Interested bidders may obtain further information from Chairman, Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road, Nelukulam, Vavuniya [Telephone No: 024 - 2225737 Fax No: 024 - 2050067] and inspect the bidding documents at the address **Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road, Nelukulam, Vavuniya from 09.00 Hrs to 15.00 Hrs on working days.**

(7) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road, Nelukulam, Vavuniya** from **19.04.2022 until 17.05.2022 from 09.00 Hrs to 15.00 Hrs**. upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees. (Rs.3,000.00) for the work**. The method of payment will be **by cash.**

(8) Bids shall be delivered in duplicate to the address at **Chairman, Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road, Nelukulam, Vavuniya on or before 18th May 2022 at 14.00 Hrs**. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

(9) Bids shall be valid up to **20th of July 2022**

(10) All bids shall be accompanied by a *"Bid Security"*, as mentioned in the table above. Bid Security shall be valid up to the date mentioned in the table above.

(11) The pre-bid meeting will be held on **04.05.2022 at 10.30 Hrs at the Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road, Nelukulam, Vavuniya.**

The address (es) referred to above is (are):

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC).**
**Vavuniya South Tamil Pradeshiya Sabha, Neriyakulam Road,**
**Nelukulam,**
**Vavuniya.**

**[Fax No: 024 - 2250067]**

# மியன்டாட் விளையாட்டுக்கழக நிருவாக தெரிவும், இப்தார் நிகழ்வும்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் முன்னணி விளையாட்டுக் கழகமான சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவும், இப்தார் நிகழ்வும் கழகத்தின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பல அதிதிகளின் பங்குபற்றலுடன் சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலய மண்டபத்தில் சனிக்கிழமை (16) நடைபெற்றது.

இந் நிகழ்வின் ஆரம்பமாக 2022 ஆம் ஆண்டுக்கான நிருவாக சபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

இதன் போது கழகத்தின் தலைவராக ஏ.பாயிஸ் செயலாளராக யூ.கே.ஜவாஹிர் ,

பொருளாளராக ஏ.ஏ.எம். பார்விஜ் உட்பட 23 பேர் நிருவாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் நிகழ்வின் அங்கமாக கிரிக்கெட் போட்டிகளில் அண்மைக் காலங்களில் சிறந்த முறையில் பிரகாசித்த கழகத்தின் வீரர்கள் இதன் போது பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஒற்றுமையும் விட்டுக்கொடுப்பும் எனும் தலைப்பில் மௌலவி அப்துல் கரீம்,அவர்களும் நோன்பின் முக்கியத்துவம் பற்றி மௌலவி அப்துல்லாஹ் ஆகியோரினால் சன்மார்க்க சொற் பொழிவு இடம் பெற்றது .

# 3 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் மூன்று வருடங்களின் பின்னர் பிரீமியர் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியை அடுத்த மாதம் 7 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற சுப்பர் லீக்கில் விளையாடாத 14 கால்பந்து கழகங்களை இணைத்துக் கொள்ள இலங்கை கால்பந்து சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

அந்த 14 அணிகளும் லீக் முறையில் போட்டியிடுகின்றன, ஒரு அணி 13 எதிர் அணிகளுடன் போட்டியிட வேண்டும். அதிக வெற்றிகளைப் பெறும் அணிக்கு சம்பியன்ஸ் லீக் கால்பந்து சம்பியன்ஷிப்புடன் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்படும்.

கடைசியாக 2019 உதைபந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியில் இராணுவ அணி சம்பியன்ஷிப்பை வென்றதுடன் அவர்களுக்கு ரூபா 10 இலட்சமும் இரண்டாம் இடத்தைப் பெற்ற கொழும்பு உதைபந்தாட்ட கழகத்திற்கு ரூபா 7.5 இலட்சமும் பரிசாக வழங்கப்பட்டது.

சோண்டர்ஸ், நிகம்பு யூத், அனுராதபுரம் சொலிட், மாத்தறை விளையாட்டுக் கழகம், பேருவளை சுப்பர் சன், குருநாகல் பெலிகன்ஸ், ஜாவாலேன் மற்றும் நாவலப்பிட்டி கிறிஸ்டல் பலஸ் ஆகிய எட்டு அணிகள் இவ்வருட சம்பியன்ஷிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

மேலும், முதலாம் மற்றும் இரண்டாமிடங்களைப் பெற்ற இலங்கை பொலிஸ் மற்றும் செரண்டிப் விளையாட்டுக் கழகமும் அரையிறுதிச் சுற்றுக்கு மோதவுள்ள நிலையில், போட்டித் தொடரில் அரையிறுதிச் சுற்றுக்கு வந்த நியூஸ்டார் மற்றும் மொரகஸ்முல்ல ஆகியோருக்கும் வாய்ப்புகள் உள்ளன. ஏ பிரிவில் 3ஆம் இடத்தைப் பெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை உதைபந்தாட்ட அணியும், குழு B இல் 3ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் இந்தப் போட்டியில் விளையாடவுள்ளன.

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பான அணி முகாமையாளர்கள் மற்றும் தலைவர்களின் கூட்டம் புதிய வடிவம் மற்றும் விதிகள் குறித்து விளக்கமளிக்கும் வகையில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமரும் பங்குபற்றும் கழகங்களினால் எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண உள்ளார்.

உள்ளூர் வீரர்களைத் தவிர, பல வெளிநாட்டு வீரர்களும் இந்த விளையாட்டுக் கழகங்களில் பதிவு செய்து விளையாட அனுமதிக்கப்படுவதால், போட்டிகள் சூடு பிடிக்கும். சம்பியன்ஸ் லீக் என்பது இலங்கையின் கால்பந்தாட்டத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு போட்டியாகும், இது பாடசாலை வயதுடைய திறமையான இளம் வீரர்களுக்கு அதன் கதவுகளைத் திறக்கிறது.





## 44th OBSERVER SLT- MOBITEL

### மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ................................

வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐

தேசிய மட்ட வீராங்கனை : ................................

(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)

பாடசாலை : ................................

வாக்களித்தவர் பெயர் : ................................

முகவரி : ................................

மொபைல் இல. : ................................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 23-04-2022 இல. 04





# 'எக்ஸஸ்' முன்பள்ளி பாடசாலை சிறுவர்களின் விளையாட்டு விழா

(நீர்கொழும்பு தினகரன் நிருபர் )



முன்பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டல்களே சிறுவர்களின் எதிர்காலத்திற்கு என்றும் துணை நிற்கின்றன எனவும் கொவிட் 19 தொற்றுக்குப் பின்னர் சிறுவர்களின் விளையாட்டு விழாக்கள் எமது நாட்டில் படிப்படியாக மீண்டும் ஆரம்பமாகி வருகின்றன எனவும் புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அசோக பிரியந்த, நாத்தாண்டிய, கொட்டராமுல்ல பிரதேசத்தில் தெரிவித்தார்.

கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கொட்டராமுல்ல

'எக்ஸஸ்' முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் அசோக பிரியந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றிய போது

'கொவிட் 19 வைரஸ் தொற்று எமது நாட்டை மட்டுமின்றி உலக நாடுகளையும் பல்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்தின. இதனால் உலகில் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

சிறுவர்களின் திறமைகளை வெளிக் கொணருவதற்கான சந்தர்ப்பங்களும் இதனால் எமக்கு கிடைக்கவில்லை. இது மிகவும் துரதிஷ்டவசமாகும். கொவிட் 19 என்னும் கொரோனா வைரஸின் தொற்று படிப்படியாக எமது நாட்டை விட்டு நீங்கி வருகின்றது. இது எமக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. நாம் இன்று எமது பிரதேசத்தில் வசிக்கும் சிறுவர்களின் விளையாட்டு விழாவில் மிகவும் மகிழ்ச்சியாக கலந்து கொண்டு அவர்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை இரசித்து கொண்டு இருக்கின்றோம். சிறுவர்களின் விளையாட்டு விழாக்கள் அவர்களது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களாகும்.

இன்று அவ்வாறான சந்தர்ப்பம் எமது சிறுவர்களுக்கு கிடைத்துள்ளது. முன்பள்ளி ஆசிரியர்கள் சிறுவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை இன்றைய விழா எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனை நாம் இங்கு காண்கிறோம் 'என்று கூறினார்.

'எக்ஸஸ் 'முன்பள்ளி பாடசாலையின் அதிபர் ஜனாபா ஹம்ஸியாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் முன்னாள் நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினர் எச்.எம்.றம்ஸான், அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் இஸ்மத் மற்றும் பிரதேச கல்வியாளர்களும் கலந்து கொண்டனர் .

# றினோன் தொழில்சார் மகளிர் அணி வெற்றி





(வட கொழும்பு தினகரன் நிருபர்)

றினோன் தொழில்சார் மகளிர் அணியினருக்கும் பொரல்ல எம்.எச்.மொஹமட் விளையாட்டு மைதான மகளிர் அணியினருக்கும் இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் 12 அதிரடி கோல்களால் றினோன் தொழில்சார் மகளிர் அணியினர் பெரும் வெற்றியை சுவீகரித்தனர்.

இக் கால்ப்பந்தாட்டப் போட்டி பொரல்ல வனாத்தமுல்ல எம்.எச்.மொஹமட் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இலங்கையின் மகளிர் கால்பந்தாட்ட

அணிகளின் மத்தியில் பெரும் சக்தியைக் கொண்டதும் இலங்கை தேசிய மகளிர் அணியில் பிரதான வகிபாகம் கொண்ட வீராங்கனைகளை கொண்டதுமான கொழும்பு றினோன் தொழில்சார் மகளிர் அணியினர் இப் போட்டியில் 12 கோல்களைப் பெற்று மைதானத்தில் குழுமியிருந்த இரசிகர்களை வியக்க வைத்தனர்.

இப்போட்டியின் போது றினோன் தொழில்சார் மகளிர் அணியினரின் வீராங்கனைகள் மிக நுட்பமான வகையில் பந்தை பரிமாற்றம் செய்து விளையாடியமையால் அதன் எதிரணியான எம்.எச்.மொஹமட் விளையாட்டு மைதான மகளிர் அணி வீராங்கனைகள் தடுமாற்றம் அடைந்தனர்.

அதன் எதிரொலியாக றினோன் தொழில்சார் மகளிர் அணியின் வீராங்கனையான அஸ்சினி ஆசியரத்ன அபாரமான வகையில் விளையாடி தன் அணிக்கான மூன்று கோல்களைப் பெற்றார்.

அவரைத் தொடர்ந்து டபிள்யூ.எம்.கே. இனேஷா இரு கோல்களையும், டபிள்யூ. எம்.ஐ.அப்புகொட இரு கோல்களையும், எஸ்.தர்மிக்கா இரு கோல்களையும் றினோன் மகளிர் அணிக்கு பெற்று பேட்டியை உச்ச நிலைக்கு எடுத்துச் சென்றனர். இதே மகளிர் அணியின் யமுனா நிரஞ்சலா இலங்கக்கோன், ஜே.எம்.எஸ். சிரோஷனி

ஜயசேகர மற்றும் பிரியதர்ஷினி ஆகிய வீராங்கனைகள் தலா ஒவ்வொரு கோல்களையும் பெற்று றினோன் தொழில்சார் மகளிர் அணியை மொத்தம் பண்ணிரெண்டு கோல்களால் இப்போட்டியின் வெற்றியை கைப்பற்ற வைத்தனர்.

விசேட பருவகால முதலாவது மகளிர் அணிக்கான இப்போட்டியில் முதலாவது வெற்றியை சுவீகரித்த றினோன் மகளிர் அணியானது தன் அணியை எதிர்த்து விளையாடிய எம்.எச்.மொஹமட் விளையாட்டு மைதான மகளிர் அணியை ஒரு கோல்களையும் பெற முடியாத நிலையில் தோல்வி பெற வைத்தமை இப்போட்டியின் விசேட அம்சமாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.